ட்ராஃபிக் டிக்கெட்
ட்ராஃபிக் டிக்கெட்டால் சட்டப் பிரச்சனையா?
Small Claims Court இல் வழக்கு உள்ளதா?
வீட்டில் வாடகைக்கு வசிப்போருடன் சட்டப்பிரச்சனையா?
இது போன்ற சட்டப் பிரச்சனைகளுக்கும் அழையுங்கள்
"ட்ராஃபிக்" குமார் எனும்
வினோத் குமார்
Licensed Paralegal
Mobile: 647-667-6034
Landline: 1-866-541-3966
Precision

29 வது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416-282-8059
Fax: 416-286-0334
email: vlambaram@sympatico.ca
info@vlambaram.com
web: vlambaram.com
tamilvanakkam.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221

நதி: 29 பாலம்: 05 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் MARCH 01, 2019

# வெனிசுவேலாவில் அரசியல் குழப்பம்!

கனடா உட்பட அமெரிக்க சார்புநாடுகளால் வெனிசுவேலாவிற்கு வழங்கப்பட்ட அத்தியாவசிய உணவு மற்றும் மருத்துவப் பொருட்கள் உட்பட்ட மனிதாபிமான உதவிகளை வெனிசுவேலா நாட்டின் ஜனாதிபதி நிக்கோலா மடுரோ (Nicolas Maduro) ஏற்க மறுத்துள்ளார். 600 Tonஇற்கு மேற்பட்ட அமெரிக்க உணவு மற்றும் மருத்துவப் பொதிகள் வெனிசுவேலாவிற்கு அருகில் கொலம்பியாவில் இருக்கும் Cucuta நகர உணவுக் களஞ்சியத்தில் தேங்கிக் கிடக்கின்றன.

நிக்கோலா மடுரோவின் அரசு சார்பு இராணுவம் இவ் மனிதாபிமான உதவிகள் வெனிசுவேலாவிற்கு கொலம்பியா மற்றும் பிறேசில் ஊடாகக் கொண்டுவரும் பாதைகளில் குவிக்கப்பட்டுள்ளன. இவ் உதவிகளை வெனிசுவேலாவிற்குள் கொண்டுவர விரும்பும் நிக்கோலா மடுரோவின் ஆட்சிக்கு எதிரானவர்கள் மீதும், உணவு மற்றும் மருந்துகள் கொண்டுவரும் பாரிய வண்டிகள் மீதும் இராணுவம் கண்ணீர் புகைக் குண்டுகள் பிரயோகம் உட்பட பல எதிர்ப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. 2018 பெப்ரவரி 23இல் நடைபெற்ற இந்த எதிர்ப்பு நடவடிக்கையால் இருவர் இறந்தும் 300இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தும் உள்ளனர்.

வெனிசுவேலாவை கொலம்பியாவுடன் இணைக்கும் இரண்டு மிகப்பெரிய பாலங்களில் அரச எதிர்பாளர்களுக்கும் இராணுவத்திற்கும் இடையே கலவரங்கள் நடைபெறுகின்றன. அரச எதிர்ப்பாளர்கள் மூன்று பாரவண்டிகள் நிறைந்த உணவுப் பொதிகளை வெனிசுவேலாவிற்குள் இந்தப் பாலங்கள் வழியால் கொண்டுவர முயன்ற போது அரசபடைகள் அவற்றின்மீது எரி பொருள் ஊற்றி தீவைத்தனர். பாரிய புகைக்கு மத்தியில் வினாகிரி நனைக்கப்பட்ட துணிகளால் முகத்தை மூடியிருக்கும் அரச எதிர்பாளர்கள் எரியும் பாரவண்டிகளில் இருந்து உணவுப் பொதிகளை இறக்கி திரும்பவும் கொலம்பியாவிற்குள் கொண்டு சென்றனர்.



Nicolas Maduro

கொலம்பியாவின் Cucuta நகரிற்கும் வெனிசுவேலாவிற்கும் இடையில் உள்ள Tienditas பாலத்தில் அரச எதிர்பாளர்களையும் மனிதாபிமான உதவிப் பொருட்களை ஏற்றிக் கொண்டு வந்த பாரவண்டிகளையும் திருப்பி அனுப்பிய பின்னர் வெனிசுவேலா அரசு ஆதரவு இராணுவம் அந்தப் பாலத்தை பாரிய கொள்கலன்கள் மற்றும் பாரிய எண்ணைத் தொட்டி வாகனங்களால் அடைத்துள்ளது.

கனடா உட்பட மேற்குலக நாடுகளும் மற்றும் இலத்தீன் அமெரிக்க நாடுகளும் வெனிசுவேலா நாட்டின் ஜனாதிபதி நிக்கோலா மடுரோவை தீவிரமாக விமர்ச்சித்து வருகின்றன. அவரது ஆட்சியில் ஜனநாயக மற்றும் மனித உரிமை மீறல்கள் அதிகம் நடப்பதாகக் குற்றம் சாட்டுகின்றன.

உலகிலேயே அதிகூடிய எண்ணை இருப்புக்களைக் கொண்ட நாடான வெனிசுவேலா 1999ஆம் ஆண்டில் இருந்து 2013ஆம் ஆண்டுவரை Hugo Chavezஇனுடைய சோசலிச அரசால் ஆளப்பட்டு வந்தது. அவரது மறைவுக்குப் பின்னர், மசகு எண்ணெயின் விலை சரியத்தொடங்கியது. அதனால் வெனிசுவேலாவின் பொருளாதாரம் படுமோசமாக வீழ்ச்சி அடைந்தது.

2013 மார்ச் இல் வெனிசுவேலாவை 14 வருடங்கள் ஆட்சிசெய்த Hugo Chavez புற்றுநோயால் தனது 58ஆவது வயதில் இறந்தபின்னர் 2013 ஏப்பிரலில் நடைபெற்ற தேர்தலில் நிக்கோலா மடுரோ ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். வெனிசுவேலாவின் அரசியல் சட்டப்படி ஜனாதிபதியின் பதவிக்காலம் ஆறு வருடம்.

நிக்கோலா மடுரோவின் அரசு ஜனாதிபதித் தேர்தலை 2018 மே இல் நடத்தியது. அத்தேர்தலில் நிக்கோலா மடுரோ வெற்றி பெற்றாலும் கனடா உட்பட பல மேற்குல நாடுகள் அத்தேர்தல் ஜனநாயக முறைப்படி நடைபெறவில்லை எனவும் பல குளறுபடிகள் தேர்தலில் நடைபெற்றது எனவும் கூறி அத்தேர்தல் முடிவை ஏற்க மறுத்தன. இக்குற்றச்சாட்டுக்களை மறுத்த நிக்கோலா மடுரோ இரண்டாவது தடவையாக ஆறு

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்...)

Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc

Lexus of Richmond Hill
LEXUS
குமார் ஜெகசோதி
Tel. 905.883.8812
Cell: 416.451.0565
11552 Yonge Street
Richmond Hill, ON L4E 3N7
www.lexusrh.com
Kumar Jegasothy
Sales Consultant

Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPORTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY SELL INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR
416.888.7877
www.divhomes.com

TD Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah
416-889-1083
kannanhomes143@yahoo.com
HomeLife/Future Realty Inc.

DENTAL OFFICE
3351 Markham Road, Unit #129
Markham & Steeles
Tel: 416.609.2022
3150 Eglinton Ave East, Unit #5
Markham & Eglinton
Tel: 416.264.3232
Dentistry for children, adults and seniors
Dr. Iru Vijayanathan
BDS, FAGD, MFDS RCPS (Glasg.)
Monday to Saturday 10am to 8pm
Dr. Rashmi Jenojan
BDS, University Of London, UK

உவகை
மணமக்கள் இணைப்பு
Uvakai
Marriage Broker
Valvai Zagara
647.885.6104
email: uvakai100@gmail.com

JAFFNA COMFORT INC.
WE INSTALL ALL BRAND AC & Furnace. Gas line
REBATE Available
THEEPAN
TSSA Licensed Contractor
416-358-5240
647-300-8560

MORTGAGE
For all your Mortgage
We Deal with all banks
Any situations
NESAN 416-908-5656
Toll Free: 1-844-878-2721 Fax: 647-351-3099
mortgage@nesan.ca www.nesan.ca
MORTGAGE ALLIANCE
1585 Markham Rd, Unit #407A, Toronto, M1B 2W1
SUBRA MORTGAGES INC

வீடு வாடகைக்கு... வாங்க/ விற்க...
Rathiga Thillaivannan
Dir: 647.839.0079
rathiga24@hotmail.com
HomeLife/Future Realty Inc.
Bus: 905.201.9977



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அம்மா
# Amma Pawn Broker
## தங்கநகை அடைவு மாடம்



- ரொரன்றோவில் வர்த்தகத்துறையில் 25வது வருட வெள்ளி விழா காணும் நிறுவனம்
- உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் குறைந்த வட்டி வீதமும் தரும் ஒரே நிறுவனம்
- 5 நிமிடங்களில் உங்கள் கையில் குறைந்த வட்டியுடன் பணமும் பாதுகாப்பும் அளிக்கும் நட்பான சேவையுடன் கைராசியான நிறுவனம்.
- உங்கள் பழைய நகைகளை அதியுயர் பெறுமானத்திற்கு எம்மிடம் விற்றுக்கொள்ளலாம்

**1.5% முதல் 2% வட்டி மட்டுமே (per month)**

எவ்வளவு தொகையானாலும் மிக குறைந்த வட்டியுடன் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்

**அம்மா போல அம்மா பவுண் புறோக்கர்ஸ்**

நம்பிக்கை | நாணயம் | உத்தரவாதம்



உங்கள் முதலை மாதாமாதம் கட்டிக்குறைக்கலாம் உங்கள் கட்டுப்பணத்தை வங்கியினூடாகவும் செலுத்தலாம்.

கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்று முழுக் காப்புறுதி செய்யப்பட்ட முதன்மையான அடைவுசேவை

**416-757-0034, 416-994-3861**

**105A - 2425 Eglinton Ave, E, Scarborough**

ammapawnbroker@gmail.com

கடைக்குப் பின்புறத்தில் போதிய வாகனத்தரிப்பிட வசதிகள் உண்டு.

**Shankar & Co. விற்கு அருகாமையில்**

# Brand New Never Lived In 1 Bm Condo In pickering for Sale

ASSIGNMENT SALE $359900.00 ..... Occupancy closing May 2019

Brand New Never Lived In 1 Bm Condo In pickering for Sale
**Absolutely Stunning**Rarely Offered** In The Highly Anticipated San Francisco 3 Tower. Lavish , State Of The Art Recreation Facilities! Including Outdoor Pool, Hot Tub, Cabanas, Loungers And Fire Pits. Light Infused Lobby With 24 Hour Concierge. Fitness Area With Change Rooms And Sauna. <><>2 Mins To Pickering Go Station<><> And 401 Access, 4 Mins To Pickering Lake front-Marina, And Waterfront Trail, 5 Mins To Pickering Town Centre.

Broker protected.....
PATPUSH 416-894-1187



BRAND NEW CONDO APT



INDO SWIMMING POOL



OUT DOOR POOL



**WIN** BUY OR SELL THROUGH PAT in 2019 & WIN 1WEEK TRIP FOR TWO in CARIBBEAN** **WIN**



HOME SWEET LOAN



Century 21 Affiliate Realty Inc.
Brokerage*
416-290-1200

**Pat Pushpakanthan**
Broker
**416-894-1187**

MASTERS HALL OF FAME



5% Mortgage
TJT financial
Interest rate from
2.79%
416-894-1187



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமும் நமது இல்லமும் - 529

## 2018இல் புதிய ஆதன வியாபாரத்தில் 40% வீழ்ச்சி!



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

ரொறன்ரோ பெரும்பாகத்தில் 2018ஆம் ஆண்டில் 40%ஆன வியாபார வீழ்ச்சியை காணக்கூடியதாக இருந்தது. புதிதாகக் கட்டப்பட இருந்த அடுக்குமாடி மனைகளிலேயே இந்த வீழ்ச்சி நிகழ்ந்துள்ளது.

அடமானக்கடனில் (Mortgage Rate) ஏற்பட்ட அதிகரிப்பு, அடமானக்கடன் பெறுவதில் ஏற்படுத்தப்பட்ட இறுக்கமான சூழ்நிலைகளே இதற்கு காரணமாக உள்ளதாகத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. சராசரி 40%ஆக இருந்த போதிலும் தனி வீடுகள் (Detached House), இரு சேர் வீடுகள் (Semi Detached), பல சேர் வீடுகள் (Attached House) போன்றவற்றிலும் அதிக இறக்கம் ஏற்பட்டுள்ளது. இந்நிகழ்வு 2017 உடனான வியாபாரத்துடன் ஒப்பிடப்பட்டுள்ளது.

2017இல் 7,591 வீடுகள் (தனி, இருசேர், பலசேர் வீடுகள்) விற்கப்பட்டு இருந்தன. ஆனால் 2018இல் 3831 வீடுகளே விற்கப்பட்டு இருந்தன. ஏறக்குறைய 50% இறக்கமாகும்.

அண்மைக்காலக் கணக்குகளுடன் ஒப்பிடும் போது 2015ஆம் ஆண்டிலே ஆகக்கூடியளவு புதிய வீடுகள் விற்கப்பட்டிருந்தன. விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 19,570 ஆகக் காணப்பட்டது. இது கிட்டத்தட்ட 80% இறக்கத்தை 2018இல் ஏற்படுத்தியிருந்தது. குறிப்பாக அடமானக்கடன் பெறும் நிலையே இதற்கு முக்கிய காரணமாகும். இதனால் சகலதரப்பினரும் முதல் தடவை ஆதனம் வாங்குபவர்களுக்கு சிறப்பு சலுகை கொடுக்கவேண்டும் என மத்திய அரசைக் கேட்டுக்கொள்கின்றனர்.

2019ஆண்டு வர இருக்கும் புதிய வரவு செலவுத் திட்டத்தில் ஏதாவது நிவாரணம் கிடைக்கலாம் என எதிர்பார்க்கலாம் (?) குறிப்பாக முதல் தடவை வாங்குபவர்களுக்கு நிலமாற்று வரி, மற்றும் அடமானக் கடனை திருப்பி கொடுக்கும் கால அதிகரிப்பு போன்றவற்றை எதிர்பார்க்கலாம். புதிதாக நிர்மாணம் செய்ய இருக்கும் மனை, வீடுகள் சந்தையில் தேங்கியிருப்பதால் விற்கும் விலையிலும் இறக்கத்தைக் காணக்கூடியதாக உள்ளது. உதாரணமாக ஒசாவா (Oshawa) பகுதியில் விலை உச்சமாக இருந்த காலத்தில் வாங்கிய புதிய வீடுகளின் விலை $1 மில்லியனிலிருந்து $850,000 வரை குறைந்துள்ளது. சில பகுதிகளில் விலை மேலும் இறங்கியுள்ளது.

2018ஆம் ஆண்டு இறுதி மாதத்தில் விற்கப்படாமல் இருந்த வீடுகளின் எண்ணிக்கை 5081ஆக இருந்தது. இந்நிலைமை யூன் 2015 உடன் ஒப்பிடும்போது மிகவும் அதிகமாகும். இதேமாதத்தில் விற்கப்பட்ட வீடுகளின் சராசரி விலை $1.14 மில்லியன் ஆக இருந்தது. இது முந்தைய ஆண்டின் மாதத்துடன் (2017 December) ஒப்பிடும் போது 6.7% குறைவானது.



அடுக்குமாடி மனைகளின் நிலைமையும் இவ்வாறே காணப்பட்டது. 2017ஆம் ஆண்டே அதிகமான மனைகள் விற்கப்பட்டன (34,670). 2018ஆம் ஆண்டில் இந்தப் பெறுமதி 24,347 ஆகக்குறைந்து

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்...)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MORTGAGE


- ⇒ $35,000.00 வரை Personal Loan (பெர்சனல் லோன் ) தேவையா?
- ⇒ Private 1st & 2nd Mortgages தேவையா?- No Income Verification
- ⇒ மோட்கேஜ் பலன்ஸ் கட்டாது வீட்டினை பறி கொடுக்கும் நிலையில், அடுத்து என்ன செய்வதென யோசிக்கிறீர்களா?
- ⇒ Refinance / Renewal (ரிபைனான்ஸ் / ரினிவல்) செய்ய வேண்டுமா?
- ⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ் தேவையா?
- ⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா வேண்டுமா?

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல்**
**வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

**அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட்**
**தொடர்பான தேவைகளுக்கும் ...**

**நீங்களும் வெல்லலாம்**
**$100,000 ***
எம்மிடம் மோட்கேஜ் பெறுவதன் மூலம்.

MORTGAGE CLINIC



www.mortgageclinccanada.com

**உங்களுக்கு கை கொடுக்க காத்திருக்கிறது**

**416-613-2788 / 416-816-9011**



**ஜெ(Jey)இராசதுரை** MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage Agent/Real Estate Broker

**Cell : 416 - 624 - 4843**

RIGHT AT HOME REALTY INC.

**1504 Markham Road,**
**Toronto ON M1B 2V9**
**(Markham Road & HWY 401)**

MORTGAGE ALLIANCE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3 Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

*http://www.mortgagealliance.com/JeyRasathurai/minimize-your-mortgage-sweepstakes



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# காலதாமதம் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது!

**- ஆதித்தன் -**

மன்னார் மனிதப் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட மனித எச்சங்களின் பரிசோதனை முடிவு வெளியிடப்படுவதில் ஏற்பட்டுள்ள தாமதம் மக்கள் மத்தியில் ஏமாற்றத்தையும் சந்தேகங்களையும் ஏற்படுத்தியுள்ளது. கடந்த 20ஆம் திகதி இந்தப் பரிசோதனை அறிக்கை வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், இதனை அறிவிப்பதற்கு காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

மனித எச்சங்களின் மாதிரிகள் தொடர்பான கார்பன் அறிக்கை உத்தியோகப்பூர்வமாக நீதிமன்றத்திற்கு வழங்கப்படும் வரையில், அறிக்கை தொடர்பான தகவல்களை வெளியிட முடியாதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட மனித எலும்புக்கூடுகளின் மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டு ஆறு பொதிகளாக்கப்பட்டு கடந்த ஜனவரி மாதம் 23ஆம் திகதி கொழும்பிற்கு எடுத்துச் சென்று மறுநாள் 24ஆம் திகதி விமானம் மூலம் அமெரிக்காவிற்கு கொண்டு செல்லப்பட்டது. 25ஆம் திகதி புளோரிடாவில் உள்ள ஆய்வுகூடத்தில் கார்பன் பரிசோதனைக்காக கையளிக்கப்பட்டது.

இதன் பரிசோதனைகள் நிறைவடைந்ததாக அறிவிக்கப்பட்டதன் பின்னர் அந்த அறிக்கையின் முடிவினை அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்தனர். குறித்த கார்பன் பரிசோதனை அறிக்கை, அகழ்வு பணிக்கு பொறுப்பான சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஸவினால் கடந்த 16ஆம் திகதி பீட்டா இணையத்தளத்தில் பிரவேசித்து பெறப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இதனை கடந்த 20ஆம் திகதி அவர் மன்னார் நீதிமன்றத்தில் ஒப்படைத்திருந்தார். அறிக்கை தொடர்பான விசாரணைகள் மன்னார் நீதவான் up. சரவணராஜா முன்னிலையில் இடம்பெற்றது. காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள், காணாமலாக்கப்பட்ட உறவினர்கள் சார்பாக நீதிமன்றில் முன்னிலையாகும் சட்டத்தரணிகள் ஆகியோர் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர். ஆயினும் அறிக்கை தொடர்பான தகவல்களை வெளியிட முடியாதென மன்னார் நீதவான் தெரிவித்தமை அனைவருக்கும் ஏமாற்றத்தையளித்தது.

மனித எச்சங்களின் மாதிரிகள் தொடர்பான கார்பன் அறிக்கை உத்தியோகப்பூர்வமாக நீதிமன்றத்திற்கு வழங்கப்படும் வரையில், அந்த அறிக்கை தொடர்பான தகவல்களை வெளியிட முடியாதென நீதிமன்றத்தால் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை, மன்னாரில் மீட்கப்பட்ட மனித எச்சங்களின் ஆறாவது மாதிரியிலிருந்து போதிய அளவான மரபணு பொருட்களைப் பிரித்தெடுப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால், குறித்த அறிக்கை இதுவரையில் வெளியிடப்படவில்லை என காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகம் தெரிவித்துள்ளது.

தற்போது குறித்த மாதிரியின் மேலதிக பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில், விரைவில் அதன் அறிக்கையும் நீதிமன்றிற்கும், சட்ட



வைத்திய அதிகாரி மற்றும், காணாமலாக்கப்பட்டோர் தொடர்பாக முன்னிலையாகும் சட்டத்தரணிக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கார்பன் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்ட ஐந்து மாதிரிகளின் பரிசோதனைகள் நிறைவுபெற்றுள்ளதாகவும், ஒரேயொரு மாதிரியின் பரிசோதனையே தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்ற போதிலும், நிறைவு பெற்ற ஐந்து மாதிரிகளின் பரிசோதனை முடிவிலிருந்தே மன்னார் புதைகுழியின் மர்மத்தை அறிந்துகொள்ள முடியும். ஒரேயொரு மாதிரியின் முடிவு வரவில்லை என்று கூறி இதனைத் தாமதப்படுத்துவது சந்தேகங்களையே ஏற்படுத்துகின்றது.

புளோரிடாவிலுள்ள ஆய்வு நிறுவனத்திலிருந்து உத்தியோகபூர்வமான பரிசோதனை அறிக்கை கிடைக்கப்பெறவில்லை என்றும், சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஸவினால் நீதிமன்றத்தில் கையளிக்கப்பட்ட ஆவணத்தைக் கொண்டு முடிவை அறிவிக்க முடியாது எனவும் நீதிமன்றம் அறிவித்துள்ளதை விமர்சிக்க முடியாதுதான். ஆனால், பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்ட மனித எச்சங்களின் ஆறு மாதரிகளில் ஒன்றினது பரிசோதனை முடிவு தாமதமாகின்றது என காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகம் கூறுவது பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் சந்தேகத்தையே ஏற்படுத்தியுள்ளது.

25ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் ஆரம்பமாகியுள்ள நிலையில் மன்னார் மனிதப் புதைகுழியின் எச்சங்களின் பரிசோதனை முடிவு பெரும் தாக்கங்களை ஏற்படுத்தலாம். இதன் காரணமாகவே பரிசோதனை அறிக்கை தாமதப்படுத்தப்பட்டுள்ளதாக காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் கூறுகின்றனர்.

இந்தப் புதைகுழி தமிழ் ஆயுதக்குழுக்களால் கொலை செய்யப்பட்டவர்களினதாக இருக்கலாம் என்று தென்னிலங்கை அரசியல்வாதிகள் சிலரால் தெரிவிக்கப்பட்டு வந்தது. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் சந்தேகத்துடனேயே சில கருத்துக்களை வெளியிட்டிருந்தார். பரிசோதனை முடிவுகள் தமிழர் தரப்பிற்கும் அதிர்ச்சியளிக்கலாம் என அவர் குறிப்பிட்டிருந்தார். தமிழ் ஆயுதக் குழுக்களால் ஏற்படுத்தப்பட்ட மனிதப் புதைகுழியாக இது இருந்திருக்குமானால் இன்று பரிசோதனை முடிவுகள் வெளியிடப்பட்டு உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் ஒரு பரபரப்பான தகவலாக்கப்பட்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், சட்டவைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஸவிற்கு கிடைக்கப்பெற்ற ஆவணத் திலிருந்து அவருக்கு இதன் மர்மம் தெரிந்திருக்கும். வேறு சிலருக்கும் தெரிந் திருக்கலாம். அரசாங்கத்தின் உயர் மட்டத்திற்கும் தெரிந்திருக்கலாம். எனினும், முடிவுகளை நீண்ட நாள்கள் மறைத்து



வைக்க முடியாது. இன்னும் சில நாட்களில் உண்மைகள் பகிரங்கமாகும். இதில் குழறுபடிகள் ஏற்படாதவாறு தமிழ் மக்களின் பிரதிநிதிகளான அரசியல் வாதிகள் பார்த்து கொள்ள வேண்டியது அவர்களின் பொறுப்பாகும்

கடந்த ஐந்து மாதங்களாக புதைகுழியின் அகழ்வுப் பணிகள் தொடர்ந்தும்முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தோண்டத் தோண்ட மனித எச்சங்கள் வெளிவந்துகொண்டே இருக்கின்றன. இதுவரையில் 325இற்கும் மேற்பட்ட மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ள தாகத் தெரிவிக் கப்படுகின்றது.

இந்நிலையில், காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களில் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், முழுமையாகப் புதைகுழியின் அகழ்வுகள் நிறைவு பெற்றதன் பின்னரே பரிசோதனையின் முடிவை அறிவிப்போம் என்று கூறிவிடுவார்களோ என்ற ஐயத்தையும் அச்சத்தையும் எம்மிடம் வெளியிட்டார்.

13ஆம் ஆண்டில்
MAHAJANAN CONTEST 2019
விஷேட பரிசில்களும் வழங்கப்படும்.
contest.mahajanan.org
Sunday, March 03, 2019 @ 9:30am

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!
• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவின் பழங்குடியினரும் ஈழத்தமிழரும் – 44



குரு அரவிந்தன்

வடஅமெரிக்காவின் முதற்குடி மக்களில் ஒரு பகுதியினரான இன்யூட் இனத்தவரைப் பற்றிய பதிவுகள் ஐரோப்பியரின் வருகையைத் தொடர்ந்தே ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. இவர்களின் முன்னோர் சிறப்பாக இப்பகுதிகளில் வாழ்ந்ததாகவும், தூலி (Thule) இனத்தவரின் வழித்தோன்றல்களே கனடாவில் வாழும் இன்யூட் இனத்தவர் என்றும் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். கனடாவின் வடபகுதியில் இருக்கும் கிறீன் லாந்து என்ற தீவுதான் இவர்களின் கலாசாரத் தொடக்கம் என்பதை ஆய்வுகள் மூலம் கண்டறிந்ததாகத் தெரிகின்றது. ஒரு காலத்தில் கிறீன்லாந்து வைக்கிங் என்ற கடற்கொள்ளையரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. ஸ்கான்டிநேவியா என்று தற்போது அழைக்கப்படும் பகுதிகளில் இருந்து கிறீன்லாந்துக்குப் புலம்பெயர்ந்தவர்களே வைக்கிங்குகளாவர். முக்கியமாக நோர்வே, பின்லாந்து, சுவீடன் போன்ற பகுதிகள் இதற்குள் அடங்கும்.

கடற்கொள்ளையே இவர்களின் தொழிலாக இருந்தது. அவர்களின் கலாசாரம்தான் வட அமெரிக்காவின் வடபகுதிக்குக் கொண்டு வரப்பட்டதாகவும் ஆய்வாளர்கள் குறிப்பிடுவர். அவர்களின் வழித் தோன்றல்கள் தான் இன்யூட் இனத்தவர் என்றும் சொல்கின்றனர். இப்போதிருக்கும் இன்யூட் இனத்தவரின் கலாசாரம் காலப்போக்கில் மூன்று வகையான கலாசாரமாக மாறியிருந்ததால் இதை 'நியோ எஸ்கிமோ பண்பாடு' (They are Okvik/Old Bering Sea, Punuk, Birnirk, and then Thule culture) என்றும் குறிப்பிடுகின்றனர். எங்கள் பள்ளிப் பருவத்தில் 'எஸ்கிமோ' இனத்தவர் பற்றிப் படித்தது மட்டுமல்ல, அவர்களின் பனியால் கட்டப்பட்ட வீடுகளின் படங்களையும் பார்த்திருக்கிறோம்.

பனிக்குளிருக்குள் அவர்களால் எப்படி வாழ முடிகிறது என்றெல்லாம் நாங்கள் ஆச்சரியப் பட்டிருக்கின்றோம். இப்போது அவர்களை நேரடியாகச் சந்திக்கவும், அவர்களின் இடங்களைப் பார்க்கவும், அவர்களுடன் உரையாடவும் எங்களுக்குச் சந்தர்பங்கள் கிடைத்திருக்கின்றன. அவர்களோடு உரையாடியபோது பல விடயங்களை அறிந்துகொள்ள முடிந்தது. தங்களை எஸ்கிமோ என்று அழைப்பதை அவர்கள் விரும்பவில்லை. எனவே எஸ்கிமோ என்ற சொல்லை இப்போது பொதுவாக யாரும் பாவிப்பதில்லை.

வடஅமெரிக்காவில் வாழும் இன்யூட் இனத்தவர் வைக்கிங்குகளின் பரம்பரையாக இருக்கலாம் என்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டதால், வைக்கிங்குகளைச் சென்று பார்க்க விரும்பினேன். வைக்கிங்குகளின் பண்பாடுதான் வடஅமெரிக்க இன்யூட் இனத்தவரால் தொடரும் கலாசாரம் என்பதால் அவர்களைத் தேடிச் சென்றேன். பனிக்குளிரில் வாழமுடியாத சூழ்நிலையால் கிறீன்லாந்தைவிட்டு அவர்கள் முற்றாகப் புலம் பெயர்ந்து விட்டனர். எனவே அருகே இருக்கும் ஐஸ்லாந்தில் வைக்கிங்குகளின் பரம்பரையினரைச் சந்தித்து உரையாட முடிந்தது. ஐஸ்லாந்தில் அவர்களின் பண்பாட்டையும் இனங்காண முடிந்தது.




சென்ற இதழில் Okvik/Old Bering Sea, - Punuk, Birnirk ஆகிய கலாச்சாரம் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிட்டிருந்தேன். இந்த வாரம் தூலி கலாசாரம் பற்றி சிறிது குறிப்பிடலாம் என நினைக்கின்றேன். Classic Thule A.D. 1100 to 1400 ஆண்டுவரை தூலிக் கலாசாரம் இருந்ததாகத் தெரிகின்றது. இந்தக் காலத்தில் தூலிக்கலாசாரம் வடக்கு நோக்கியும், தெற்கு நோக்கியும் செல்லத் தொடங்கியது. ஹட்சன் நீரணைக் கரையோரம், ஹட்சன் குடாக் கரையோரம், பொக்ஷிபேசின், மக்கன்ஸி டெல்ரா தொடக்கம் மெல்வி குடாக்கரை வரையும் இவர்களது கலாசாரம் பரவியிருந்தது. குளிர்காலத்தில் அதற்கேற்ற வீடுகளிலும், கோடைகாலத்தில் கூடாரங்களிலும் இவர்கள் தங்கினர். ஐரோப்பியரின் வருகைக்கு முன்பாகவே உலோகத்தின் பாவனை இவர்களிடம் இருந்திருக்கிறது. மரங்களில் சிற்பம் செதுக்குவதற்கு உலோகத்தினால் செய்யப்பட்ட உளிகளை இவர்கள் பாவித்திருந்தனர்.

கி.பி. 900 தொடக்கம் கி.பி. 1100 வரையும் உள்ள காலத்தில் தூலி கலாசாரம் மேற்கு நோக்கி நகர்ந்தது. வீடுகளின் அமைப்பிலும் வேட்டையாடும் முறைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. உணவும், தண்ணீரும் கிடைக்கக்கூடிய இடங்களையே இவர்கள் தங்கள் இருப்பிடமாக மாற்றிக் கொண்டனர். குளிர்காலத்தில் அதிக தூரம் நடந்து செல்ல முடியாததால் சுற்று வட்டத்தில் கிடைத்த மிருகங்களையே உணவுக்காக வேட்டையாடினர். பனிக் குளிரில் நடந்து சென்று வேட்டையாடியவர்களுக்கு நாய்கள் இழுத்துச் செல்லும் சறுக்கு வண்டிகள் பாவனைக்கு வந்ததால் தூரமான இடங்களுக்குச் சென்று இவர்களால் வேட்டையாட முடிந்தது. திமிங்கிலங்களின் பெரிய எலும்புகளை எடுத்து அதன் மூலம் சறுக்கு வண்டிகளைச் செய்தனர். தங்களிடம் இருந்த வளர்ப்பு நாய்களைப் பழக்கி சறுக்கு வண்டிகளை இழுக்க வைத்தனர். அதற்குத் தேவையான கடினமான தோல்களைக் கரிபோ போன்ற வேட்டையாடப்பட்ட மிருகங்களின் தோல்களில் இருந்து எடுத்து கயிறு போலப் பாவித்தனர். குளிரைத் தாங்கக் கூடிய தோல்களை தங்கள் குளிராடைகளாகப் பாவித்தனர். இக்காலகட்டத்தில் 'டோசெட்' கலாசாரம் மெல்ல மெல்ல அழிந்துபோக, தூலி கலாசாரம் தலை தூக்கியது.

11ஆம் நூற்றாண்டில் வைக்கிங்குகளுடன் இவர்களுக்குத் தொடர்பு இருந்ததாகவும் தெரிகின்றது. இக்கால கட்டத்தில் கடற்கொள்ளையரான வைக்கிங்குகள் கனடிய கரையோர மக்களுடன் தொடர்பு வைத்திருந்தனர். கிறின்லாந்து நோஸ் என்ற ழைக்கப்பட்டவர்கள் கனடிய கரையோர மக்களுடன் தொடர்பு வைத்திருந்ததாகப் பதிவுகள் தெரிவிக்கின்றன. கனடாவின் வடபகுதியில் வாழ்ந்தவர்களை வைக்கிங் குகள் 'Skraelings' என்று அழைத்தனர். கனடாவின் வடபகுதியில் இருந்த இவர்கள்தான் நாளடைவில் தூலி கலா சாரத்தைப் பின்பற்றியவர்களாக இருந் தனர். எந்தவொரு நவீன வசதிகளும் அற்ற அந்தக் காலத்தில் கடும் குளிரைப் பொருட்படுத்தாது இவர்கள் இப்பகுதிகளில் தொடர்ந்தும் தங்கள் வாழ்க்கையை கொண்டு சென்றது இன்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு நம்பமுடியாத ஒரு அதிசய நிகழ்வாகவே இருக்கின்றது.

கனடாவின் முதற்குடி மக்களில் ஓர் இனத்தவரான தூலி இனமக்களுடன் ஒப்பிடும் போது ஈழத்தமிழ் மக்களின் முன்னோர் எப்படி வாழ்ந்தனர் என்பதை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. காரணம் ஈழத்தமிழ் மக்கள் தங்கள் நாட்டில் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலை காரணமாக, அங்கு வாழமுடியாமல் புலம்பெயர்ந்தனர். இன்று கனடா நாட்டிற்குப் புலம்பெயர்ந்து, கணிசமான அளவு இந்த நாட்டில் வாழ்கின்றனர். வெப்பமான காலநிலையைக் கொண்ட ஒரு சிறிய தீவான இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்தவர்களுக்கு, வெய்யிலும் மழையும்தான் இவர்களுக்குப் பழக்கமான காலநிலையாக இருந்தது. தாயகத்தில் இவர்களுக்கு இரண்டுவிதமான காலநிலைகள் மட்டுமே இருந்தன. இவர்கள் வெய்யில் காலத்தைக் கோடை காலம் என்றும், மழைக்காலத்தை மாரி காலம் என்றும் அழைத்தனர். இலங்கையின் கரையோரத்தில் வாழ்ந்தவர்கள் உணவுக்காகக் கடல் உணவுகளையும், உள்பகுதியில் வாழ்ந்தவர்கள் மிருகங்களை வேட்டையா-டியும், காய்கறி, பழங்கள் போன்றவற்றையும் உணவாகக் கொண்டனர். கனடாவிற்கு வந்த மக்கள் அவர்களுக்குப் புதிய காலநிலையான பனிக்காலத்தையும் எதிர்கொள்ள வேண்டி வந்தது. ஆனாலும் நவீன வசதிகள் கனடாவில் கிடைப்பதால் முதற்குடி மக்கள் போல ஈழத்தமிழர் பனிக்குளிரை எதிர்கொண்டாலும், பனிக் குளிருக்குள் அவஸ்தைப் படவேண்டிய நிலை ஏற்படவில்லை.

ஈழத்தமிழ் மக்கள் வெப்பமான காலநிலை கொண்ட நாட்டில் வாழ்ந்ததால் தங்கள் ஆடையணிகளையும் அதற்கேற்ற மாதிரியே அணிந்தனர். செடி, கொடி, மரங்கள் எல்லாக் காலநிலையிலும் கிடைத்ததால் குழையாடைகளை அவர்கள் ஆதி காலத்தில் அணிந்தனர். இதைத் தளிராடை அல்லது தளிரணி என்றும் அழைத்தனர். நெற்பயிரில் இருந்து கிடைக்கும்

வைக்கோலையும், நாணல் புல்லையும், வாழை நார்களையும் ஆடை செய்வதற்குப்

(தொடர்ச்சி 33ஆம் பக்கம்...)

1st & 2nd MORTGAGES... that meets your needs
MORTGAGE ALLIANCE
Mortgage Alliance
1585 Markham Road, Unit 110,
Scarborough, ON. M1B 2W1
Tel 647-350-7050
• Commercial Mortgages.
• Construction Mortgages
• Secured Credit line
• Consolidate 1st, 2nd, 3rd mortgages
SAM SURENDRAN
Mortgage Broker Lic# 16002312
Direct: 647-922-5704
www. OKmortgages.ca

Corporate Office: Mortgage Alliance, 2005 Sheppard Ave. E. Suite 200, Toronto ON. M2J 5B4 Tel: 1-877-366-3487



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறப்பதும் மன்னிப்பதும் குற்றங்களுக்கான தீர்வாகாது

**- விகிர்தன் -**

இராணுவத்தினர் போர்க் குற்றங்களில் ஈடுபடவில்லை என்று கூறும் சிங்களத் தலைவர்கள், அரசியல்வாதிகள் இருக்கக் கூடியதாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குற்றச் செயல்கள் நடைபெற்றிருக்கலாம் என்ற கருத்தை வெளியிட்டிருக்கின்றார். கடந்த சில தினங்களுக்கு முன்னர் வடக்கிற்குப் பயணம் செய்த அவர் யுத்தம் நடைபெற்ற பிரதேசமான கிளிநொச்சியில் வைத்து இக்கருத்தை வெளியிட்டுள்ளார். உண்மையைப் பேசி, மனம் வருந்தி மன்னிப்புக்கோரி, நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டியது காலத்தின் தேவை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் மீதும் படையினர் மீதும் பல்வேறு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகின்றன. அவ்வாறு எந்தக் காலத்திலும் வழக்குகளை தாக்கல் செய்து கொண்டிருக்க முடியாது. இதற்கு முடிவை காண வேண்டும். தென்னாபிரிக்காவில் செய்ததை போன்று உண்மையை பேசி, மனம் வருந்தி, மன்னிப்பு கோரி, நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவம் போர்க் குற்றமிழைத்ததை பத்து வருடங்களின் பின்னர் உத்தியோக பூர்வமாகப் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஏற்றுக்கொண்டுள்ளார் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வரவேற்றுள்ளார். பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் கருத்து தொடர்பில் முதன்முதலாகக் கூட்டமைப்பின் சார்பில் இவ்வாறு கருத்து வெளிட்டவர் சுமந்திரனே. பிரதமர் ரணிலின் இந்தக் கருத்தின் மூலம் மட்டும் பாதிக்கப்பட்ட மக்கள் திருப்தியடையப் போவதில்லை என்பதை சுமந்திரன் போன்றோர் புரிந்துகொள்ள வேண்டும். அவசரப்பட்டு இவ்வாறான கருத்துக்களை வெளியிடுவது வெறுப்பூட்டும் செயலாகவே இருக்கும்.

29ஆவது ஆண்டு
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: சுகல் செல்லையா
விளம்பரமுகாமையாளர்: விஜய் செல்லையா
நிழற்படம்: கலா விஜயபாலன்
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.
Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 / FAX: 416-286-0334
e-mail: Vlambaram@sympatico.ca / info@vlambaram.com
Web: www.vlambaram.com / www.tamilcanadians.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

இதேவேளை, போர் ஒன்று நடைபெறும் போது, குற்றங்கள் இடம்பெறுகின்றமை இயல்பான ஒன்றாகும் என்றும் சுமந்திரன் குறிப்பிட்டிருப்பதும் தமிழ் மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

தொடர்ந்து போராட்டங்களில் ஈடுபட்டுவரும் காணாமலாக்கப்பட்டோரின் உறவினர் உள்ளிட்ட தமிழ் மக்கள் பிரதமரின் மறப்போம் மன்னிப்போம் என்ற கருத்திற்குத் தங்கள் கண்டனங்களை வெளியிட்டு வருகின்றனர். எனினும், கூட்டமைப்பின் சார்பாகப் பின்னர் வந்துகொண்டிருக்கும் கருத்துக்கள் வித்தியாசமானதாக அமைந்துள்ளன. பிரதமரின் மறப்போம், மன்னிப்போம் என்ற கருத்தை அடியோடு நிராகரிப்பதாகவும் சர்வதேச பொறிமுறை ஊடாக உண்மைகள் கண்டறியப்பட்டு, குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறியுள்ளார். போர்க் குற்றங்களை இரு தரப்பினரும் புரிந்தனர் என்று சொல்லிவிட்டு எவரும் தப்பிவிட முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். போர் விதிகளைப் பின்பற்றி நாட்டு மக்களைப் பாதுகாத்து போர் புரிய வேண்டும் என்று சுட்டிக்காட்டியுள்ள சம்பந்தர், இலங்கை அரச படைகள் அப்பட்டமான மனித உரிமை மீறல்களிலும், போர்க் குற்றங்களிலும் ஈடுபட்டதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார்.



அரச படைகளின் போர்க்குற்றத்தை ஒப்புக் கொண்ட பிரதமரின் கருத்தை வரவேற்கின்ற போதிலும், அவரின் மறப்போம் மன்னிப்போம் என்ற கருத்தை அடியோடு நிராகரிப்பதாகவும் கூறினார்.

இனப்படுகொலை மறக்கக் கூடிய விடயம் அல்ல. வரலாற்றை மறக்காமலிருந்தாலே மீண்டும் அவ்வாறான தவறுகள் இடம்பெறாமல் தடுக்க முடியும். ஆனால், மன்னிப்பதா இல்லையா என்பதை பாதிக்கப்பட்ட தமிழ் மக்களே முடிவு செய்ய வேண்டும் என ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தில் அமைச்சராகவுள்ள மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

இதே வேளை, மஹிந்த ராஜபக்ஸ ரணிலின் கருத்தை ஒரு காட்டிக்கொடுப்பு என வர்ணித்துள்ளார். ரணில் கூறிய கருத்தை அவர் தனது அரசியலுக்கான ஒரு பிரச்சாரமாக சிங்கள மக்கள் மத்தியில் கொண்டு செல்கின்றார். அவரின் சகோதரர் கோட்டாபயவும் அவ்வாறான வகையியே கருத்து வெளியிட்டுள்ளார்.

பிரதமர் ரணிலின் கருத்து இலங்கை அரசாங்கம் தனது போர்க்குற்றங்களை தானே ஒப்புக்கொள்ளும் செயற்பாடாகும். இதன்மூலம் பிரதமர் நாட்டிற்குத் துரோகம் இழைத்துள்ளார். சர்வதேசத்திற்கும் புலம்பெயர் தமிழருக்கும் பிரதமர் தனது வார்த்தைகளால் போர்க்குற்றம் தொடர்பாக தெளிவாகக் கூறியுள்ளார். இது நாட்டினைக் காட்டிக்கொடுக்கும் செயலுக்கு ஒப்பானது என எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஸ குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை சிங்கள மக்கள் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள் என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஸ தெரிவித்துள்ளார். "இறுதிப் போரின் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நான் இருந்தேன். எமது இராணுவத்தினர் எந்தச் சந்தர்ப்பத்திலும் போர்க்குற்றங்களில் ஈடுபடவில்லை. அவர்கள் மிகவும் நேர்மையுடன் நடந்தனர்" என்கின்றார் கோட்டாபய.



"எமது இராணுவத்தினரைக் காட்டிக் கொடுக்கும் வகையில் பிரதமர் ரணில் செயற்படுகின்றார். இதற்கான தண்டனையை தேர்தலின்போது அவர் எதிர்நோக்குவார். தெற்கு மக்கள் ஒருபோதும் அவரை மன்னிக்கமாட்டார்கள்" என்றும் கோட்டாபய தெரிவித்துள்ளார்.

இந்தக் கட்டத்தில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ள கருத்தையும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாகும். சர்வதேசத்தின் மத்தியில் இலங்கைக்கு களங்கம் ஏற்படக்கூடாதென்றால், போரில் குற்றம் புரிந்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என அவர் கூறியுள்ளார்.

இறுதி யுத்தத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவிருந்த கோட்டாபய ராஜபக்ஸ தயாரித்த நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்தியதாலேயே குற்றங்கள் இழைக்கப்பட்டதாக சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

இனப்பிரச்சினை என்று நாட்டில் எதுவும் இல்லை என்று இலங்கையில் ஆட்சிக்கு வந்த தலைவர்கள் சிலர் பகிரங்கமாகவே தெரிவித்திருக்கின்றனர். தமிழ் மக்களுக்குப் பிரச்சினைகள் உள்ளன என்றும் சில தலைவர்கள் கூறியிருக்கின்றனர். இந்த இரு வகையிலான தலைவர்களும் அவர்கள் கூறும் வார்த்தைகளால் வித்தியாசப்பட்டிருக்கின்றனரே தவிர செயற்பாடுகளில் ஒரே மாதிரியானவர்களாகவே இருந்துள்ளனர்.

இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை, தமிழ் மக்களுக்கு தனியான பிரச்சினைகள் என்று எதுவும் இல்லை நாட்டில் அனைவருமே ஒரே விதமாகத்தான் நடத்தப்படுகின்றனர். நாட்டைப் பிளவுபடுத்தும் வகையில் செயற்படும் தமிழ் பிரிவினரே இந்தப் பிரச்சினைகளை முன்வைக்கின்றனர் என்று கூறுகின்ற சிங்களத் தலைவர்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. அது அவர்களின் கொள்கைப்படி சரியானதாக இருக்கலாம். ஏனெனில், பிரச்சினைகளே இல்லை என்பவர்களிடம் எவ்வாறு தீர்வுகளை எதிர்பார்ப்பது?

ஆனால், பிரச்சினைகள் உள்ளன அவற்றிற்கு தீர்வு வழங்கப்பட வேண்டும் என்று கூறும் தலைவர்கள் தீர்வு தொடர்பில் செயற்பட வேண்டும். அவ்வாறானவர்களும் தீர்வுகளைத் தரவில்லை. ஆனால், பிரச்சினை உள்ளது என்பதை ஒப்புக் கொண்டதால் மட்டும் அவர்கள் நேர்மையான தலைவர்களாகி விட முடியாது.

இறுதி யுத்தத்தின்போது இராணுவ வீரர்கள் போர்க்குற்றத்தில் ஈடுபடவில்லை. ஆகையால் அவர்களை தண்டிப்பதற்கு ஒரு போதும் இடமளிக்கப்போவதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தற்போது தெரிவித்து வருகின்றார். இச்சந்தர்ப்பத்தில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க குற்றங்கள் நடைபெற்றுள்ளன என ஒப்புக் கொண்டுள்ளதனை வரவேற்கலாம். ஆனால், மறப்போம் மன்னிப்போம் என்று கூறி அதனையே இதற்கான தீர்வாக முன்வைப்பதை பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.


சர்வதேச உதவியுடன் இலங்கையில் போர்க்குற்ற விசாரணையை நடத்தி, இங்கு இடம்பெற்றது இனப்படுகொலையா இல்லையா என்பது தொடர்பில் ஆராய்ந்து கொள்ள வேண்டும். அதன் பின்னரே மன்னிப்புத் தொடர்பாக நாம் ஆராய முடியும் என முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் குறிப்பிட்டிருப்பதை இங்கு நாம் நடுநிலை கருத்தாகக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப வன்முறை

## நாடும் நடப்பும் - 04




சி. நற்குணலிங்கம்
நெல்லியடி - இலங்கை

குடும்ப வன்முறை அல்லது இல்லத்து வன்முறை என்பது மேலோட்டமாக நெருக்க முறையான உறவுக்கு உட்பட்ட ஒருவரினாலோ அல்லது இருவரினாலோ நிகழ்த்தப்படுகின்ற துர்நடத்தைப் போக்கு எனலாம். பெண்களுக்கு எதிராகப் பிரதான-மாக ஆண்களினால் நிகழ்த்தப்படும் அதிகார நடத்தையாக இல்லத்து வன்முறை பரவலாக வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது. இது உடல், உள ரீதியான பாதிப்புக்களை தோற்றுவிப்பதாக அமையலாம். குடும்பச்சூழலில் ஒருவர் மற்றவர் மீது அதிகாரத்தையும், கட்டுப்பாட்டையும் விதிக்கும்போது குடும்ப வன்முறை தோற்றம் பெறுகின்றது. கூடுதலாகக் கணவனால் மனைவி துன்புறுத்தப்படுவதே இங்கு குடும்ப வன்முறையாகின்றது. இது பெரும்பாலான குடும்பங்களில் காணப்படுகின்றது. அதுவும் குறிப்பாக கல்வி அறிவு குறைந்த, வறுமையான குடும்பங்களில் காணமுடிகின்றது. இவர்களது வீடு அமைதி இழந்த வீடாகவே காணப்படுகின்றது.

சமூக விஞ்ஞானிகளின் அண்மைக்கால ஆய்வுகளின்படி வீட்டினுள் இடம்பெறும் வன்முறை நடவடிக்கைகளினால் அதிகமாகப் பெண்களும், பிள்ளைகளுமே பாதிக்கப்படுகின்றனர். சிறு பராயத்தில் இல்லத்து வன்முறைக்கு உள்ளான பிள்ளைகள் பிற்காலத்தில் குற்றச் செயல்கள் புரிபவர்களாகக் காணப்படுகின்றனர். அவ்வாறான பிள்ளைகள் பெரியவர்களானதும் சமூகத்திலுள்ள ஏனையவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துகின்றபோது பல்வேறு வகையான பிரச்சனைகளை, பிணக்குகளை ஏற்படுத்திக் கொள்வதாக நிரூபிக்கப்பட்டுள்ளது. நான்கு பெண்களுக்கு ஒருவர் தமது வாழ்நாளில் குடும்ப வன்முறைக்கு ஆளாகின்றனர். குடும்ப வன்முறையினால் 85%மான பெண்கள் பாதிக்கப்படுகின்றனர். பெண் என்பவள் ஒரு குடும்பத்தில் முக்கிய அங்கம் வகிப்பவள். குறிப்பாக தன் குழந்தைகளின் அறிவுக்கும், பண்பாட்டுக்கும் அடித்தளம் இடுபவள். எனவே குடும்பத்தை வழிநடத்திச் செல்வதில் சிறந்த சாரதியாக இருக்கும் அவர்கள் மீதான வன்முறை மொத்தக் குடும பத்தையும் பாதிக்கின்றது.

இல்லத்தில் நாம் காணும் வன்முறைகள் பல. மதுபோதையில் வந்து வன்முறையில் ஈடுபடும் நிலை தற்போதைய குடும்பங்களில் அதிகமாகக் காணப்படுகின்றது. மனைவி அடித்துத் துன்புறுத்தப்படல், தந்தையால் அவரது பெண் பிள்ளை பாலியல் வன்புணர்வுக்கு, துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்படல், குடும்பத் துணைவிக்கு குடும்பத்தை நிர்வகிக்கப் போதிய பணம் கொடுக்காது தனது தேவையற்ற செலவுக்கு எடுத்துக் கொள்ளல், மனைவியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்துதல், வீட்டில் உரக்கக் கத்தி அவமரியாதை செய்தல், பயமுறுத்துதல், அச்சுறுத்துதல், வார்த்தைத் துன்புறுத்தல்



கள், உதைத்தல், தள்ளுதல், கடித்தல், குறைப் பிரசவத்தை ஏற்படுத்துதல், தனது பிள்ளை களை கொடுமைப்படுத்துதல், தற்கொலை புரியத் தூண்டுதல், சாதாரண காயம், படுகாயம் ஏற்படுத்துதல், ஆள் கடத்தல், இழிவுபடுத்தும் நடத்தை, ஆக்ரோசமாகத் திட்டித் தீர்த்தல் ஆகிய உடல், உள, உணர்வு ரீதியான பாதிப்புக்கள் நடைபெறுகின்றன. பெண்களுக்கு எதிரான வன்முறை (Violence Against Women) என்பது பெண் என்ற காரணத்தாலும், அவளது இயலாமை காரணமாகவும் ஏற்படுகின்றது.

இல்லத்து வன்முறைக்கு உள்ளான குடும்பத் தலைவியின் உடலில் காணக்கூடிய சுகாதார அடையாளங்களாகப் பெண் உறுப்பில் குருதி வடிதல், மாதவிடாயின் போது கூடுதல் வலி காணப்படுதல், உடல் உறவில் விருப்பமின்மை, மீள் உற்பத்தி உறுப்புக்களில் நோய்கள், அடி வயிற்றில் நீடித்தகாலக் கடும் வலி, பெண் உறுப்பில் வேறு நீர் வடிதல், மயக்கம், தலைச்சுற்று, ஞாபக மறதி என்பன காணப்படுகின்றன. பெண்களுக்கு எதிரான இல்லத்து வன்முறை ஒரு பாரதூரமான சுகாதாரப் பிரச்சனையாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இதன் விளைவாக இவர்களது குடும்பங்கள் ஆபத்து விளிம்பிலுள்ள குடும்பங்களாகக் காணப்படுகின்றன. சாதாரண வாழ்க்கையைக் கூட வாழமுடியாது தவிக்கின்றனர்.

இப்படியான துன்பங்களை சந்தித்தபோதும் அந்தச் சூழலிலிருந்து விலகிச் செல்லாமைக்கு பல காரணங்கள் இனங்காணப்பட்டுள்ளன. குடும்பதைப் பிரிய விரும்பாமை, தாயால் குழந்தைகளைப் பிரிந்திருக்க முடியாமை, அயலவர்கள் மத்தியில் இழிவானவர்களாகக் கருதப்படும் பயம், தஞ்சமடைய வேறு இடம் இல்லாதிருத்தல், வருமானப் பிரச்சனை, வன்முறை மேலும் அதிகரிக்கலாம் என எண்ணிப் பயப்படல்,

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்...)

JOBS! JOBS! JOBS!

TEMP EMPLOYMENT AGENCY



- General Labor
- Packers
- Machine operator
- Forklift operator

NOW HIRING

Tel: 416-292-2929 Fax: 416-292-9857 OR

Email: tempemployagency@gmail.com

80 Nashdene Rd. Building - D Unit 89 Scarborough ON. M1V 5E4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெனிசு...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆண்டுகாலத்திற்கு ஜனாதிபதியாக 2019 ஜனவரியில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

நிக்கோலா மடுரோ மீண்டும் வெனிசு வேலாவின் ஜனாதிபதியாகப் பதவிப்பிர மாணம் செய்ததைத் தொடர்ந்து அதை ஏற்க மறுத்து எதிர்க்கட்சியின் தலைவராக இருந்த Juan Guaido 2019 ஜனவரி 23இல் வெனிசு


Juan Guaido

வேலாவின் இடைக்கால ஜனாதிபதியாகத் தானும் பதவிப்பிரமாணம் செய்தார். Juan Guaido ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில் தான் வெனிசுவேலாவின் இடைக்கால ஜனாதிபதியாகப் பதவியேற்று அரச இராணுவ உதவியுடன் மீண்டும் ஒரு நேர்மையான தேர்தலை நடத்துவேன் என்றார்.

கனேடிய அரசு Juan Guaido ஜனாதி பதியாகச் சத்தியப்பிரமாணம் செய்த சில நிமிடங்களிலேயே Juan Guaidoஐ வெனிசு வேலாவின் ஜனாதிபதியாக அங்கீகரித்தது. இது தொடர்பாகக் கனேடிய வெளிவிவகார அமைச்சர் Chrystia Freeland வெளியிட்ட அறிக்கையில் கனடா Juan Guaido ஐ ஆதரிப்பதாகவும் அவர் வெனிசுவேலா நாட்டில் ஒரு சுதந்திரமான தேர்தலை நடத்தி ஜனாதிபதியைத் தெரிவு செய்வார் எனவும் நிக்கோலா மடுரோவைப் பதவி விலகுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் கனேடிய மக்கள் வெனிசுவேலா மக்களுடன் சேர்ந்து நிற்கின்றனர் என்றும், வெனிசு வேலா மக்களின் விருப்பமான ஒரு ஜனநாயக அரசை உருவாக்கி வெனிசுவேலாவில் மனித உரிமைகளைக் கொண்டுவர விரும்புகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




கனடாவைத் தொடர்ந்து அமெரிக்கா, ஆஜன்ரீனா, பிறேசில், ஐரோப்பிய ஒன்றியம் உட்பட 50 மேற்குல நாடுகள் Juan Guaido ஐ வெனிசுவேலாவின் உத்தியோகபூர்வமான இடைக்கால ஜனாதிபதியாக அங்கீகரித்தன. ஆனால் ரஸ்சியா, சீனா, மெக்சிக்கோ, பொலிவியா மற்றும் தென் ஆபிரிக்கா தொடர்ந்தும் நிக்கோலா மடுரோவைத்தான் வெனிசுவேலாவின் ஜனாதிபதியாக ஏற்றுக் கொண்டுள்ளன. Juan Guaido எதிர் பார்த்தபடி வெனிசுவேலா இராணுவத்தில் இருந்து பெரும்பாலானோர் நிக்கோலா மடுரோவை அதரிப்பதை விடுத்து தன்னை ஆதரிப்பர் என்பது நடைபெறவில்லை. இதுவரை சில நூறு இராணுவத்தினரே நிக்கோலா மடுரோவை ஆதரிக்காமல் விலகியுள்ளனர்.

ரஸ்சிய ஊடகங்கள் 2019 பெப்பிரவரி 20இல் ரஸ்சிய அரசின் உதவியாக 272 Tonnes உணவுப் பொருட்களும் மருத்துவப் பொருட்களும் வெனிசுவேலாவிற்கு WHO இனூடாக வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித் துள்ளன. ரஸ்சிய அரசு அமெரிக்க அரசின் மனிதாபிமான உதவிகளைக் கண்டித்து இது அமெரிக்க இராணுவம் வெனிசுவேலாவிற் குள் ஊடுருவ எடுக்கும் முயற்சி என்று கூறியுள்ளது. அமெரிக்க அரசு உண்மையில் மனிதாபிமான உதவிகளை வெனிசுவேலா விற்கு வழங்கவிரும்பினால் ஏன் அவற்றை ஐக்கியநாடுகள் சபையின் உதவியுடன் வழங்கவில்லை என ரஸ்சிய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் Maria Zakharova கேட்டுள்ளார்.

வெனிசுவேலாவில் நடைபெற்ற கருத்துக்



கணிப்புகளில் அங்குள்ள 31 மில்லியன் சனத்தொகையில் கிட்டத்தட்ட 30% ஆனோர் ஜனாதிபதி நிக்கோலா மடுரோவை ஆதரிக் கின்றனர். 35% ஆனோர் மேற்குலக நாடு களின் இராணுவத்தலையீட்டை விரும்புகின் றனர். 63% ஆனோர் எந்தத்தீர்வு வந்தாலும் அது ஜனாதிபதி நிக்கோலா மடுரோவுடன் பேச்சுவார்த்தை நடத்தியே பெறவேண்டும் என்கின்றனர். அத்தீர்வு நிக்கோலா மடுரோ வின் பதவி விலகல் என்றால் கூட அவருடன் பேச்சுவார்த்தை நடத்தியே ஒரு தீர்வுக்கு வரவேண்டும் என்றே பெரும்பான்மை வெனிசுவேலா மக்கள் விரும்புகின்றனர்.

கனேடிய நகரங்களில் 2019 பெப்ரவரி 24இல் பல கண்டன ஊர்வலங்கள் நடைபெற்றன. கல்ஹரி மற்றும் வினிபெக் நகரில் நடைபெற்ற ஊர்வலங்களில் கனடாவையும் அமெரிக்காவையும் வெனிசுவேலாவின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட வேண்டாம் என்றும் வெனிசுவேலாவில் இராணுவப் புரட்சியை (Coup) தூண்ட வேண்டாம் என்றும் பதாதகைகள் கொண்டு சிலர் சென்றனர். வேறு சில இடங்களில் நடைபெற்ற ஊர்வலங்களில் வெனிசு வேலாவில் ஜனநாயக அரசு வேண்டும், மனித உரிமைகள் மதிக்கப்படவேண்டும் என்றும் பதாதகைகள் கொண்டு சிலர் சென்றனர்.




# கனேடிய மத்திய அரசிற்கான இடைத்தேர்தல்

## York-Simcoe (ஒன்ராறியோ)

| கட்சி | வேட்பாளர் | வாக்கு % | வாக்குகள் |
|---|---|---|---|
| பழமைவாதக்கட்சி | Scot Davidson | 53.9% | 8,929 |
| லிபரல் கட்சி | Shaun Tanaka | 29.0% | 4,811 |
| புதிய ஜனநாயகக்கட்சி | Jessa McLean | 7.5% | 1,244 |
| பசுமைக்கட்சி | Mathew Lund | 2.7% | 451 |
| ஏனையோர் (ஐவர்) | - | 6.8% | 1,129 |

இவ் இடைத்தேர்தலில் 83,179 பதியப்பட்ட வாக்காளர்களில் 16,564 பேரே (19.91%) தமது வாக்குகளை அளித்திருந்தனர்.


Scot Davidson (Centre)

## Outremont (குவிபெக்)

| கட்சி | வேட்பாளர் | வாக்கு % | வாக்குகள் |
|---|---|---|---|
| லிபரல் கட்சி | Rachel Bendayan | 40.4% | 6,086 |
| புதிய ஜனநாயகக்கட்சி | Julia Sanchez | 26.1% | 3,925 |
| பசுமைக்கட்சி | Daniel Green | 12.5% | 1,889 |
| புளக் குவிபெக்குவாக்கட்சி | Michel Duchesne | 11.2% | 1,683 |
| பழமைவாதக்கட்சி | Jasmine Louras | 7.3% | 1,098 |
| ஏனையோர் (இருவர்) | - | 2.4% | 374 |

இவ் இடைத்தேர்தலில் 70,414 பதியப்பட்ட வாக்காளர்களில் 15,055 பேரே (21.38%) தமது வாக்குகளை அளித்திருந்தனர்.


Rachel Bendayan

## Burnaby South (பிரிட்டிஷ் கொலம்பியா)

| கட்சி | வேட்பாளர் | வாக்கு % | வாக்குகள் |
|---|---|---|---|
| புதிய ஜனநாயகக்கட்சி | Jagmeet Singh | 39.0% | 8,884 |
| லிபரல் கட்சி | Richard T. Lee | 26.0% | 5,930 |
| பழமைவாதக்கட்சி | Jay Shin | 22.5% | 5,133 |
| மக்கள் கட்சி | Laura-Lynn Thompson | 10.6% | 2,420 |
| ஏனையோர் (இருவர்) | - | 1.8% | 409 |

இவ் இடைத்தேர்தலில் 76,204 பதியப்பட்ட வாக்காளர்களில் 22,776 பேரே (29.89%) தமது வாக்குகளை அளித்திருந்தனர்.

இத்தேர்தலில் வாக்களித்தோர் எண்ணிக்கை சராசரியாக ஓர் இடைத்தேர்தலில் வாக் களிக்கும் 35%ஆன மக்களைவிட மிகக்குறை வாகவே இருந்தது.


Jagmeet Singh

# படித்ததில் பிடித்தது

**- கருணாகரன் -**

- குடும்பம் என்பது கடவுள் நமக்காக பூமியில் ஏற்பாடு செய்திருக்கும் சொர்க்கம். அதை சொர்க்கமாக்குவதும் நரகமாக்குவதும் நம்முடைய செயல்களில் தான் இருக்கிறது.

- பணத்துக்கான ஓட்டங்களில் நாம் இழந்து கொண்டிருப்பது ஆனந்தத்தின் நிமிடங்களை என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

- ஒரு வேளை நாம் நாளை இறந்து போக நேரிட்டால் அலுவலகம் இன்னொரு திறமைசாலியை சில நாட்களில் கண்டு பிடிக்கும். குடும்பம் அப்படியல்ல.

- ஏற்படும் இழப்பு ஆழமாய்த் தைத்த முள் போல நினைவுகளால் நிமிண்டும் போதெல்லாம் வலித்துக் கொண்டே இருக்கும்.

- வாழ்க்கையில் எல்லாம் இருந்தாலும் அன்பினால் நிரப்பப்படா விட்டால் அது வெறுமையாகவே இருக்கும். பணமே மகிழ்ச்சியைத் தரும் என்பது தலைமுறைக் குத் தரப்பட்டிருக்கும் தவறான பாடம். மகிழ்ச்சியை சதுர அடிகளில் வாங்க முடியாது.

- குடும்பங்களில் அதிக நேரம் செலவிடுங்கள்.

- அன்பை அதிகமாய் சம்பாதியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லையா பாலச்சந்திரன்



# குடியிருப்பு மனைகளுக்கான நகரசபைச் சட்டங்கள்

## Bylaw Enforcement on Residential Properties

## கனடிய தகவல் தொடர் 302




றொறன்ரோ நகரில் உள்ள குடியிருப்பு மனைகள் சிலவற்றில் நடந்த சில சம்பவங்களை உதாரணமாகக் குறிப்பிட்டுவிட்டு விடயத்திற்கு வருகிறேன்.

முதலாவது சம்பவம் - புதிதாக நிர்மாணம் செய்யப்பட்ட ஓர் அழகிய புதுமனை. வீட்டின் முன் பக்கத்தில் ஒரு பக்கமாகத் தனி கராஜ் (Single Garage). அதனைத் தொடர்ந்து வெளிபக்கமாக ஒரு வாகனம் மட்டும் தரிக்கக் கூடிய இடம் (Single Drive-way). அழகாக மாபிளினால் உருவாக்கப்பட்ட வாசல் படிகள். அந்த வாசல் படிகளினைத் தொடர்ந்து நிலம் தெரியாத அளவுக்கு ஆடம்பரமான கற்களினால் வடிவமைக்கப்பட்ட வீட்டு வாசலுக்கும் வீதியோரமாக இருக்கும் இடத்திற்கும் இடையே சில பூமரங்கள் வளர்ந்து பேணிக் காப்பதற்குரிய இடம். ஒரு கலைத்துவக் கண்ணோட்டத்துடன் வீட்டின் முன்னால் நின்று பார்த்தால் ரசிக்கக்கூடியதாக இருக்கும். அவ்வளவு தூரம் அழகாக இருந்தது.

ஒரு நாள் திடீர் என நகரசபைப் பரிசோதகர் நேரடியாக வீட்டிற்கு வந்து கதவினைத் தட்டி 'எச்சரிக்கை' உத்தரவுக்கான கட்டளை பத்திரத்தினை (Warning order) வீட்டு உரிமையாளருக்கு வழங்கினார். நகரசபைச் சட்டப் பிரிவுகளின் பிரதிகளும் இக்கட்டளைப் பத்திரத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. நகரசபைச் சட்டப்பிரிவு பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

Soft Landcaping Defintion city of Toronto bylaw Sec. 438-86.
'If lot does not have permitted driveway in the front yard a  minium of 75% of the front yard must be soft landscaping'
'வீடுகளுக்கு முன்னால் இருக்கும் வாகனத் தரிப்புக்கு உட்படாத நிலத்தில் 75% வீதமான நிலப்பரப்பு இயற்கை முறையில் புல், செடிகளை உருவாக்கும் மண் தரையாக மட்டுமே இருக்க வேண்டும்.'

மழை நீர் உறைதல், நிலத்தடி நீரோட்டங்கள் போன்ற சில விடயங்கள் வீடுகளுக்கு அருகே பாதிக்கக் கூடாது என்பதே மண்ணியல் மற்றும் நீர் வடிகால் சம்பந்தப்பட்ட துறைகளில் பணி புரியும் பொறியியலாளர் இச்சம்பவங்களில் குறிப்பிடும் காரணங்கள் ஆகும்.

இரண்டாவது சம்பவம்: ஒருவரின் வீட்டின் இடது பக்கமாக வாகனம் நிறுத்தும் பாதையுடன் சேர்ந்த ஒரு 'திறந்த வெளி கராஜ்' (Open Garage). அதாவது வீட்டுடன் சேர்ந்து கூரை (Roof) மட்டுமேயுள்ள ஒரு சரிவு நிலையிலிருக்கும் வாகனம் தரிக்க வசதியுள்ள ஓர் இடம். அந்த இடத்தினை மூடி அவர் முழுமையான ஓர் அழகான அறையாக மாற்றம் செய்திருந்தார். ஆனால் அந்த இடம் மூடப்பட்ட ஓர் அறையாக உருவாக்கக் கூடாது எனவும் அது நகரசபை



சட்டவிதிகளுக்கு முரணானது என்பதும் எச்சரிக்கையாக அவரைத் தேடி வந்தது.

மேலே குறிப்பிடப்பட்ட இரு சம்பவங்களிலும் அவற்றினை அழகுற உருவாக்குவதில் சில ஆயிரம் டொலர் செலவு செய்யப் பட்டிருக்கும். அதைத் தொடர்ந்து துயரத்துடன் பிடுங்கி எறிந்து மாற்றியமைப்பதில் இன்னும் சில ஆயிரம் டொலர் செலவு. இச்சம்பவங்களில் இருந்து சகலரும் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் உண்டு.

மூன்றாவது சம்பவம் - சொந்த வீட்டுக்கு முன்னால் உள்ள வீட்டுடன் சேர்ந்த வாகனத் தரிப்பு இடத்தில் வாகனம் தரிக்கக் கூடாது. (Home owner ordered to stop parking In her own driveway.) என நவம்பர் 17, 2010 'றொறன்ரோ ஸ்ரார்' பத்திரிகையில் மேல் குறிப்பிட்ட தலைப்பில் ஒரு செய்தி வெளியாகியிருந்தது. இதேசெய்தி ஏனைய

(தொடர்ச்சி 16ஆம் பக்கம்...)

டிராஃபிக் குமார் எனும் வினோத் குமார் PRECISION PARALEGALS எனும் முன்னணி நிறுவனத்துடன் இணைகிறார். இனி Ontario மட்டும் இல்லாது Alberta சட்டப் பிரச்சனைகளுக்கும் நாங்கள் தீர்வு வழங்குவோம்.
Traffic Ticket மட்டும் இல்லாது Small Claims Court ($ 25,000 கீழ் இருக்கும் சட்டப் பிரச்சனைகள்), Landloard Tenant Tribunal ( வீட்டில் வாடகைக்கு இருப்பவர்களுடன் சட்டப் பிரச்சனைகள்) போன்ற விடயங்களுக்கு சட்டத் தீர்வு கொண்டு வருவோம்.

22 வருடங்களாக Ontario மற்றும் Alberta வில் செயல்படும் எமது நிறுவனத்தில் நாங்கள் கையாளும் வழக்குகள்

ஒப்பந்தக்காரர் மற்றும் கட்டிடவேலை தகராறு
Contractor/Construction Dispute

செலுத்தப் படாத தங்களுக்கு வருமதியான பணம்
Unpaid receivables

TOW Truck ஓட்டுனருடன் சட்டப் பிரச்சனை
Repairs and Storage Liens Act

டிராஃபிக் டிக்கெட் சட்டப் பிரச்சனை
POA Offences and Traffic Ticket



டிராஃபிக் குமார் எனும்
வினோத் குமார்
அழையுங்கள்:
647-667-6034
1-866-541-3966

Precision
PARALEGAL SERVICES LLP



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னல் நீக்கும் இயற்கை – 44




- அகணி -
authorakari@gmail.com


சிறுநீரகத்தில் கல் உருவாகுவது பொதுவான ஒரு பிரச்சினை. இதனால் தாங்க முடியாத வலியேற்படும். கல்லின் அளவு சிறிதாக இருந்தால் மாத்திரைகள் மூலம் கல்லைக் கரைப்பதன் மூலம் தீர்வு ஏற்படுத்தப்படுகிறது. மாத்திரைகள் மூலம் கரைக்க முடியாவிட்டால் சத்திரசிகிச்சை தேவைப்படுகிறது. இவ்வாறான கஸ்டங்கள் வராமல், முன்னெச்சரிக்கையாக இருப்பது நல்லது. அதிகமான உடல் வெப்பம், அதிகமான குளிர்ச்சி, போதியளவு நீர் அருந்தாமை, உட்கொள்ளும் உணவுகள் போன்றவற்றால் சிறுநீரகத்தில் கல் ஏற்படுகிறது. நாளாந்தம் ஒருவர் இரண்டரை லீற்றர் தண்ணீர் குடிக்க வேண்டும். அதிகமானளவு தக்காளி, சொக்லேட் சாப்பிடுவதாலும் சிறுநீரகத்தில் கல் தோன்ற வாய்ப்புண்டு. சிறுநீர் கழிக்கும்பொழுது ஏதாவது வலி ஏற்படுமானால் காலம் தாமதிக்காது வைத்தியரைப் பார்க்க வேண்டும். இளநீர், வாழைத்தண்டு, எலுமிச்சம் சாறு போன்றவற்றை இடைக்கிடை அருந்துவதாலும் சிறுநீரகத்தில் கல் உருவாகுவதைத் தடுக்கலாம்.

தேங்காய்த்துண்டை இடைக்கிடை பச்சையாக உண்ணுவது நல்லது. தக்காளியை இடைக்கிடை பச்சையாகச் சாப்பிடுவது நல்லது. புற்றுநோயைத் தடுக்கும் சக்தி தக்காளிக்கு உண்டு. கரட்டினைப் பச்சையாக சாப்பிடுவது கண்ணின் ஆரோக்கியத்திற்கு நல்லது. முளைகட்டிய தானியங்களைச் சாப்பிடுவது மிகவும் நல்லது. வெந்தயத்தை நன்றாகக் கழுவி, நீரில் ஊறவைத்து முளை ஏற்படும்வரை ஒரு பாத்திரத்தால் மூடி வைத்து சாப்பிடுவதால் உடலில் உள்ள சர்க்கரையின் அளவைக் குறைக்கலாம்.

இஞ்சி போட்ட தேநீரை எல்லோரும் விரும்பிக் குடிப்பர். அதிகமாகக் குடிப்பதால் தீமைகள் ஏற்படுகின்றன. முக்கியமாகக் குறைந்தளவு ரத்த அழுத்தம் உள்ளவர்கள் அதிகமானளவு இஞ்சித் தேநீரைப் பருகக் கூடாது. அல்சர் போன்ற பிரச்சினைகள் உள்ளவர்கள் இஞ்சித் தேநீரை அருந்தக் கூடாது. அதிகமானளவு இஞ்சித் தேநீரைக் குடிப்பதால் வயிற்று எரிச்சல், வாய்ப்புண், நெஞ்செரிச்சல், வயிற்றுவலி போன்ற பிரச்சினைகள் ஏற்படும்.

எவ்வளவுக்கெவ்வளவு இயற்கையான உணவுகளால் நன்மை ஏற்படுகிறது என்பதில் உண்மை இருந்தாலும் அதிகமானளவு சில உணவுகளை உட்கொள்ளுவதால் தீமைகளும் உள்ளன என்பதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். எந்த உணவையும் அதில் உள்ள நல்ல பயன்களை மட்டும் வைத்துக் கொண்டு அதிகமாக உட்கொள்ளக்கூடாது. அதிக மருத்துவத்தன்மை கொண்ட உணவுகளால் ஏற்படும் நன்மையும், பக்கவிளைவுகளும் அதிகமாகத்தான் இருக்கும். சில உணவுகளை கவனமாக மருந்தாகச் சாப்பிட வேண்டும். பக்கவிளைவுகள் தீமையையும் ஏற்படுத்திவிடும்.



இப்பொழுது பாகற்காயில் உள்ள மருத்துவ பயன்களைப் பற்றி ஆராய்வோம். பாகற்காயில் விட்டமின் பி 3, 5, 6 ஆகிய விட்டமின்கள் உள்ளன. மக்னீசியம், பொட்டாசியம், இரும்பு ஆகிய தாதுப்பொருட்களும் உள்ளன. பாகற்காயால் உடலில் எலும்பின் உறுதி, நரம்பின் உறுதி ஆகியவை ஏற்படும். இதில் நோய் எதிர்ப்புச்சக்தி உள்ளது. பாகற்காயை சாப்பிடுவதால் உடலின் தோலில் உள்ள பருக்கள், கருப்புப் புள்ளிகள் ஆகியவை நீங்கும். கண்நோய்களுக்கும் பாகற்காய் உகந்தது. உடலில் ஏற்படும் கட்டிகள் நீங்கும். ஆஸ்துமா, சளி, இருமல் ஆகியவற்றை பாகற்காய் குணமாக்கும். பாகல் இலைச் சாற்றை வாரத்திற்கு ஒருமுறை 100 மில்லி லீற்றர் குடித்து வந்தால் உடலில் உள்ள சர்க்கரையின் அளவு குறையும். பாகற்காயை உண்ணுவதால் உடலில் உள்ள சர்க்கரையின் அளவு குறையும். உடலின் செரிமானத்திற்கும் பாகற்காய் நல்லது. பாகற்காய் உடலில் உள்ள பித்தத்தைக் குறைக்கும். தாய்ப்பால் கொடுக்கும் பெண்கள் பாகற்காய் சாப்பிட்டால் தாய்ப்பால் அதிகமாகச் சுரக்கும். பாகற்காயுடன் சிறிது புளியும் சேர்த்து உணவுடன் சேர்த்து உண்ணுவது நல்லது. பாகற்காய் உண்ணுவதால் வயிற்றுப்புழு நீங்கும். பாகற்காய் புற்றுநோய் அழிக்கும் சக்தியும் கொண்டது. பாகற்காய்ச்சாற்றுடன் சர்க்கரை கலந்து குடித்தால் மூலநோயால் ஏற்படும் இரத்தப் போக்கு நின்றுவிடும். பாகற்காய் கல்லீரலை வலுப்படுத்தும். மலச்சிக்கலைக் குறைக்கும். சிறுநீரகத்தில் தோன்றும் கற்களைக் கரைக்கும். உடலில் உள்ள கொழுப்பைக் கரைத்து இதயநோய் வருவதைத் தடுக்கும். உடல் உடையைக் குறைக்கும் தன்மையும் பாகற்காயிற்கு உண்டு. கசப்பான பாகற்காயை உணவில் சேர்த்து உண்ணுவதால் பலன் ஏற்படும். பாகற்காயை விட அதன் இலையில் அதிகமான மருத்துவப் பயன்கள் உள்ளன. கசப்பான பாகற்காயை உணவில் சேர்த்துக் கொள்ள பலவகையான உணவு முறைகள் உள்ளன. அவற்றை அறிந்து பாகற்காய் பொரியல், பாகற்காய் குழம்பு, பாகற்காய் சூப்பு போன்றவற்றைச் செய்வதன் மூலம் நமது உணவில் பாகற்காயை சேர்த்துக் கொள்ளலாம். பாகற்காயை அல்லது இலையை பச்சையாக உண்ணுவதால் அதிக நன்மை ஏற்படும். அதிகமாக பாகற்காயை சாப்பிடுவது நல்லதல்ல. இதனை மருந்தாக சிறிதளவு சாப்பிடலாம். இடைக்கிடை பாகற்காயில் உணவு செய்து சாப்பிடலாம். கர்ப்பம் தரிக்கவுள்ள பெண்களும், கர்ப்பமான பெண்களும் பாகற்காய் உண்பதைத் தவிர்க்க வேண்டும். மிகவும் சிறிய அளவில் வைத்திய ஆலோசனையுடன் மட்டுமே உட்கொள்ள முடியும். சர்க்கரை நோயிற்கான மருந்து உட்கொள்ளுபவர்கள் வைத்திய ஆலோசனை இன்றி பாகற்காயை உண்ணக்கூடாது. அவர்களுக்கு இதனால் பாதிப்புக்கள் ஏற்படலாம். பாகற்காயை அதிகமாகச் சாப்பிடுவதால் வாந்தி, வயிற்றுளைவு, வயிற்றுப் பகுதியில் வலி ஆகிய பிரச்சினைகள் ஏற்படும். ஈரலில் பாதிப்புக்கள் ஏற்படும்.



வெண்டைக்காயைச் சாப்பிடுவதால் மூளையின் ஆரோக்கியம் மேம்படும். நினைவாற்றல் அதிகரிக்கும். முக்கியமாகக் கல்வி கற்கும் பிள்ளைகள் வெண்டைக்காயைச் சாப்பிடுவதால் நிறைந்தளவு நன்மைகள் ஏற்படும். நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் வாரத்தில் இரண்டு அல்லது மூன்று தடவைகள் வெண்டைக்காயைச் சாப்பிட்டு வருவது நல்லது. புற்றுநோய் வராமல் தடுக்கவும், புற்றுநோயால் ஏற்படும் பாதிப்புக்களைக் கட்டுப்படுத்தவும் வெண்டைக்காயைச் சாப்பிடுவது நல்லது. வெண்டைக்காயில் உடலுக்கு வேண்டிய நிறைந்தளவு சத்துக்கள் உள்ளது. எதிர்ப்புச்சக்தியும் உண்டு. வயிற்றில் அல்சர் போன்ற பிரச்சினைகள் உள்ளவர்களுக்கு வெண்டைக்காய் நல்ல பயனைக் கொடுக்கும். கல்லீரலில் நச்சுத்தன்மையால் ஏற்படும் பிரச்சினைகளுக்கும் வெண்டைக்காய் உகந்தது. உடலில் கொலஸ்ரோலின் அளவைக்கட்டுப்படுத்த வெண்டைக்காயைச் சாப்பிடவேண்டும். வெண்டைக்காயைச் சாப்பிடுவதால் உடலில் பசி ஏற்படுவது குறையும். இதனால் உடை எடையைக் குறைக்கவும் உதவும்.

**அன்பான விளம்பரம் வாசகர்களே!**

இயற்கை வளங்களால் எவ்வாறு இன்னல் நீங்கி வாழலாம் என்று அறியும் பொருட்டு எழுந்த தேடலில் கிடைத்த தகவல் பதிவாக அசைந்து கொண்டிருக்கும் இந்தத் தொடர் கட்டுரை எமது பொது அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் எழுதப்படுகின்றது. இந்தக் கட்டுரையில் கூறப்படும் கருத்துக்கள் இயற்கை சார்ந்து இருந்தாலும் உங்கள் உடல்நிலைக்கேற்ப பொருத்தமான மருத்துவ கருத்துக்களாக அமைந்துவிடாது என்பதை கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள். எப்பொழுதும் பொருத்தமான வைத்திய ஆலோசனையை மேற்கொள்ளுங்கள் என்று வலியுறுத்திக் கூறிக் கொள்கின்றேன். ஆனாலும் நாம் இயற்கையோடு இணைந்து வாழ்வதற்கான தகவலையும், விழிப்புணர்வையும், ஆரோக்கியமாக வாழ்வதற்கு வேண்டிய பொதுவறிவையும் இந்தக் கட்டுரை வழங்கும் என்று நம்புகின்றேன்.

நாமும் நன்றாக வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும்.

அடுத்த இதழிலும் எனது தேடலில் கிடைக்கும் புதிய தகவல்களுடன் தொடர்ந்து உரையாடுவோம். உங்கள் எண்ணங்களையும் தெரியப்படுத்துங்கள். மீண்டும் சந்திப்போம் என்று கூறி விடைபெறுகின்றேன்.


**மன்னார் புனித சவேரியார் (St. Xavier's) கல்லூரியின்**

150ஆவது ஆண்டுவிழாவை முன்னிட்டு கலந்தாலோசிப்பதுக்காக பாடசாலையின் பழையமாணவர்களுக்கான முதலாவது கூட்டம் பங்குனி மாதம் (March) 24th, ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4:00 மணிக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. கனடா வாழ் சகல பழைய மாணவர்களும் (ஆண்/பெண்) அன்புடன் அழைக்கப்படுகிறீர்கள்.

இடம்: 121 Trudelle St., Scarborough, ON, M1J 3K4 (McCowan & Eglington.)

மேலதிக விபரங்களுக்கு:

*Jayabalan (416) 856 0837, Joseph (416) 992 4635, Kingsley (647) 721 5418.*
*Meleni (647) 988 1530, Rohan (647) 706 5495, Jude Shanthy (416) 668 9864*



**ARISTO PEST CONTROL**

Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL



• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat

Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)

Same Day Service - Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தை ஆக்கிரமிக்கின்றனரா வடஇந்தியர்?

**- கண்ணன் -**

தமிழகத்தில் சென்னை, திருப்பூர் போன்ற தொழில் நகரங்களில் மட்டுமே அரிதினும் அரிதாகப் பார்க்க முடிந்த வட இந்திய தொழிலாளர், இப்போது சிறு நகரங்கள் தொடங்கி குக்கிராமங்கள் வரை எங்கு பார்த்தாலும் நிறைந்திருக்கின்றனர். பெரிய கட்டுமானத் தொழில் தொடங்கி சிறிய உணவகங்கள் வரை எல்லா இடங்களிலும் வட இந்தியரைப் பார்க்க முடிகிறது. தமிழகத்தை ஆக்கிரமிக்கின்றனரா வட இந்தியர்? அல்லது சின்னஞ்சிறு வேலைகளுக்குக்கூட வட இந்தியரை அழைக்கும் அளவுக்கு தமிழகத் தமிழரின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துவிட்டதா? எது உண்மை?

ஆனால், தமிழகத்தில் இன்றும் ஒவ்வொரு நகர சந்திப்புக்களிலும், கூலி வேலைக்கு யாரேனும் அழைத்துச் செல்வார்களா என்ற எதிர்பார்ப்பில், காலையிலேயே ஒரு குறிப்பிட்ட இடத்தில் காத்திருக்கும் தமிழகத் தொழிலாளர்களையும் பார்க்க முடிகிறது. ஒருபக்கம் இப்படி வேலையற்ற தமிழக தொழிலாளர், மற்றொரு பக்கம் ஆக்கிரமிக்கும் வட இந்திய தொழிலாளர். அமைப்பு சாரா தொழில்களில் மட்டுமின்றி, தமிழகத்திற்குள் செயல்படும் இந்திய ஒன்றிய அரசு அலுவலகப் பணிகளிலும், அதிகமாக வட இந்தியத்தவர்களே நிரப்பப்படுகின்றனர்.

இதற்கு என்ன காரணம்? இதை தமிழகம் எப்படி எதிர்கொள்ளப் போகிறது? தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் தி. வேல்முருகனிடம் பேசினோம். "தமிழகத்தின் அத்தனை நகரங்களிலும் இப்போது வடஇந்தியத் தொழிலாளர்தான் நிறைந்திருக்கின்றனர். நமது ஆட்களே இந்தப் பணிகளை செய்தாலும் மிகக்குறைந்த கூலிக்கு வேலைசெய்ய வட இந்தியத் தொழிலாளர் தயாராக இருப்பதால் அவர்களையே வேலைக்கு வைத்துக் கொள்ளுகின்றனர். ஆனால், இதனால் எதிர்காலத்தில் நமது பண்பாடு, மொழி, வாழ்வுரிமை உள்ளிட்ட அத்தனையும் பாதிக்கப்படும் என்று அவர்கள் உணர்வதே இல்லை.

பணிக்கு ஆட்கள் எடுத்துத்தரும் நிறுவனங்கள் அனைத்தும், லாபநோக்கம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு இயங்குகின்றன. எந்த சட்டவிதிகளையும் பின்பற்றாமல் வட இந்தியத் தொழிலாளரை இங்கே பணிக்குக் கொண்டுவருகின்றனர். அவ்வாறு பணிக்கு வரும் தொழிலாளர்கள் இங்கேயே தங்கி ஓட்டுரிமை, குடும்ப அட்டை போன்ற எல்லா சலுகைகளையும் வாங்கிக்கொள்கின்றனர். பல குற்றச்செயல்களிலும் ஈடுபடுகின்றனர். இவை முறைப்படுத்தப்பட வேண்டும் என நாங்கள் அரசுக்கு கோரிக்கை வைத்து வருகிறோம்.

இந்தியாவிலேயே அஸ்ஸாம், அருணாச்சல் பிரதேசம் போன்ற மாநிலங்களில் வட இந்தியர் சென்று தங்குவதற்குப் பல்வேறு கட்டுப்பாடுகள் உள்ளன. அதுபோன்று தமிழகத்திலும் சட்டம் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுள்ளோம்" என்றார்.

தொடர்ந்து, "இதுபோல் சில ஆண்டுகளுக்கு முன்பு கட்டுக்கடங்காது வந்த வட இந்திய மார்வாடிகள், குஜராத்திகள் ஆதிக்கத்தால் தற்போது சென்னையில் 160 தெருக்கள் முழுக்க வட இந்தியரே நிரம்பியுள்ளனர். சௌகார்பேட்டை உள்ளிட்ட பணக்கார மார்வாடிகள் வாழும் பகுதிகளில் கம்யூனிட்டி கேட் அமைத்து தமிழர் அங்கே நுழைய முடியாத சூழலையும் உருவாக்கியுள்ளனர். ஜெயின் பில்டர்ஸ் கட்டும் அடுக்குமாடிக் குடியிருப்புகளில் முழுக்கவும் மார்வாடி, குஜராத்தி, ஜெயின் சமூகத்தவர்களுக்கு மட்டுமே விற்பனை செய்கின்றனர். தமிழர்களுக்கு விற்பதில்லை.

இது ஒரு பக்கம் என்றால் இன்னொரு பக்கம், வட இந்தியர் பெருக்கம் இங்கு சமூக மோதல்களையும் உருவாக்குகிறது. ஈரோடு அன்னூரில் கோழிக்கடையில் இந்தி பேசும் ஒருவர் கடைக்காரரை இந்தி பேசச்சொல்லிப் பிரச்சினை செய்து கொலை செய்துள்ளார். அதுபோல ரயிலில் தனது பதிவு செய்யப்பட்ட இருக்கையை கேட்ட தமிழரை 15 பேர் கொண்டு இந்தி பேசும் கும்பல் அடித்துத் துவைத்துள்ளனர்.

தமிழகத்தில் தற்போது நடைபெறும் பல கொள்ளை, கொலை சம்பவங்களிலும் வட இந்தியரே ஈடுபடுகின்றனர். இதுபோல் தொடர்ந்து வட இந்தியர் அதிகரித்தால் தமிழர் தமிழகத்தில் அகதியாவர். இது மறைமுகமாக இந்தியை திணிக்கும் முயற்சி" என்ற அதிர்ச்சித் தகவலையும் சொல்கிறார்.

சமூக செயற்பாட்டாளர் சிவகுமாரோ, வட இந்தியத் தொழிலாளர் அதிகரிப்புக்குத் தமிழகத்தில் வேலைக்கு ஆட்கள் கிடைப்பதில்லை என்பதே காரணம் என்கிறார். "தமிழகத்தில் உணவகங்கள், சிறிய கடைகள் போன்ற எந்தப் பணிகளுக்கும் ஆட்கள் கிடைப்பதில்லை. உடலுழைப்பு செய்யும் பணிகளுக்கு வருவதற்கு தமிழர் தயங்குகின்றனர். இலவச அரிசி, நூறுநாள் வேலை, இலவசப் பொருட்கள் எல்லாம் காரணமாக நம்மவர் வேலைக்கு வரவே தயங்குகின்றனர்" என்கிறார் இவர்.

'நாம் தமிழர்' கட்சியின் இளைஞர் பாசறை ஒருங்கிணைப்பாளர் ராஜீவ்காந்தியோ, "தமிழகத்தில் குறைந்தபட்ச ஊதிய சட்டம் உள்ளது. இதன்படி இங்கு பணியாற்றும் தமிழருக்குக் குறைந்த பட்சமாக நியாயமான ஊதியம் வழங்கவேண்டும். ஆனால், இந்த ஊதிய சட்டங்கள் எதுவும் தெரியாத வட இந்தியரைப் பணிக்கு வைத்தால் மிகக்குறைந்த சம்பளம் கொடுக்கலாம் என்ற தமிழ் முதலாளிகளின் எண்ணம்தான் தமிழ் தொழிலாளர் வேலை இழப்புக்கான காரணம்.



சிவகாசியில் ஊதிபத்தி தயாரிக்கும் தமிழகத் தொழிலாளர்களுக்கு ஒரு நாளைக்கு குறைந்த பட்ச ஊதியம் 275 ரூபாய். ஆனால், வட இந்தியத் தொழிலாளர் 150 ரூபாய்க்கு இங்கே பணிக்கு வருகின்றனர். ஒருபக்கம் தமிழர் வேலை வாய்ப்பின்றி தெருவில் நிற்கும்போது குறைந்த கூலிக்கு வெளியில் இருந்து ஆட்களை அழைந்துவரும் செயல் நடக்கிறது.

மிகக்குறைந்த கூலிக்குப் பணிக்கு வரும் வட இந்திய தொழிலாளர் நாளடைவில் ஊதியம் போதுமானதாக இல்லை என்ற காரணத்திற்காக செயின் பறிப்பு, கொள்ளை, கூலிப்படை போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர். இங்கு வட இந்தியத் தொழிலாளர் பற்றிய எந்தப் பதிவேடும் இல்லாததால் இதுபோல குற்றச் செயல்களில் ஈடுபடும் வட இந்தியரைக் கண்டறிய முடிவதில்லை. இதுபோல பல நூறு வழக்குகள் குற்றவாளிகளை கண்டறியப்படாமல் கிடக்கின்றன. எனவே, வட இந்தியாவில் இருந்து இங்கு பணிக்கு வரும் தொழிலாளர்கள் பற்றிய பதிவேட்டினை தமிழக அரசு உருவாக்க வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளோம்" என்கிறார்.

வட இந்தியாவில் இருந்து கூலித் தொழிலுக்காக வருபவர்கள் ஒருபக்கம் என்றால், இன்னொரு பக்கத்தில் தமிழகத்திலுள்ள இந்திய ஒன்றிய அரசு அலுவல

(தொடர்ச்சி 16ஆம் பக்கம்...)

TUTORING
Math / Science / English
Over 10 years of Experience (M.Sc., Mathematics)
University Math: (www.paramjyothiacademy.ca)
.CALCULUS 1,2 &3
.LINEAR ALGEBRA
Universtiy courses for: York, Ryerson, UOFT, UOIT, Waterloo and Mcmaster
•Grade 9:MPM-1D •Grade 10:MPM-2D
•Grade 11:MCR-3u(Functions)
•Grade 12:MHF-4U(Advanced Functions)
•Grade 12:MCV-4U(Calculus and Vectors)
GR.9/10:Science(SNC1D)/SNC2D
GR.11/12:Physics(SPH3U)/SPH4U
Chemistry(SCH3U)/SCH4U
University Courses:Calculus 1,2 &3 and Linear Algebra
* Learn from a person who holds masters degree in Mathematics(M.Sc,Maths)
* Limited students per session
Call today to find out more!
Δ Grade 1-8: Math/Science/English
Δ Grade 9-12: Math/Science (Academic, applied, IB and AP)
Δ Principles of Mathematics. Δ Calculus. Δ Vectors.
Δ Functions. Δ Advanced Functions.
Δ University: Calculus-1, Calculus-2, Calculus -3
PARAM JYOTHI ACADEMY
7393 Markham Road . Door #90
647.426.6329



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமும்...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

காணப்பட்டது. அத்துடன் 2017 உடன் ஒப்பிடும்போது 2018இல் சந்தைக்குக் கொண்டுவரப்பட்ட புதிய அடுக்குமா



மனைகளும் 26% குறைவாகவே காணப்பட்டது. அத்துடன் புதிதாகக் கொண்டு வரப்படுகின்ற மனைகள், வீடுகள் எதிர்பார்த்த அளவிற்கு வியாபாரம் ஆகவில்லை என்பதனை டிசம்பர் 2018 புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.

2018இல் சந்தைக்கு கொண்டுவரப்பட்ட புதிய ஆதனத்தில் 66% ஆனவையே விற்கப்பட்டிருந்தன. 2017இலும் 2016இலும் முறையே 82%, 76% ஆனவை விற்கப்பட்டிருந்தன.

இதற்கு முக்கிய காரணமாகக் கூறப்படுவது அடமானக்கடனின் அதிகரிப்பு. விலை அதிகரிப்பாலும் இவ் அடமானக்கடன் அதிகரிப்பாலும் முதலீடு செய்பவர்களுக்கு மாதாந்தக் கட்டுப்பணம் அதிகரித்துள்ளது. இதனால் வாடகைப்பணத்தால் மாதாந்தம் கிடைக்கும் வருமாத்தொகையும், மாதாந்த கட்டுப்பணத்தை விட மிகவும் அதிகமாக உள்ளது. ஒவ்வொரு மாதமும் முதலீட்டாளர் மேலதிக பணத்தை தமது சொந்த செலவாக செலுத்த வேண்டியுள்ளது. இதனால் முதலீட்டாளர் முதலிடுவதனை தவிர்க்கின்றனர்.

ரொறன்ரோ பெரும்பாகத்தில் அடுக்குமாடி மனைகளின் சராசரி விலை அதிகரித்துள்ளது. குறிப்பாக ரொறன்ரோவின் மத்திய பகுதியில் $1,117ஆக அதிகரித்துள்ளது. கடந்த இரு ஆண்டுகளில் அடுக்குமாடி மனைகளின் சராசரி விலை ஏறக்குறைய 50%இனால் அதிகரித்துள்ளது.

## கேட்கப்பட்ட விலையைவிட $4.5 மில்லியன் குறைவாக விற்கப்பட்ட வீடு

2017இன் முதல் காலப்பகுதியில் விற்கப்பட்டிருந்த வீடுகள் $100,000, $200,000, $300,000 என அதிகமாக விற்கப்பட்ட காலம். மே 2017இலிருந்து நிலைமை சிறிது சிறிதாக மாறத் தொடங்கியது. இந்நிலைமை இன்றுவரை (மார்ச் 01, 2019) தொடர்கின்றது. மார்ச் 19, 2019இல் வரவிருக்கும் லிபரல் மத்திய அரசின் வரவு - செலவுத்திட்டம் (Budget) இந்நிலையை மாற்றுமா? அல்லது இதே நிலைமை சிறிது காலம் தொடருமா? உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட விலை இறக்கம் கனடாவின் சில மாகாணங்களில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றது. முக்கியமாகவும், குறிப்பாகவும் வன்கூவர், ரொறொன்ரோவைக் குறிப்பிட முடியும். இதற்கு ஓரிரு உதாரணங்களை குறிப்பிடலாம்.

அண்மையில் வன்கூவரில் 11 வருட புதிய, 7100 சதுர அடி வீடு $6.998 மில்லியனிற்கு சந்தைப்படுத்தப்பட்டது. 64 நாட்களிற்கு பிற்பாடு $1.8 மில்லியன் குறைவாக இந்த வீடு விற்கப்பட்டுள்ளது. மேலும் இதே பகுதியில் $10.5 மில்லியனிற்கு சந்தைக்கு கொண்டு வரப்பட்ட வீடு $6 மில்லியனிற்கு விற்கப்பட்டுள்ளது. இந்நிலை 5 மில்லியனிற்கு மேலாக சந்தைக்குக் கொண்டு வரப்படும் வீடுகளுக்கு இந்நிலைமை ஏற்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. கடந்த இரு வருடங்களில் பல மாற்றங்களைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

ரொறொன்ரோவை சுற்றிய பாகங்களிலும் இந்நிலைமை தொடர்கின்றது. புதிய ஆதனம் வாங்குவதற்கு முற்பணம் கட்டிய பலர், அடமானக்கடன் பெறுவதிலும், வாங்கிய விலையை விடக் குறைவான மதிப்பீட்டுப் பெறுமதி (Appraisal value) கிடைப்பதாலும், நிலைமை மேலும் மோசமாக இருக்கின்றது. சில நிர்மான நிறுவனங்கள் தமது விலையினை மதிப்பீட்டிற்கேற்ப விலை மாற்றங்களை செய்வதனைக் காணலாம். இவ்வாறான நிலையில் பலர் தாம் வாங்கிய வீடுகளை நிர்மான நிறுவனங்களுக்கே திருப்பிக் கொடுத்து விடுகின்றன. சிலரோ தமது முதலீட்டை கைவிடுகின்றனர். வேறு சிலரோ கட்டிட நிறுவனங்களுடன் பேரம் பேசி இரு பகுதிக்கும் பொதுவான முடிவுக்கு வருவதனையும் காணலாம். கடந்த ஒக்ரோபர் 2018இற்குப் பின்னர் இதுவரை மத்திய வங்கி வட்டிவீத அதிகரிப்பு ஏற்படவில்லை என்பது சிலருக்கு உகந்ததாகவும் காணப்படுகின்றது. சில முதல்தர நிதி நிறுவனங்கள் அடமான வட்டி வீதத்தில் சிறப்புக் கழிவுகள் கொடுப்பதனையும் கவனிக்கலாம்.

# குடும்ப...

09ஆம் பக்கத்தொடர்ச்சி

இதிலிருந்து மீள வழி தெரியாதிருத்தல், குடும்பக் கௌரவம் என்னவாகும், குறிப்பாகப் பெண் பிள்ளைகளின் எதிர்காலம் பாதிக்கப்படும் என்ற பயம். இவை யாவற்றையும் மனதில் புதைத்து தம் வாழ்வை சோகத்துடன் வாழ்கின்றனர்.

குடும்ப வன்முறை அவர்களை மட்டுமன்றி அவர்களது பிள்ளைகளையும் அதிகம் பாதிக்கின்றது. மேலும் பிள்ளைகள் உடல், உள ரீதியாகப் பாதிக்கப்படுவதுடன் அவர்களது கல்விப் பயணம் தடைப்பட்டும் உள்ளது. இவ்வாறான சூழ்நிலைகளில் வளரும் குழந்தைகள் உற்சாகம் அற்றவர்களாகவும், தாழ்வு மனப்பான்மை கொண்டவர்களாகவும் உள்ளனர். அத்துடன் நடத்தைப் பிரச்சனைகள், எதிர்காலம் பற்றிய கவலை, தற்கொலை பற்றிய எண்ணம், பின்வாங்குதல், தனிமை, வீட்டிலிருந்து ஓடுதல், கோபத்தை முகாமை செய்ய முடியாமை போன்ற பிரச்சனைகளை பிள்ளைகள் எதிர்கொள்கின்றனர். பிள்ளைகளின் வாழ்க்கை பற்றிப் பெற்றோர் ஒரு கணமாவது யோசிப்பதில்லை. இந்த நிலை பெரும்பாலான குடும்பங்களில் இன்று காணப்படுகின்றன. தாம்தான் வன்முறைக்கு உட்பட்டுள்ளோம் என்று பெற்றோர் நினைககின்றர். ஆனால் அதன் தாக்கம் எந்த அளவுக்கு குடும்பத்தின் மற்றைய உறுப்பினர்களைப் பாதிக்கின்றது என எண்ணுவதில்லை.

குடும்ப வன்முறையானது பெரும்பாலும் மறைக்கப்பட்டதொரு விடயமாகவே இருந்து வருகிறது. தமது குடும்ப நிலைமை சமூகத்துக்குக் கொண்டு செல்லக்கூடாது என்ற நோக்கமே இதற்குக் காரணமாகும். மத்தியஸ்த சபைகள் குடும்ப வன்முறைகள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கு நேரடியான அதிகாரங்களைக் கொண்டிராத போதிலும் மத்தியஸ்த சபைகளுக்குத் தவறுகள் என்ற விடயதின் மீது குடும்ப வன்முறைகள் ஆற்றுப்படுத்தப்படுகின்றன. சிலர் நீதிமன்றங்களுக்கும் செல்கின்றனர். எனினும் எமது கலாசார பாரம்பரியங்களும், சமூகக் கட்டமைப்புக்களும் குடும்ப வன்முறையை பொலிஸ்நிலையம் செல்வதைத் தடுக்கின்றன.

விட்டுக்கொடுத்தல், பொறுமை, சகிப்புத் தன்மை, மன்னிக்கும் பண்பு, எந்த



நேரத்தில் எதைக் கதைக்க வேண்டும் என்ற திறன், பெற்றோர் சொல் கேட்டல், எதையும் தீர யோசித்து முடிவு எடுத்தல், மனம் விட்டுப் பேசுதல், ஒருவருக்கு ஒருவர் நம்பிக்கையுடன் நடந்து கொள்ளல், உணர்ச்சிக்கு அடிமையாகாது வாழுதல், சிறு, சிறு பிரச்சனைகள், கருத்து வேறுபாடுகளைப் பெரிதாக எடுக்காமை, தேவையற்ற வார்த்தைப் பயன்பாடுகளைத் தவிர்த்தல், குறித்த எல்லைக்குள் நின்று கதைத்தல், உங்களுக்கு பிடிக்கும் விடயம் சில வேளைகளில் கணவனுக்கோ, மனைவிக்கோ பிடிக்க வேண்டும் என முரண்டு பிடிக்காதிருத்தல், அன்பான பேச்சு ஆகிய சிறந்த பண்புகளை சிலர் தமக்குள் வரவழைத்துக் கொண்டு மகிழ்வான வாழ்வை வாழ்கின்றனர்.

தொடர்ந்தும் குடும்ப வன்முறையில் ஈடுபடும் கணவனிடமிருந்து மனைவி விடுதலை பெற குடும்ப வன்முறைச் செயல் சட்டம் உள்ளது. இதற்குள் அகப்படாது வாழ்பவர்கள் குடும்ப விரிசல் இல்லாது ஆரோக்கியமாக வாழ்கின்றனர். குடும்பப் பிணக்கு அற்ற முறையில் வாழ நினைத்தால் வாழ முடியாதா? வாழ்ந்துதான் பார்ப்போமே.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“விண்ணளந்து வியந்து கொண்டிருக்கும் என்கண்கள், அனைத்துமளந்த எம்முன்னவர்களை அறிய விரிந்து கொள்கின்றன.”

# கீழடி அகழ்வாய்வுகள்

## கிளறப்படும் உண்மைகள்-பன்முகப் பார்வை.


- கனி -
ptons@hotmail.ca
416.261.1348

'தமிழ் வைகை' எனத் தமிழுடன் இணைத்து சங்கப் புலவர்களாற் புகழ்ந்துரைக்கப்பட்ட வைகை நதிக் கரையமைந்த கீழடியில் அகழ்வாய்வுகள் ஐந்தாம் கட்டத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில், இவ்விடத்தில் இன்னமும் 20 வருடங்களுக்கும் மேலாக அகழ்வாய்வுகள் நடத்தப்பட வேண்டுமென வல்லுனர்களும் ஆர்வலர்களும் கூறுகின்றனர். அதற்கான தொடர்ச்சித் தன்மை அந்த 110 ஏக்கர் பரப்பு மண்மேட்டிற் கிடைக்கும் என்பதனை கடந்த நான்கு வருட அகழ்வுகள் காட்டி நிற்கின்றன.

இன்று அசாமில் தொல்பொருட் களஞ்சியப் பொறுப்பாளராகப் பணிமாற்றம் செய்யப்பட்டுள்ள அமர்நாத் அவர்கள் அன்று மைசூரில் உள்ள, இந்திய மத்திய தொல்லியற் துறையின் கிளைக்குப் பொறுப்பதிகாரியாக வந்ததே எங்களின் நல்வாய்ப்பாக அமைந்திருந்தது. அவர் வைகை நதிக் கரையில் கீழடியைக் குருட்டாம் போக்கிற் தெரிவு செய்யவில்லை. மத்திய தொல்லியற் துறையினரின் அனுமதியைப் பெற்ற பின்னர் வைகை நதியின் ஆரம்பம் முதல் இறுதி வரையிற் கள ஆய்வினைச் செய்த பின்னரே தெரிவு செய்தார் என்பதனைக் குறிப்பிட்டிருந்தேன் அல்லவா. அத்துடன் இக்கட்டுரையின் தலைப்பின் விளக்கப் பகுதியிற் கூறிய வண்ணம், கிளறப்படும் உண்மைகள் பற்றியும் ஆங்காங்கு சில சிதறல்களையும் அறியத் தருவதையும் அறிவீர்கள். அந்த வகையில் அமர்நாத் அவர்கள் செய்த கள ஆய்வுகளின் போது பெறப்பட்ட அரிய தகவல்களையும் தெரிந்து கொள்வோம்.

வைகையைப் பற்றியும் தமிழரின் பழமை பற்றியும் எழுத்தாளர் சு. வெங்கடேசன் அவர்கள் பல நூல்களையும் தெளிவுரைச் சொற்பொழிவுகளையும் ஆற்றியிருப்பதை அறிவீர்கள். 'யூ ரியுப்'இல் கீழடி பற்றிய அவரது விளக்கத் தொடர்கள் பல இருக்கின்றன. ஆர்வமுள்ளவர்கள் அதனைப் பார்க்கலாம். இப்பகுதியில் அடுத்து வரும் விபரங்கள், அவரது செய்திகளின் அடிப்படையில் எழுதப்பட்டவை என்பதையும் சூறிப்பிட விரும்புகின்றேன். மேலும், அமர்நாத் அவர்களுக்கும் வைகைக் கரையைத் தோண்டிப் பார்க்க வேண்டும் என்ற துணிச்சலைக் கொடுத்ததும் கூட, சு. வெங்கடேசன் அவர்களின் கட்டுரைகளும் காரணமாக இருந்திருக்கலாம் என்ற எண்ணமும் எனக்குண்டு.

அமர்நாத் குழுவினர், தமது கள ஆய்வின் பொழுது, வைகையின் ஆரம்ப இடத்திற்குப் போயிருக்கின்றனர். மலைப்பகுதியில் ஒரு சிறிய கிராமம் வைகை உற்பத்தியாகும் இடத்திற்கு அண்மையில் இருக்கிறது. அதனை மூல வைகையின் பழந் தமிழ்க் கிராமம் என்கிறார், வெங்கடேசன். போக்குவரத்து வசதிகள் இல்லாத அவ்விடத்திற்குக் கால்நடையாக, மலைப்பகுதியில் ஏறி, ஆய்வுக் குழுவினர் வந்தபோது, அங்கிருந்த பழங்குடியினர் போன்றோர் இவர்களை வரவேற்றனர். அவ்வேளையில் தங்களின் நோக்கத்தை அவர்களுக்கு விளங்கப்படுத்திய அமர்நாத் குழுவினர், அவர்களிடம் ஏதாவது பழைய பொருட்கள் உள்ளனவா எனக் கேட்டிருக்கின்றனர், தங்களின் ஆய்வுக்காக. அவ்வேளையில்



அங்கிருந்த ஒருவர், தான் வீடு கட்டுவதற்காக, மண்ணைக் கிண்டிய வேளை ஒரு பானை அகப்பட்டது எனக் கூறி, பத்திரப்படுத்தி வைத்திருந்த அப்பானையை இவர்களுக்குக் காட்டியிருக்கிறார். இத்துறையில் மிக்க அனுபவமுள்ள ஆய்வுக் குழுவினருக்கு, கறுப்பு-சிவப்பு நிறத்தில் இருந்த அப்பானை சங்க காலத்தது என்பது புரிந்தது.

ஆய்வுக் குழுவினர் அப்பானையை என்ன செய்தனர் என்பது பற்றித் தெரியாது. ஆனால், அப்பானை கொடுத்த தகவல் அவர்களை உற்சாகப்படுத்தியது. 2000 வருடங்களுக்கு முந்தியதெனக் கருதப்படும் அப்பானை, வைகையின் தொடக்க இடத்திலேயே கிடைத்ததெனில் அவ்விடத்தில் மனிதர், தமிழர் 2000 ஆண்டு முன்னரே இருந்து வாழ்ந்து வருகின்றனர் என்பது புலப்பட்டது. இதிலிருந்து வைகை நதி நாகரிகத்தின் ஆழத்தை அவர்களால் புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

இவ்விடத்தில் எனது சொந்தக் கதை ஒன்றினைக் கூற விரும்புகிறேன், ஓர் ஒப்புமைக்காக. ஏழாலை எனது ஊர். அங்கு எங்களுக்கு, 'பூதி வளவு' என்றொரு காணியுண்டு. எனது தாயாரின் பேத்தியாரின் காலத்தில் 'பூதி' என்பவர் வாழ்ந்து வந்த வளவு என்பதால் அப்பெயரிட்டு நாங்கள் அழைத்து வந்தோம். இரண்டு பெரிய புளியமரங்கள், இரண்டு இலந்தை மரங்கள், ஒரு நாவல் மரம், சில வடலிகள் என்பவற்றுடன் ஒரு முதிரை மரமும் அக்காணியுள் நின்றன. அழகான அக்காணியின் நடுவில் சிறியதொரு மண்மேடு, ஓரடி உயரத்தில் இருந்தது. 'அவ்விடத்தில்தான் நூறு வருசத்துக்கு முந்தி, 'பூதி ஆச்சி' வீடு இருந்தது, என்று எனது தாயாரின் பேத்தியார் எனது தாயாருக்குக் கூறுவாராம். இப்போது அம்மண்வீடு தூர்ந்து போய், இருந்த இடமே தெரியாது, சிறிய மண் மேடாக இருக்கிறது' என எனது தாயார், நாங்கள் அவ்வளவுக்குப் போகையில் எல்லாம் கூறுவார்.

1970களின் ஆரம்பத்தில் அக்காணியில் ஒரு வீடு கட்டுவதற்கு உத்தேசித்தோம். வெறுமைக் காணியுள் வீடு கட்ட முன்னர், சிறுபயிர்த் தோட்டம் ஒன்று செய்வது எங்களின் வழக்கமாக இருந்ததால் அவ்வளவுக்குள் தோட்டம் செய்வதற்காக, மண்ணைப் பதப்படுத்தினோம். அவ்வேளையில் பூதியாச்சியின் வீடு இருந்த மண் மேட்டினைக் கொத்திக் கிளறிச் சமப்படுத்திய வேளையில் பூதியாச்சி பாவித்த மண் சட்டிகள், பானைகள், அலுமினியப் பாத்திரங்கள், உக்கிய அகப்பைகள், இன்னமும் உக்கிப் போன திருகாணி போன்ற ஓலைப் பொருட்கள் எல்லாம் வெளிவர, அவற்றினை எடுத்து வீசி விட்டோம்.

சரி, ஏனிந்த உண்மைக் கதை என்கிறீர்களா? வெறும் நூறு வருடங்களேயான சிறிய மண்குடிசை இருந்த இடத்தினை, வாழ்வியற் தொடர்ச்சியிற்காகப் பாவனைப் படுத்துகையில் அந்த மண்மேடு இருந்த தடயமே இல்லாமற் போய், அதனுள் கிடந்தவையும் தெரியாமற் போய், இப்போது அவ்விடத்தில் ஒரு கல் வீட்டின் இடிபாடுகள்தான் இருக்கின்றன. (இடுபாடுகளுக்கான காரணங்களை நீங்கள் அறிவீர்கள்தானே) இது எதனை வெளிப்படுத்துகின்றது எனில், தொடர்ச்சியான வாழ்வியல் ஓட்டமானது எங்களின் தடங்களை அழித்துவிடக்கூடிய அபாயம் ஒன்று உண்டு. நாங்கள் 'பூதியாச்சி' பாவித்த பொருள் என்ற காரணத்தால் அவற்றை எறிந்தது போல, அன்று தேனி மாவட்டத்தில் வீடு கட்டுவதற்காக மண்ணைத் தோண்டிய வேளை அகப்பட்டிருந்த அந்தப் பானையையும் அவர் எறிந்திருந்தால், பெரிய உண்மையின் உறைவிடம் மறைந்து பொயிருக்குமல்லவா!

பொதுவாகவே தமிழ் நாட்டில் வாழ்வியற் தொடர்ச்சி இருப்பதனால் தமிழரின் பழமையை வெளிக்கொண்டு வருவதில் இடைஞ்சல்கள் உள்ளன. கீழடியிற் கூட அவ்வகையான இடைஞ்சல்கள் ஏற்பட்டிருந்தமை பற்றியும் பார்த்திருந்தோம். இப்போ, மூல வைகையின் இடத்துக் குறிப்பினைப் பார்த்தோம். அடுத்து வைகையின் முடிவிடத்தின் அமர்நாத் குழுவினர் கண்ட அடையாளத்தைத் தெரிந்து கொள்வோம்.

ஐவகை, கடலிற் கலக்கும் இடத்திற்குக் கிட்டவாக, அழகன்குளம் என்ற இடம் உண்டு. அங்கு கிரேக்கக் கப்பல்களின் படங்கள் வரையப்பட்ட பானை ஓடுகள் உட்படச் சில பொருட்களை கள ஆய்வின் போது ஆய்வாளர்கள் கண்டு வியந்தனர். இவ்வரைபடங்கள் அழகன்குளம், சங்க காலத்தில் ஒரு துறைமுகமாக இருந்திருக்க வேண்டும் என்ற ஐயத்தை ஆய்வுக் குழுவினருக்கு ஏற்படுத்தியது. ஆழகன்குளம் என்ற துறைமுகம் இருந்ததற்கான

(தொடர்ச்சி 33ஆம் பக்கம்...)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடியிருப்பு...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆங்கில ஊடகங்களிலும் வெளியாகி யிருந்தது.

'Parkview Hill Cre. ,Toronto, Ontario' என்னும் முகவரியில் தமது சொந்த வீட்டில் கடந்த 25 வருடமாக, வீட்டுக் கார்த் தரிப்பு இடத்தில் (Own Home Driverway) வாகனங்களை தரித்து வரும் உரிமை யாளருக்கு இப்படியொரு எச்சரிக்கைக் கடிதம் 'ரொறன்ரோ நகரசபை அமலாக்கல் பிரிவினரால்' (City of Toronto bylaw Enfor cement) அனுப்பி வைக்கப்பட்டது. அது அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்ததுடன் ஊடகங்களிலும் பகிரங்கப்படுத்தப்பட்டது. ரொறன்ரோ நகரசபைச் சட்டப் பிரிவு (City of Toronto bylaw Sec. 10-5-80) என்பதன்படி 'கராஜ் கதவுக்கு முன்னால் மட்டும் வாகனம் தரிக்கலாம்' (Park in front of garage door only) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

• தனி கராஜ் (Single Garage) உள்ள ஒருவர் உள்ளே ஒரு வாகனம் தரிப்பு செய்யலாம். வெளியே கராஜ் நேரே வெளிப் பக்கமாக இன்னொரு வாகனம் மட்டும் தரிப்பு செய்யலாம்.
• இரட்டை கதவுகள் உள்ள கராஜ் ஆக



இருந்தால் (Double Door garage) உள்ளே இரு கார்கள் கதவுக்கு வெளியே இரு கார்கள் மட்டும் தரிப்பு செய்யலாம்.

இப்படியொரு சட்டம் கடந்த ஒக்ரோபர் 01, 2010இலிருந்து நகரசபையில் சட்டமாக்கப் பட்டுள்ளது.

கராஜ் கதவுகளுக்கு நேரே வாகனத்தினை தரிப்பதற்குப் பதிலாக, அந்த வாகனத் தரிப்பு இடத்தினை (Home drive way) அகலமாகப் பெருப்பித்து (சில இடங்களில் புல் தரைகள் மேலும்) மேலதிக வாக னங்கள் தரிப்பு செய்தால் $5000 டொலர் தண்டனைப் பணம் ரொறன்ரோ நகரசபை எல்லைக்குள் வழங்கப்படலாம் என்பது சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு எழுதப்பட்ட சட்டங்கள் இருந் தாலும் அதனை மீறி வீடுகளுக்கு முன் னால் பல வாகனங்களின் தரிப்புகள் தொடர்ந்த வண்ணம் உள்ளது.

நாலாவது சம்பவம் - 'வாகனம் விற் பனைக்கு' என்ற பதாகையுடன் வீதியில் நின்ற ரொறன்ரோ பெண்ணின் வாகனத் திற்குத் தண்டனை ரிக்கற் வழங்கப்பட்டது. (Toronto woman wrongly given parking tickets for putting for sale sign in car) என்ற தலைப்பில் 'Toronto Star' May 11, 2017இல் செய்தி வெளிவந்திருந்தது. நெருக்கமான ரொறன்ரோ நகரின் சில பகுதிகளில் வீடுகளுக்கு முன்னால் அவர் களுக்குச் சொந்தமாக வாகனதரிப்பு இடங்கள் இருக்கமாட்டாது. நகரசபையின் அனுமதியோடு வீதியோரமாகவே அவர்கள் வாகனதரிப்பு செய்யவேண்டும்.

கடந்த முப்பது வருடமாக ஒரே இடத்தில் வாகனத் தரிப்பு செய்து வருபவருக்கே இப்படியொரு தண்டனை ரிக்கற் காரின் முன் கண்ணாடியில் வைக்கப்பட்டிருந்தது. வீதியில் வைத்து வியாபாரம் செய்யும் நோக்கில் மேற்கொள்ளும் பதாதைகள் தென்பட்டால் அது நகரசபை சட்டங்களுக்கு முரணானது என ரிக்கற்றில் குறிப்பிடப் பட்டிருந்தது.

அதாவது 'விற்பனைக்கு' (For sale) என்ற பதாகையுடன் ஒரு வாகனம் வீதியில் நின்றால் அது நகரசபை சட்டங்களினால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. இப்படியாக இன்னும் பல இதுவரை நாம் அறிந்து கொள்ளாத மற்றும் அகப்படாத நகரசபைச் சட்டங்கள் பல உள்ளன. குடியிருப்பு மனைகளுக்கான நகரசபைச் சட்டங்களை நாம் அறிந்து கொள்ளவேண்டும்.

# தமிழகத்தை...

13ஆம் பக்கத்தொடர்ச்சி

கப் பணிகளையும் வடஇந்தியரே ஆக்கிர மிக்கின்றனர் என்ற குற்றச்சாட்டையும் முன் வைக்கிறார் வேல்முருகன். "ஒன்றிய அரசின் சிபிஐ, வருமான வரித்துறை, கப்பல் துறை, விமானப் போக்குவரத்து துறை, என்எல்சி, பெல், செயில், துப்பாக்கி தொழிற்சாலை, ஐசிஎஃப், தேசிய வங்கிகள் போன்றவற்றில் 2011 முதல் இதுவரை 60 ஆயிரம் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. இதில் ஒரு சதவீதம்கூட தமிழர் இல்லை.

வட இந்தியாவில் இந்தத் தேர்வுகளுக்குப் பயிற்சி அளிக்கும் பயிற்சி மையங்களிடமே தேர்வுகளுக்கான வினாத்தாளைத் தயாரிக்கும் பணியை ஒன்றிய அரசு வழங்கியுள்ளது. 2011ஆம் ஆண்டுவரை மேற்கண்ட தேர்வுகளில் வட இந்தியர் 'கட் ஆஃப்' 130 மதிப்பெண்கள்தான். இப்போது திடீரென்று 199 மதிப்பெண்கள் எல்லாம் எடுக்கின்றர். அதுபோல வட இந்தியத் தேர்வு மையங்களில் கொப்பி அடிக்கவும் அனுமதிக்கின்றர். இதனால், இப்போது நடக்கும் ஒன்றிய அரசுப் பணி தேர்வுகளில் இந்தி பேசும் மாணவர்கள்தான் 95 சதவீத இடத்தை கைப்பற்றுகின்றனர். தமிழரை அதிகார பதவிகளுக்கு வரவிடக்கூடாது என்னும் இந்தி லாபிதான் இதற்கு காரணம்" எனக் கூறும் வேல் முருகன் இதற்கான ஆதாரங்களையும் அடுக்கிறார்.

"தமிழ்பேசும் மக்களுக்கு இவ்வளவு அநீதி நடந்தாலும் அதுபற்றி இங்கே யாரும் வாயே திறப்பதில்லை, மக்களுக்கும் விழிப்புணர்வு இருப்பதில்லை. இதே நிலை நீடித்தால் பிற்காலத்தில் தமிழகத்தில் தமிழர் சிறுபான்மையினராக மாறும் சூழல் உருவாகும்" என்று எச்சரிக்கிறார் வேல் முருகன்.

"வட இந்தியரின் பெருக்கத்தால் இங்கு இரண்டு பிரச்சினை உருவாகிறது. ஒன்று தமிழருக்கு வேலை இழப்பு உருவாகிறது. இன்னொன்று கலாசார ரீதியான, மொழி ரீதியான சிக்கல்கள் உருவாகிறது" என்கிறார் ராஜீவ்காந்தி.

இந்த சிக்கல்களுக்கான தீர்வுகள் என்ன? வேல் முருகனிடம் கேட்டோம். "வட இந்தியர் இங்கு பணிக்கு வருவதை முற்றிலுமாக நாங்கள் எதிர்க்கவில்லை.



அதை வரைமுறைப் படுத்தவேண்டும் என்றுதான் சொல்கிறோம். வடகிழக்கு இந்திய மாநிலங்கள் போல இங்கும் வட இந்தியர் நிலம், குடியுரிமை வாங்க முடியாதவாறு சட்டமியற்ற வேண்டும். மத்திய அரசின் பணிகளில் 90 சதவீதம் மண்ணின் மைந்தர்களுக்குக் கொடுக்கவேண்டும். பழையபடி தேர்வுகள் மண்டல அளவிலேயே நடத்தப்பட வேண்டும். இதற்குத் தமிழக அரசு உடனடியாக சட்டமியற்ற வேண்டும் என்கிறோம்" என்கிறார் தீர்க்கமாக.

தொழிலாளர் வரவு அதிகரித்துள்ளதால் தமிழகத்தில் வட இந்திய வாக்காளர் எண்ணிக்கை அதிர்ச்சியூட்டும் அளவுக்கு அதிகரித்துள்ளது என்கிறார், தமிழ்த்தேசிய பேரியக்கத்தின் பொதுச் செயலாளர் கி.வெங்கட்ராமன். "இப்போது வெளியாகியுள்ள புதிய வாக்காளர்



பட்டியலில் வேகமாக இந்த அபாயம் அதிகரித்து வருவதை எடுத்துக் காட்டுகிறது. தமிழகத்தில் இந்தி பேசுவோர் எண்ணிக்கை 3 இலட்சத்து 93 ஆயிரம், குஜராத்தி மொழி பேசுவோர் எண்ணிக்கை 2 இலட்சத்து 75 ஆயிரம், மொத்தம் பிற மொழி பேசுவோர் 88 இலட்சம் பேர் என்று புள்ளிவிவரம் கூறுகிறது. ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் 10,000-லிருந்து 25,000 வரையிலும் வட இந்திய வாக்காளர் அதிகரித்து விட்டனர்.

இந்த வெளி வாக்காளர் குறுக்கீடு நாடாளுமன்றத் தேர்தலில் மிகக்கூர்மையாக வெளிப்படும். ஒட்டுமொத்தத் தமிழரின் மனநிலை தேர்தல் முடிவுகளில் வெளிப்படாமல், சீர்குலைக்கும் குறுக்கீடாக இந்த "வெளியார் வாக்காளர்" அமைவர். இது தமிழ்நாட்டு அரசியலில் நீண்ட தீய விளைவுகளை ஏற்படுத்திவிடும்" என்கிறார் கி.வெங்கட்ராமன்.

SUNCITY
FAMILY MEDICAL CENTER
Dr. Mathura P. Ravindran
M.B.B.S. (Madras), DCh (Dublin), DTM (RCSI),
Academy of Family Practice (RSA), LMCC (Canada), CCFP (Canada)
Now Accepting Patients and Walk -Ins!
• Walk-Ins welcome • Walk-Ins வரவேற்கப்படும்
• Lab on site • அலுவலகத்தின் உள்ளேயே ஆய்வகம்
• Open 7 days a week • வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்
• No wait times • காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை
CALL US TODAY (416) 292-9111
Located at the Suncity Plaza
C19 -2761 Markham Road.
Scarborough, ON. M1X 0A4
info@suncitymedicalcenter.com
Quick, quality medical care when you need it the most
உங்களுக்கு மிகவும் தேவைப்படும் போது
விரைவான, தரமான மருத்துவ பராமரிப்பு வழங்கப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சீதக்காதி - திரைவிமர்சனம்




ஐயா ஆதிமூலம் (விஜய் சேதுபதி) ஒரு நாடக நடிகர். சிறுவயதிலிருந்து நாடகங்கள் நடித்து வரும் இவரைப் பலர் சினிமாவில் நடிக்க அழைக்கின்றனர். அவரும் வரமாட்டேன் என்று, மேடை நாடகத்திலேயே நடித்துக்கொண்டு இருக்கிறார்.

ஆரம்ப காலத்தில் நிறைந்த பார்வையாளர்களையும் நிறையப் பாராட்டுக்களையும் பெற்ற இவர், காலங்கள் மாற மேடை நாடகங்களுக்கு வரவேற்புக்குறைந்து வருகிறது எனக் கவனிக்கின்றார். நாடகக் குழுவைத் தொடர்ந்து நடத்தவும் பேரனுக்கு மருத்துவ சிகிச்சைக்கும் பணம் இல்லாமல் ஐயா ஆதிமூலம் கஷ்டப்படுகிறார்.

இந்த நிலையில் அவரது நாடகக் குழுவில் ஒருவர் ஏன் திரைப்படங்கள் போல நாங்களும் பத்திரிகையில் விளம்பரம் போடக்கூடாது? எனக் கேட்கிறார். சரி என விளம்பரம் போட்டாலும், பார்வையாளர் எண்ணிக்கை அவ்வளவு அதிகரிக்கவில்லை.

இந்த நிலையில் மேடையிலே வாழ்ந்து பிரபலமான ஐயா ஆதிமூலம் எவ்வாறு திரைப்படங்களில் நடிக்க வருகிறார் எனப் படத்தைப் பார்த்து அறியவும்.

முக்கியமான கருத்தை வித்தியாசமான முறையில் இயக்குனர் இப்படத்தில் காட்டியுள்ளார். சினிமா நவீன தொலைபேசி காலத்தில் நாடகக்கலையில் ஈடுபாடு உள்ளவர்கள் குறைந்து விட்டது என முதல் சில நிமிடங்களில் இப்படத்தில் காட்டப்படுகிறது. இப்பகுதியில் ஆரம்பகால நாடக மேடைக் குழுவில் பணி புரிந்த விஜய் சேதுபதிக்கு முகாலய அரசனான ஔரங்கசீப்பாக நடிக்கும் ஒரு காட்சி வருகிறது. அதில் நாடகமேடை நடிப்பு என்பன பார்வையாளர்களுக்கு தத்துரூபமாக அக்கால நாடகமுறையைக் காட்டுகிறது.

இப்படம் சினிமாத் துறையில் உள்ள பல பிரச்சினைகளைப் பார்வையாளர்களுக்கு விளக்கிக் காட்டுகிறது. சில பிரச்சினைகள் படத்திலேயே விபரிக்கப்படுகின்றன. உதாரணத்திற்குத் தயாரிப்பாளர்கள் எவ்வாறு படக் கதைகளை பொழுது போக்கிற்காகப் பார்க்கும் மக்களுக்காக மாற்றி, தேவையில்லாத ஆட்டம், பாட்டு, சண்டைக் காட்சிகளைச் சேர்த்து படத்தின் கருத்தையும் அதில் நடிப்பவர்களின் கலை உணர்வையும் கொலை செய்கின்றனர் என முக்கியமாகக் காட்டப்படுகிறது.

பொதுமக்கள் பாட்டும் அடிதடியும் இல்லாத படங்களைக் கருத்திற்காகப் பார்க்கின்றனர் எனத் தயாரிப்பாளர் ஒத்துக் கொண்டாலும் அது வணிகரீதியில் வெற்றியளிக்கும் என அவர்கள் நம்பவில்லை எனக் காட்டப்படுகிறது. நடிக்கத்தெரியாதவர்கள் எல்லாம் அரிதாரம் பூசி ஆடை மாற்றி நடிக்கின்றனர் என்றும், வயது கூடிய நடிகர்கள் அவர்களது வயதின் அரைவாசியுள்ள நடிகைகளுடன் காதல் காட்சிகளில் நடிக்கிறதும் இதில் காட்டப்படுகிறது.

இப்படத்தில் சில நகைச்சுவை காட்சிகள் அதிக நேரமாகக் காட்டப்பட்டாலும் இப்படம் கலையின் முக்கியத்துவத்தை காட்டுகிறது. நாடகத்திலோ, திரையிலோ கலைக்கு கருத்தும் உணர்வும் தான் முக்கியம் என்கிறது இப்படம். திரைப்படத்துறையில் நடப்பதைப் பார்க்க விரும்புபவர்கள் பார்க்க வேண்டியது இப்படம்.




## DOCTORS WANTED

**Ajax, GTA, ON** - Full Time or Part Time Medical doctors required for Integrative turn key medical clinic with fully equipped medical office in great & High Flow Location. Multiple exam rooms, Pharmacy, lab, EMR, dictation service. New graduates welcome.

**Contact: 416-988-0945 / wynpluspharmacy@gmail.com**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உப்பு - கூடினாலும் குறைந்தாலும் ஆபத்து!



சிந்தனைப்பூக்கள்
எஸ். பத்மநாதன்

சீனிப் பிரியர்கள் போலவே உப்புப் பிரியர்களும் உலகெங்கம் பெருகிவருகின்றனர். எப்படியாவது கொஞ்சம் கூடுதலாக உப்பைச் சேர்த்துச் சாப்பிட்டால்தான் பலருக்கு மனநிறைவு வரும். உணவகங்கள் சேர்க்கும் உப்பினை விடவும் மேசைகளில் உள்ள உப்பினை எடுத்துத் தூவிச் சாப்பிட்டால்தான் அவர்களுக்கு திருப்திவரும். பொதுவாக அதிகமான உணவகங்களில் உள்ள மேசைகளில் உப்புப்போத்தில்கள் வைக்கப்பட்டிருக்கும். வீடுகளில் சமையல் செய்யும் பெண்கள் அடிக்கடி கறியை சுவை பார்ப்பதும் உப்பு கொஞ்சம் குறைவாக இருக்கிறது என எண்ணி தங்களுக்கு விரும்பிய மாதிரி கொஞ்சம் உப்பினை சேர்த்துக் கொள்வதும் அன்றாட நிகழ்வு. இந்த உப்புக்கு மட்டும் தேசம், இனம், பால் வேறுபாடு கிடையாது. உலகின் எந்த மூலையிலும் உப்பு மனித இனத்தின் பாவனையில் உள்ளது. அதிக உப்புச் சேர்ப்பதால் தமது உடல் நலம் பாதிக்கப்படுகிறது என்று எவரும் உணர்வதில்லை. அந்த அளவுக்கு உப்பிற்கு அடிமையாகியுள்ளோம். சீனியை 'வெள்ளைப்பிசாசு' (White Ghost) என்று அழைப்பது போல உப்பினையும் மற்றொரு 'வெள்ளைப் பிசாசு' என்றே அழைக்கலாம் போல் தெரிகிறது.

எமது உடலில் உள்ள செல்கள் செயல்பட சீனிச்சத்தும், உப்பில் உள்ள சோடியம் (Sodium) சத்தும் இன்றியமையாதவை. இரத்தத்தில் உள்ள நுண்தாதுக்களை செல்களுக்குள் எடுத்துச் செல்ல சோடியமே உதவுகிறது. இதற்கான இச்சத்து அளவுடன் இருக்கவேண்டும். எனினும் இது கூடினாலும் குறைந்தாலும் ஆபத்தானது என்பதே உண்மையாகும். சீனியை போலவே ஒரு சுவைக்காக உப்பினை சேர்த்து எமது நலத்தை நாமே கெடுக்கிறோம்.

பொதுவாக சோடியம் குளோரைட் (Sodium Chloride) என அழைக்கப்படும் உப்பானது கடல் உப்பு, பாறை உப்பு என இரு வகையில் பெறப்படுகிறது. கடல் உப்பு வெள்ளை நிறமானது. ஆனால் உப்பானது மஞ்சள், இளஞ்சிவப்பு, வெள்ளை நிறங்களில் கிடைக்கிறது. உணவுச்சுவை மட்டுமின்றி உணவை பதப்படுத்தும் (Preservation) தேவைகளிலும் இது உதவுகிறது. பொதுவாக பதப்படுத்தும் உணவுகள் பல வருடங்களுக்கு பழுதடையாமல் இருக்க உப்பே உதவுகிறது.

எமது உடலில் உள்ள நரம்புமண்டல மின்சார சமிஞ்சை (Signal)களை உருவாக்குவதே உப்பின் முக்கிய தொழிற்பாடாகும். சகல உடல் ஆரோக்கியத்தையும் தீர்மானிப்பது இந்த சமிக்ஞைகள்தான். எனவே உப்பின் அளவு எவ்வாறு இருக்கவேண்டும் என்பதில் நோய்த்தடுப்பு மற்றும் நோய்க கட்டுப்பாட்டு நிறுவனங்கள் (Centers for Disease Control and Prevention ) அறிவுறுத்துகின்றன. அமெரிக்காவின் இருதயம் மற்றும் மனித நல சேவைகளுக்கான திணைக்களம் (The American Heart Association) பொதுவாக ஒருவர் தினமும் 1500 - 2300 மில்லி.கிராம் (1.5 - 2.3 கிராம்) உப்பு சேர்ப்பது நல்லது எனக் கூறுகிறது. ஆனால் கனடாவில் ஒருவரின் நாளாந்த உப்பின் பாவனை 3400 மில்லி கிராமாக(3.4 கிராம்) அதிகரித்துள்ளது. (குறிப்பு: 1 தேக்கறண்டி உப்பு 5 கிராம் எடையுள்ளது.)



பொதுவாக உப்பு என்பது உடல் ஓய்வு, தசை நார்களின் செயல்பாடு, உடலுக்கு தேவையான திரவ உற்பத்தி, நரம்புகளுக்கான சமிஞ்சை போன்றவற்றினை தீர்மானிக்க வல்லதாகும்.

எமது உடலுக்குள் மறைமுகமாக பலவழிகளில் பதப்படுத்தப்பட்ட உணவு வகைகளினால் உப்பு சேருகிறது. பதப்படுத்தப்பட்ட உணவு வகைகளான: ஹம்பேகர் போன்ற இறைச்சி உணவு வகைகள், பலவிதமான சோஸ்வகைகள், ஊறுகாய் அச்சாறு வகைகள் பாண் கேக் வகைகள், பல்வேறு விதமான சிப்ஸ் வகைகள், பொரியல் வகைகள், பிட்சா, பற்றிஸ், மிக்சர் போன்றவற்றின் மூலம் உப்பு உட்செல்கிறது. கரையும் தன்மையை அதுகரிப்பதற்காக சில வகையான மருந்துகளில் உப்பு சேர்க்கப்படுகிறது. உடலில் ஏற்றப்படும் வலிகளுக்கு பாவிக்கப்படும் வலி நிவாரணி மருந்துகளில் சோடியம் உள்ளது.

உப்பு உடலில் அதிகம் சேரும்போது தாகமெடுக்கும். இதனால் இனிப்புப் பானங்களையும் அதிகமாக அருந்த நேரிடுகிறது. இதனால் உடலில் இனிப்புச்சத்து அதிகமாகிறது. "இவன் சாப்பிடுவது குறைவு. ஆனால் குண்டாக இருக்கிறான்." என்று பெற்றோர் சொல்வதை கேட்டிருப்பீர்கள். மூளை மட்டுமன்றி முழங்கால் வீக்கம், கைகள் வீக்கம் ஏற்படுகின்றன. உடலில் நீர் சேர்வதாலேயே இப்படி ஏற்படுகிறது. பல முதியவர்களுக்கு குடலில் புற்றுநோய், சிறுநீரகப் பழுது, வயிற்றுக் கோளாறுகள் ஏற்பட்டுவிடலாம். உடல் எடையும் கூடிவிட வாய்ப்புண்டு. இதனால் உப்பினையும் அதிகம் குறைக்கக் கூடாது என்பதனையும் உணரவேண்டும்.

மறைமுகமாக உப்பு உட்செல்லுவதில் மீன், இறைச்சி வகைகள், விதைகள் என்பன பெரும்பங்கு வகிக்கின்றன. இந்த பிரச்சினை காரணமாகவே ஒன்ராரியோவில் உள்ள உணவகங்களில் கலோரி அளவுகளை குறிப்பிடவேண்டிய சட்டம் கனடிய நலநிறுவனத்தால் அமலாக்கம் செய்யப்பட்டுள்ளது.

உப்பு அதிகம் சேர்வதால் நித்திரை சீர்குலையும் என்பதும் அண்மைய ஆய்வாகும். ஐரோப்பிய நாடுகளில் உள்ள ஆய்வுப்படி அடிக்கடி உப்பு எடுப்பவர்கள் நித்திரைக் குழப்பம் கொள்கிறார்கள் என அறியப்பட்டுள்ளது. இவர்களுக்கு இதய நோய்களும் உப்பின் அளவு கூடி எடை அதிகரிப்புக்கு (obesity) உட்படுகின்றனர். உலகம் முழுவதில் எடைகூடிய பிள்ளைகள் உருவாக உப்பும் ஒரு காரணமாகும்.

சிலருக்கு அவர்களது உடலால் உப்பினை சரிவர ஜீரணிக்க முடிவதில்லை. அதாவது மிகவும் உணர்வுபூர்வம் (Sensitive) உள்ளதால் மேலதிக உப்பினை வெளியேற்ற அவர்களால் முடிவதில்லை. உப்புள்ள உணவினை உண்டபின்பு சிலர் வாந்தி எடுப்பர். இதனால் இவர்களுக்கும் உப்பினால் பிரச்சினை உளது.

உப்பு அதிகளவு சேர்வது நீரிழிவு நோயாளரையும் பாதிக்கவல்லது. வாழ்வின் பிற்பகுதியில் இவர்களுக்கு நீரிழிவும், உயர் இரத்த அழுத்தமும் சேர்ந்து பல மோசமான விளைவுகளை ஏற்படுத்தி விடுகின்றது. மேசை உப்பு (Kosher salt), கடல் உப்பு (Sea salt), காலா நாமக் உப்பு (Kala namak salt-கறுப்புநிறம்), சீவல் உப்பு (Flake salt), சிவப்பு ஹவாயன் உப்பு (Red Hawaiian salt) இன்னும் பலவகை உபபுக்கள் உள்ளன.

உப்பின் பல்வேறு விளைவுகளை அறிந்திராத காலத்தில் உப்புக்காக எத்தனையோ பழமொழிகளை கொண்டிருந்தோம். அப்போது மருந்துவ அறிவு வளர்ந்திருக்கவில்லை. தற்போது இதன் முக்கியத்துவம் கூடியுள்ளது. ஆறு சுவையில் இந்த உப்பு சுவையும் முக்கியமானது. சாதாரண மொழியில் எதற்கும் 'உப்பு சப்பற்ற விடயம்' என்போம். இதிலும் உப்பே முதலில் வந்து நிற்கிறது. வழமையான உணவுக்கு மேல் உப்பு தெளிபவர்கள் கூட உளர். உப்பு பழைய இலக்கியங்களில் தெய்வீகப் பொரு ளாக இருந்துள்ளது. புதுமனை புகுவிழாவில் கூட உப்பு வைக்கின்றனர் கடவுகளுக்கு அடுத்த படியானது உப்புத்தான்.

ஒரு காலத்தில் 'உணவே மருந்து' என்று கூறப்பட்ட நிலை இன்று இல்லை. இப்போது மருந்தே உணவாகியுள்ளது. ஒரு சிறங்கை அரிசிக்குப் பதிலாக ஒரு சிறங்கை மருந்தை அள்ளிப்போட்டு தண்ணீர் குடிக்கிறோம். இந்த மருந்துகள் என்னென்ன செய்யும் என்று யாருக்கும் தெரிவதில்லை. இந்த இனிப்பு சுவையும், உப்பு சுவையும் சேர்ந்து மனித குலத்தினை பாதித்துக் கொண்டிருக்கின்றது. மருத்துவ உலகில் இவற்றை பிசாசுகள் என வர்ணிக்கப்படுகிறது. சிறுவர் முதல் பெரியோர் வரை இந்த இரண்டுக்கும் அடிமையாகிப் போய் அறியாமலே நோயாளிகளாக மாறிவருகின்றனர்.

உப்பு உணவுகளை உள்ளே அனு மதிப்பது மிகவும் ஆபத்தானது என்ப தனை உணர்ந்தாலே போதுமானது. ஊறு காய் முதல் கருவாடு வரை எவ்வளவோ உப்பினை உள்ளே எடுத்துக்கொள்ளும் ஆசிய நாட்டவர் மேலைத்தேசத்தை விட 20 வீதம் வாழ்நாளை இழந்து விடு கின்றனர். இதனால் உலகெங்கும் தற் போது பல விழிப்புணர்வுக் குழுக்கள் உருவாகியுள்ளன. 'உப்பை குறைத்து உண்ணு' என்ற தொனியில் 'Eat Less Salt' என்ற சுலோகம் வெளிவந்துள்ளது.

ALL LINK
TRAVEL & TOURS INC.



வேறு எந்த விமான பிரயாணச் சீட்டு முகவர்களிடமும் கிடைக்காத மிகவும் குறைந்த கட்டணம்!

| Cheapest air fares: | | All-inclusive packages: | |
| --- | --- | --- | --- |
| •Colombo | $ 1100 | •Cuba | $ 569 |
| •Chennai | $ 1060 | •Mexico | $ 699 |
| •Bangalore | $ 1040 | •Dominican& Republic | $ 899 |
| •Paris | $ 490 | | |
| •London | $ 520 | | |
| •Germany | $ 690 | | |
| •Zurich | $ 520 | | |

Contact: SUTHA
OFFICE-416 293 8700 CELL- 416 312 2995
ALL LINK TRAVEL & TOURS Inc. SCARBOROUGH. AJAX. BRAMPTON. MISSISSAUGA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகா சிவராத்திரி



அபிரா சத்தியநேசன்
அகவை -16

மகா சிவராத்திரி இந்துக்களால் மேற்கொள்ளப்படும் சிவனுக்குரிய விரதமாகும். இவ்விரதமானது வருடந்தோறும் மாசி மாதத்தில் கிருஷ்ணபட்ஷ (தேய்பிறை) சதுர்த்தி இரவில் கொண்டாடப்படும். இவ்விரதத்தினை இந்துக்கள் தொடர்ந்து கடைப்பிடிப்பர். இவ்விரதத்தின் முதல் நாள் ஒரு பொழுது உணவருந்துவர். சிவராத்திரி அன்று உபவாசமாய் அன்றைய நாள் முழுநேரமும் சிவனை நினைத்து, சிவ சிந்தனையுடன் கண் விழித்திருந்து வழிபடுவர். அடுத்த நாள் காலையில் நீராடி தரிசனம் செய்து பாரணையுடன் விரதத்தை முடிப்பர். 'சிவராத்திரி' என்பதன் பொருளாக சிவனுக்குரிய இரவு என்று கருதப்படுகின்றது. புராதன கதைகள் மற்றும் இதிகாசங்களில் மகா சிவராத்திரி பற்றிய கதைகள் மற்றும் உருவான வரலாறு பற்றி எடுத்து கூறப்படுகின்றது. காட்டிற்கு வந்த வேடன் ஒருவன் காட்டில் வழி தெரியாது அலைந்தான். இரவு பொழுது ஆகிவிட்டது. மிருகங்களின் சத்தங்கள் கேட்கத் தொடங்கிய போது பயந்த வேடன் ஒரு மரத்தின் மீது ஏறினான். கிளைக்குள் அமர்ந்திருந்த அவனுக்கு, கண் அயர்ந்தால் கீழே விழுந்து விடுவமோ என்ற பயம் இருந்தது. அதனால் தூக்கம் வராமல் இருப்பதற்கு அந்த மரத்தில் உள்ள இலைகளைப் பறித்து சிவனை உச்சரித்தபடி கீழே போட்டான்.

இவ்வாறு அன்று இரவு முழுவதும் இதனைச் செய்து தூங்காமல் விழித்து



இருந்தான். பொழுது விடிந்தவுடன்தான் தெரிந்தது. அவன் இருந்த மரம் வில்வமரம் என்றும் அவன் கீழே போட்ட இலைகள் அனைத்தும் மறைந்திருந்த லிங்கத்தின் மீதும் விழுந்தது என்றும். அவன் எதிர்பார்க்காமல் இப்படி சிவனை இரவு முழுவதும் வழிபட்டது சிவனைக் குளிரச் செய்தது. அதனால் அவனுக்கு இறைவன் காட்சி அளித்து அருளினார்.

இவ்விரதத்தை கடைப்பிடிப்பதால் அருள் கிடைப்பதோடு, நினைத்த காரியமும் நடக்கும். ஒரு வருடம் சிவராத்திரி விரதம் இருப்பதால் பல தடைவை கங்கையில் நீராடிய பலனும் புண்ணியமும் கிடைக்கும் என்பது நம்பிக்கை. நாம் தெரியாமல் செய்த பாவங்களுடன், தெரிந்து பாவங்கள் செய்திருந்தாலும் அவை நம்மைவிட்டு நீங்கிப் போகும். தீய சக்திகள் நீங்கி நன்மைகள் உண்டாகும். மன நிம்மதி, வாழ்க்கையில் முன்னேற்றம் போன்றவை கிடைக்கப்பெறும்.

# பெண்களும் சாதனைகளும்



விதுசிகா அருள்தாசன்
அகவை -13

ஒவ்வொரு வருடமும் பங்குனி மாதம் 8ஆம் திகதி மகளிர்தினம். இந்நாள் பெண்களின் உரிமைகளை அடையாளப்படுத்தும் நாளாகும். பெண்கள் வன்முறை, அடிமை, பாலியல் துஷ்பிரயோகம் போன்றவற்றில் இருந்து விடுதலையும் மற்றும் படிப்பு, வாக்குரிமை வேண்டியும் போராடி அதற்கான உரிமையை பெற்ற நாளாகும்.

முற்காலத்தில் ஆண் பெண் சமஉரிமை இல்லை. பெண்களை அடிமைகளாகவே பார்த்தனர். அவர்களை சரியாக நடத்தவில்லை. ஆனால் வருடங்கள் போகப்போக அது மாறிவிட்டது. தங்கள் உரிமைக்காகத் தாமே போராடக்கூடியவர்களாக பலர் மாறிவிட்டனர். காலப்போக்கில் தடைகளையும் மீறிப் பெண்கள் பல சாதனைகளை நிகழ்த்தினர், நிகழ்த்திக் கொண்டே போகின்றனர். சாதனை படைத்த பல பெண்களில் சிலரை பற்றிப் பார்ப்போம்.

## ரோசா பார்க்ஸ் - Rosa Parks



ரோசா பார்க்ஸ் அமெரிக்காவில் உள்ள ரஸ்கீகி அலபாமா (Tuskegee, Alabama) நகரில் பிறந்தார். அவரின் பெற்றோர் லியோனா (Leona), ஜேம்ஸ் மெக்கலே (James McCauley). 1932ஆம் ஆண்டு ரேமன்ட் பார்க்ஸ் (Raymond Parks )ஐ திருமணம் செய்தார். ரோசா பார்க்ஸ் வாழ்ந்த காலம் இனவெறி அதிகமான காலம். அந்தக் காலத்தில் பஸ்சில் முன் பகுதி இருக்கைகள் வெள்ளை இனத்தவருக்கும், பின் பகுதி இருக்கை கறுப்பு இனத்தவருக்கும் என இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்தது. வெள்ளை இனத்தவர் பஸ்ஸில் ஏறும்போது இருக்கை இல்லை-யெனில் பஸ் சாரதி பஸ்சை நிறுத்திவிட்டு கறுப்பு இனத்தவரை எழுப்பிவிட்டு வெள்ளை இனத்தவருக்கு இருக்கை கொடுப்பார். அப்படியான காலத்தில் ஒரு நாள் ரோசா பார்க்ஸ் பஸ்சில் பயணிக்கும் போது அந்த சூழ்நிலையை எதிர்நோக்க வேண்டி வந்தது. ஆனால் ரோசா பார்க்ஸ் எழுந்து இருக்கை கொடுக்காததால் அந்நகரத்தின் சட்ட விதி முறையை மீறிய-தாகக் கைது செய்யப்பட்டார். பின் அவருக்கு வேலை பறிக்கப்பட்டது. அவர் தொடர்ந்து மக்களின் உரிமைக்காகப் பேசி அதனால் கிடைத்த வருமானத்தை படிப்பு, மற்றும் அரசியல் அமைப்புக்களுக்குச் செலவு செய்தார். இவர் பல விருது-களையும் பெற்றார். பேசப்படும் பெண்கள் வரிசையில் இவரும் ஒருவர்.

## அன்னை திரேசா

இவர் மாசிடோனியா என்னும் நாட்டில் பிறந்தார். அன்னை திரேசா கிறிஸ்தவ மதத்தை சேர்ந்தவர். இவர் தனது 12ஆவது வயதில் மத வழியில் தன்னை ஈடுபடுத்தி கொண்டார். வளர்ந்தபின் கன்னியாஸ்திரியாக மாறி கஸ்ரப்பட்டவர் களுடன் தன் காலத்தை கழித்ததுடன் அவர்களுக்கு உதவிசெய்தார். அவரின் இந்த சேவையை பலரும் கண்டு கொண்டனர். நாட்டின் ஜனாதிபதி வரை சென்றது அவரின் சேவை. 1952இல் பாவனையில் இல்லாத இந்து கோவிலை 'நல்வாழ்வு மையமாக' மாற்றி அங்கு இறப்பின் வாயிலில் இருப்பவர்கள்



கௌரவமாகவும், நம்பிக்கையுடனும் இறப்பை எதிர்கொள்ள வேண்டும் என்பதே அவரது நோக்கமாகும். மதவேறுபாடு இன்றி அனைவருக்கும் ஆதரவளித்தார். அவரின் சேவைகளை கண்டு பலர் உதவி-செய்தனர். கிடைத்த உதவிகளைக் கொண்டு இந்தியாவில் மேலும் பல நல்வாழ்வு மையங்களையும், அனாதை இல்லங்களையும், தொழுநோயாளர் தங்குமிடங்களையும் திறந்தார். இந்தியாவில் மட்டுமன்றி உலகம் முழுவதும் பல கருணை இல்லங்களை திறந்து தனது சேவையை தொடர்ந்தார். பல விமர்சனங்களுக்கு மத்தியில் தன் வாழ்நாள் முழுவதையும் சேவைக்கே அர்ப்பணித்த பெருமைக்குரிய பெண் இவர். 1997ஆம் ஆண்டு செப்ரெம்பர் 7ஆம் திகதி இறைபதமடைந்தார்.

## மலலா யூசுஃப்சாய் - Malala Yousafzai

மலலா யூசுஃப்சாய் 1997ஆம் ஆண்டு யூன் மாதம் 12ஆம் திகதி பாகிஸ்தானில் பிறந்தார். இவர் சிறு வயதிலிருந்து BBC Urdu சேவைக்கு கட்டுரைகள் எழுதி வந்தார். அரசியலில் பணி புரிய விரும்பினார். தனக்கு பேச வாய்ப்புக் கிடைத்த இடங்களில் பெண்களின் கல்வியுரிமை பற்றி பேசிவந்தார். அதனால் இவருக்கு மரண அச்சுறுத்தல் வரத் தொடங்கின. 2012ஆம் ஆண்டு பெண்களின் கல்வி உரிமைக்குப் போராடும் சர்வதேச இயக்கத்தை உருவாக்கினாள். அவளது 15ஆவது வயதில் பரீட்சை எழுதி விட்டுப் பேருந்தில் வரும்போது இனந் தெரியாதோரால் சுடப்பட்டாள். இதன் பின்னர் உலகளாவியரீதியில் அவளையும்



அவளின் பெண் கல்வியுரிமைக்கான போரட்டத்தையும் பற்றியும் தெரிய வந்ததுடன் பல உதவிகளும் கிடைத்தது.

## Vigdis Finnbogadottir

Vigdís உலகின் முதல் பெண் ஜனாதிபதி ஆவார். 1930ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி ஐஸ்லாந்தில் பிறந்தார். 1975ஆம் ஆண்டு பெண்களை செய்யும் வேலைகளின் முக்கியத்துவத்தை புரிய வைக்கும் நோக்கத்துடன் 90% பெண்கள் வேலைநிறுத்த போராட்டம் நடத்தினர். 1980ஆம் ஆண்டு ஒரு பெண்ணை ஜனாதிபதி தேர்தலில் நிறுத்தவேண்டும் என

(தொடர்ச்சி 33ஆம் பக்கம்...)

# இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

# கண் புரையும் தீர்வும் – விழிகள் பற்றிய விழிப்புணர்வு

ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
(Diploma in Yoga Therapy( India)
416.617.5721/416.289.2033
(After 7 pm)



மனிதன் தோன்றிய காலம் தொட்டே கண்ணில் கண்டுபிடிக்கப்பட்ட முதல் மிகப் பெரிய கொடிய நோயாக இருந்தது கண் புரை (Cataract). வயதாகி விட்டது, கண் தெரியவில்லை எனக் கைவிடப்பட்டவர் கள் ஏராளம். உலகின் மிகப் பழமையான அறுவை சிகிச்சை கண்புரை அறுவை சிகிச்சை என்றால் அது மிகையாகாது. ஆம்! விஞ்ஞான வளர்ச்சிக்குமுன் புரட்சி கண்ட கண் புரை நீக்க அறுவை சிகிச்சை மிகப் பலருக்கு பயனும் வெகு சிலருக்கு பிரச்சினையும் தந்துள்ளது.

கண்புரை கண்டவர், வைத்தியரை நாடும் போது தைரியம் கொடுத்து மனப் பயிற்சிகள் கொடுத்து, நம்பிக்கை கொடுத்து (இவற்றை மயக்க மருந்து போல) நெருஞ்சி முள் அல்லது கூர்மையான முள் கொண்டு புரை கொண்ட பகுதியை குத்தி உள் தள்ளிவிட்டு கோழி அலகு இரத்தம், தாய்ப்பால் போன்ற வற்றை விட்டுக் குணப்படுத்தி உள்ளனர். (ஆதாரபூர்வமான சான்றுகள் இல்லை) பார் வையே சற்றும் இல்லாத சிலருக்கு இச்சி கிச்சை ஓரளவு பயன் தந்தாலும் மிகுந்த வலியும் பின் மோசமான சில விளைவு களையும் சந்திக்க நேர்ந்தாலும் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு இவை படிக்கற்களாய் அமைந்தன.

### கண்புரை என்றால் என்ன?

கண் புரை என்பது விழி ஊடக வில்லையின் ஒளி ஊடுருவும் தன்மையிழத்தலே ஆகும். இதனால் பார்வையின் ஒளி விழியினுள் செல்வதில் ஏற்படும் சிரமமே கண் புரை பிரச்சினை ஏற்பட்டோருக்கு பார்வைக் குறை பாடு அல்லது மிக மங்கலான (திரைக்குப் பின் பார்ப்பது போல) பார்வை இருக்கும்.


### கண் புரைநோய் எவ்வாறு ஏற்படுகிறது?

1. ஸெனைல் கட்ராக் (Senile Cataract): பெரும்பாலான வயதானவர்களுக்கு ஏற்படு கிறது. ஊட்டச்சத்துக் குறைவினாலும், முது மையில் விழி ஊடக வில்லையில் ஏற்படும் மாற்றங்களாலும் மெல்ல மெல்ல பார்வை யானது மிக மங்கலாக ஆரம்பிக்கும். நாளாக நாளாக பார்வைத் திறன் குறைந்து கொண்டே போகும்.

2. ட்ரோமேட்டிக் கட்ராக் (Traumatic Cataract): சிலருக்கு கண்ணில் அடிபடும் போது, பந்து படுதல், பலத்த காயம் கண்ணிலோ கண்ணிற்கு அருகிலோ ஏற் படுதல், மரம் செடியின் கிளைகள் வேக மாகப் படுதல், கூர்மையான பென்சில், குச்சி இவை படுதல் காரணமாய் கண்விழி ஊடக வில்லையில் அதிர்வு ஏற்பட்டு புரை விழும்.

3. கன்ஜனைட்டல் கட்ராக் (Congenital Cataract): பிறக்கும்போதே குழந்தை கண் புரையுடன் பிறக்கலாம். கருவுற்ற தாய் எடுக்கும் வீரியம் மிகுந்த மருந்துகளின் பின்விளைவாக, பரம்பரை காரணமாக, இவற்றோடு மற்றைய சில காரணங்களும் இருக்கலாம்.

4. டாக்ஸிக் கட்ராக (Toxic Cataract): நீரிழிவு நோயாளிகளுக்கு நீரிழிவின் பக்க விளைவாக மற்றும் ஆஸ்துமா, இதய




நோயாளிகள் உட்கொள்ளும் ஸ்டீராய்டு (steroid) மருந்துகளால் கண்புரை வரலாம்.

5. ரேடியேசனல் கட்ராக் (Radiation Catract): அல்ட்ரா வயலட் (Ultraviolet) ஒளி, எக்ஸ் கதிர்கள் வேறு சில கதிர்கள் காரணமாக கண்புரை வரலாம்.

காரணங்கள் பல இருந்தாலும் கண்புரை நீக்கத்திற்கு அறுவை சிகிச்சை ஒன்றே தீர்வு. மிகமிக மகிழ்ச்சியான செய்தி என்ன வென்றால் ஒருவர் 90 சதவீதம் கண் புரையினால் மட்டும் பார்வை இழந்திருப் பாரேயானால் அந்த 90 சதவீதமும் அறுவை சிகிச்சைக்குப் பின் திரும்பப் பெறும் வாய்ப்பு உண்டு.

### அறிகுறிகள்:

கண்புரையினால் விழி ஊடக வில்லையில் ஏற்படும் மாற்றங்களை பொறுத்து சப் கேப் ஸீலர் (Subcapsular Cataract), நியூக்ளியர் (Nuclear cataract) கார்டிகல் (Cortical Cataract) என வகைப்படுத்தலாம்.

• ஆரம்பத்தில் லேசாக மங்கலாக தொடங் கும் பார்வை படிப்படியாய் குறைய ஆரம பித்து முற்றிலும் மங்கலாக அல்லது பார் வையற்ற நிலைவரை போகலாம்.

• படிப்பதில் சிரமம் அல்லது படிக்கும்போது போட வேண்டிய கண்ணாடி அடிக்கடி மாற் றும் நிலை.

• நிறங்கள் சாயம் போனது போல் தெரிதல்.

• சிலருக்கு இரவில் பார்வை குறையும். விழி ஊடக வில்லையின் ஓரப்பகுதியில் புரை இருப்பின் இரவு நேரம் அல்லது இருட்டான அறை பகுதியில் பார்வை குறையும்.

• சிலருக்கு பகலில் பார்வை குறையும். விழி ஊடக வில்லையின் மையப் பகுதியில் புரை இருக்குமானால் வேகமாக பார்வைக்குறை பாடு ஏற்படும். உடனடியாக அறுவை சிகிச்சைக்கு பரிந்துரைக்கப்படும்.

### கண் புரை சிகிச்சை

• ஆரம்பக் காலக் கட்டத்தில் கண் பரிசோதனை செய்து கண்ணாடி அணிதல் நன்று.

• இயல்பு வாழ்க்கையில் படிக்க, பார்க்க, தொழில் செய்ய... இப்படி பாதிப்பு ஏற்பட்டால் அறுவை சிகிச்சைக்கு பரிந்துரை செய்யலாம்.

### சிகிச்சைக்கு முன்னும் பின்னும்

அறுவை சிகிச்சை, புறநோயாளிகளைப் (outpatients) போன்று எளிமையாக உள்ளது. பக்க விளைவுகள் குறைந்து விட்டது. முன்னும் பின்னும் கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்புகள், எச்சரிக்கையும் குறைந்து விட்டது. இருப்பினும் மருத்துவர் கூறும் எளிய அறிவுரைகளை கடைபிடிக்க வேண்டும்.

• ஆரம்பக் கட்டத்தில் இன்ட்ரா கேப்ஸுலர் எக்ஸ்ராக்ஷன் (Intracapsular cataract extraction -ICCE ) முறையில் முழு லென்ஸ் (lens) எடுத்து விடுவர். அதன் பின்னர் 8-0 (8-0 polypropylene sutures) தையல் போடுவர். குணமாக நாட்கள் ஆகும். ஏனெனில் 12mm அளவுக்கு அறுவை நடக்கும். குணமான பின் ஒரு தடிமனான கண்ணாடி அணிய நேரிடும். ஆனால் இந்தமுறை கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பே முடிந்து விட்டது.

• 30 ஆண்டுகளுக்கு முன் மேற்கண்ட முறையில் அறுவைக்குப் பின் ஆன்டிரியர் சேம்பர் லென்ஸ் (Anterior Chamber Lens) வைக்கும் முறை இருந்தது. பின்னாளில் எக்ஸ்ட்ரா கப்ஸுலர் எக்ஸ்ட்ராக்ஷன் (Extra-capsular cataract extraction - ECCE) முறையில் போஸ்டிரியர் சேம்பர் லென்ஸ் (Posterior chamber lens ) வைக்கும் முறை அறிமுகம் ஆனது. இதில் 3 பீஸ்( three piece ), 1 பீஸ் ( one piece ) என வகை வளர்ந்தது.

• நவீன காலகட்டத்தில் 1.5mm மட்டும் துளையிட்டு கண் புரை கொண்ட இயற்கை விழி ஊடக வில்லையின் மேற்புற தோலையும், நடுப்பகுதியையும் கரைத்து எடுத்துவிட்டு சுருட்டி வைக்கக் கூடிய செயற்கை விழி ஊடக வில்லை பொருத்தி மிக விரைவாக செய்யக்கூடிய அதி நவீன சிகிச்சைகள் வந்துவிட்டன. மேலும் பல்குவியலென்சும் (multifocal lenses) பொருத்திக் கொள்ளலாம்.

### கண்புரையின் சிகிச்சையின் பக்க விளைவுகள்

இன்று பக்க விளைவுகள் மிகமிகக் குறைவாகவே உள்ளது. கண் கூசுதல், டிஸ்லொகேஷன், (dislocation), தொற்று பரவுதல் போன்ற ஒரு சில பிரச்சினைகள் ஏற்படலாம். ஆனால் இன்று பக்க விளைவுகளைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை.

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC
• கழுத்து, • முதுகு நோவு • வாகன விபத்து • மன அழுத்தம் • விளையாட்டுக் காயங்கள் • தலையிடி, தலைவருத்தும்
போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்
WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:
• STRESS • TENNIS ELBOW PROBLEM
• SKIN PROBLEM • TREAT WITH MASSAGETHERAP
• RESPIRATORY PROBLEMS • ALLERGIES
• DIGESTIVE PROBLEMS • SEXUAL PROBLEMS
• VARICOSEVEINS • SEXUAL PROBLEMS
• BACK PROBLEM /NECK PROBLEM • CHOLESTEROL • TUMOR
• FOOT PROBLEM

Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.
HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING
Cough, Flu, Depression, Anxiety, Asthma, Tonsillitis
Gout, Arthritis, P.M.S, Leucorrhea, Migraines, Hair Loss
Diabetes, Cystitis, Cancer, Prostatitis, Obesity, Hemorrhoids
Stomatitis, Colitis
Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER
TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A New project WELL by TRIDEL




## 3 CONDO BUILDINGS TOTAL 758 HIGH END UNITS FOR SALE

FOR EARLY REGISTRATION
CALL HOMELIFE/GTA REALTY INC.

New and Experienced Sales reps/Brokers are welcome to join our successful team.

Free Real Estate classes start every week.
- Office open 7 days
- 9:00 am - 9:00 pm
- Over 5,000 Sqft. office
- Conveniently Located in GTA Square Mall

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"

For More info. Call 416.321.6969

HomeLife / GTA Realty Inc. *Brokerage

5215 Finch Ave. E., #203, Toronto ON. M1S 0C2

*Independently Owned & Operated



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிஜி கருணா நினைவுகள்

**சஞ்சிகை வடிவமைப்பாளர், தமிழ் எழுத்து உருவமைப்பாளர், கணினி வரைகலை நிபுணர், சிறந்த ஓவியர், தொழில்நுட்பவியலாளர், புகைப்படக் கலைஞர் என்றொரு தமிழ் ஆளுமையை இழந்து நிற்கின்றோம்.**

**எமது தொடர்பு 'விளம்பரம்' இதழுக்கும், 'உலகத்தமிழோசை'க்கும் அப்பாற்பட்டது.**
**நேற்றைய நினைவுகள் அன்றைய நினைவுகளாகத் தோன்றுகிறது.**
**கருணாவின் ஆத்மா சாந்தி அடையட்டும்.**
**- விளம்பரம் - உலகத்தமிழோசை**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹொலண்ட் நாட்டை காத்த சிறுவன்



சுந்தரம் இந்திரராஜா
indrarajah@gmail.com

ஹொலண்ட் என்றால் உட்குழிவான அல்லது தாழ்வான நிலம் என்ற பொருள். அடர்த்தியான மரங்கள் கொண்ட நிலம் என்ற பொருளும் உண்டு. நெதர்லாந்து (Netherlands) என்றால் நீர் நிலங்கள் என்ற பொருள். ஒல்லாந்து அல்லது ஹொலண்ட் (Holland) என்பது நெதர்லாந்தின் மேற்கத்திய பகுதியில் உள்ள வடக்கு ஹொலண்ட் மற்றும் தெற்கு ஹொலண்ட் ஆகிய இரு மாகாணத்திற்கு வழங்கப்பட்ட பெயராகும். மேலும், ஹொலண்ட் என்ற சொற்பதம் மொத்த நெதர்லாந்தையும் குறிக்க தொடர்ந்து பயன்படுத்தப்படுகிறது. இந்தப் பயன்பாடு அதிகாரபூர்வமற்றதும் குழப்பமானதும் என்றாலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்நாட்டு மக்கள் டச்சு மொழி போசுவதால் இவர்களை டச்சுக்காரர் என்கிறோம். வடக்கிலும் மேற்கிலும் வடகடலும் தெற்கில் பெல்ஜியமும் கிழக்கில் ஜெர்மனியும் இந்நாட்டு எல்லைகளாக அமைந்துள்ளன.

நாடு காத்த டச்சு சிறுவன் (The Little Dutch Boy Who Saved Holland) பற்றி எங்களுடைய நாலாம் வகுப்பு பாடப் புத்தகத்தில் கதையாகப் படித்திருக்கிறோம். இந்த நாட்டில் நிகழ்ந்த வீரச் செயல்தான் அந்தக் கதை: ஹொலண்ட் தேசம் கடல் மட்டத்திற்குக் கீழே அமைந்த தேசம். அதனால் நாடு சூழ கடல் தண்ணீர் உள்ளே போகமால் இருப்பதற்கு அணை கட்டப்பட்டுள்ளது. ஒரு முறை கடற்கரை ஓரமாக ஒரு 15 வயது டச்சு சிறுவன் ஹான்ஸ் பிறிங்கர் (Hans Brinker) நடந்து சென்றுகொண்டிருக்கும்போது அணையில் இருந்து ஒரு துவாரத்தினூடாக கடல் தண்ணீர் உள் புகுவதை கண்டான். அந்த துவாரத்தை தன் கையால் அடைத்து கொண்டு அந்த குளிரிலும் இரவு முழுக்க இருந்தானாம். விடிய ஊரவர்கள் கண்டு ஆவன செய்தார்களாம். அவன் அப்படி தண்ணீர் வடிவதை தடுக்காவிடில் நாடு அழிந்திருக்குமாம். அதனால் நாடு காத்த சிறுவன் என்று சொல்லி அவனை கௌரவித்தார்களாம்.

நாடு கடல் நீர் மட்டத்திற்குக் கீழ் என்பதும், ஒவ்வொருவரும் நாட்டுப் பற்றுள்ளவராய் இருத்தல் அவசியம் என்பதும் இக்கதையிலிருந்து நாம் அறிந்து கொள்கிறோம். ஹொலண்ட் நாடு கடல் நீர் மட்டத்திற்குக் கீழ் என்பது எப்படி சாத்தியமாகும் என உங்களுக்குள் கேள்வி எழலாம். மலைகள் இல்லை, தரை மட்டமான பீட்பூமி நீர்ப் பற்று புதர் மற்றும் சதுப்பு நிறந்த சூழல். நிலம் தண்ணீரால் நிரம்பலாம் என்பதனால் ஹொலண்ட் மக்கள் விழிப்பு நிலையில் எப்போதும் காணப்படுவார்கள். ஹொலண்ட் வெள்ள அபாயத்திற்கு உட்படுவதிலிருந்து பாதுகாக்க தொடர்ச்சியான வடிவால் முறை அத்தியாவசியமானதாக இருக்கிறது. ஹொலண்ட் நீண்ட வரிசையிலமைந்த நெதர்லாந்து கடற்கரை மணற்குன்றுகளால் பாதுகாக்கப்படுகிறது. உலக வெப்பமாதல் காரணமாக கடல் நீர் மட்டங்கள் உயர்ந்தால் உடனடியாக மூழ்கும் நாடுகளில் நெதர்லாந்தும் ஒன்று. அடிக்கடி கடல் குறித்த பிரச்சினைகள், கடற்



பயணங்கள் என்று இருந்ததால் டச்சு நாட்டவர் கப்பல் கட்டும் நுட்பம், பாலம் கட்டும் நுட்பம் ஆகியவற்றில் பழங்காலம் தொட்டே சிறந்தவர்களாக இருக்கின்றனர்.

பத்தாம் நூற்றாண்டில் குடியேறிகள் இந்த நிலத்தை வடிகால்கள் வெட்டி நீரை வடிகாலுக்குள் வடியச் செய்து தரை சதுர்ப்பு நீக்கப்பட்ட போது தரை சுருக்கத்தினால் சில அடிகள் பதிந்தன. மண் சரிவும் ஏற்பட்டது. தீவிர முயற்சியின் பின்னர் நிலச் சீர்திருத்தத் திட்டங்களைத் தொடங்கினர், ஏரிகள், புதர் நிலங்கள் மற்றும் சேற்று நிலங்களை பயிர் நிலங்களாக மாற்றினர். இந்த முறை கொண்டு மீட்கப்படும் தீவு போன்ற நிலத்தை போல்டர் (Polder) என்பர். இன்று சுமார் மூன்றில் ஒரு நெதர்லாந்தின் நிலப்பகுதி கடல் மட்டத்திற்கு கீழ் உள்ளது. மிகத் தாழ்ந்த பகுதி கடல் மட்டத்திலிருந்து 22 அடி (6.7 மீட்டர்) கீழே இருக்கிறது. சுமார் சரிபாதி நெதர்லாந்தின் நிலப்பகுதி கடல் மட்டத்திற்கு 3 அடி (1 மீட்டர்) மேல் உள்ளது.

இயற்கை பேரழிவுகளால் ஐரோப்பாவில் மிகவும் பாதிக்கப்படும் நாடு நெதர்லாந்து. பெப்ரவரி 01, 1953 இரவு, ஒரு வசந்தகால கடல் நீர் மட்ட உயர்வு மற்றும் வட கடலில் உருவான வடமேற்கு புயல் காற்றும் சேர்ந்து ஐக்கிய ராஜ்யம், பெல்ஜியம் மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளை பெரிய இயற்கை பேரழிவுக்குள்ளாக்கியது. நெதர்லாந்தில் மட்டும் 1900 பேர், கால் நடைகள் மற்றும் உடமைகள் அழிந்தன.

1282 ஆண்டளவில் ஒரு தச்சுத் தொழிலாளி அரபு தேச வடிவமைப்பை ஒத்த காற்றாலைகள் (Windmills) சிலவற்றை வடிவமைத்து வீசும் காற்றைப் பயன்படுத்தி மேல் விசிறிகளை சுற்றச் செய்து அடித்தளத்திலுள்ள மரச் சில்லு வாளிகளின் (Scoop Wheel) மூலம் நீர் ஒரு வடிகாலிலிருந்து உயரமான வடிகாலுக்கும் வடிகால்வாயிலிருந்து கடலுக்கும் நீர்

(தொடர்ச்சி 33ஆம் பக்கம்...)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்திலாந்திக் சமுத்திரத்தில் ஓர் அழகிய தீவு
# Dominican Republic
## Punta Cana & Puerto Plata



## இங்கு ஒரு சுற்றுலா பிரயாணம்
## வாருங்கள்! பாதுகாப்பான உல்லாச வசதிகள் ஏராளம்!

- அதி உயர் வசதிகளுடன் தங்குமிடம்
- உணவு வகைகள் பானங்கள்
- விமான நிலையத்திலிருந்து போக்குவரத்து (Helicopter , Limousine, SUV)
- 3-12 வயது சிறுவர்களுக்கு அரைக் கட்டணம்
- விமானச் செலவு $475 - $650 உங்களுடையது

- Individual Room / Couple Room
- Group Rooms / Family Resort
- 14 Restaurants
- 12 Bars
- 9 Swimming Pools
- 5 Beaches

விசேட விலைக்கழிவு கட்டணத்தில் Puerto Plata வுக்கு ஏப்பிரல் 16-23 திகதி வரை ஏழு இரவுகள் கொண்ட குழு பயணத்தில் இன்னமும் எட்டு பேருக்கு மாத்திரம் இடம் உண்டு. நபருக்கு US$2200 பெறுமதியான Share Holder Member Package இப்பொழுது சலுகை விலையில் CAN$1000 இற்கு வழங்குகிறோம் ( விமானச்சீட்டு தனியானது)

**மேலதிக விபரங்களுக்கு:**

# Raja Nadarajah
## Cell: 647.404.1671

email: rajanadarajah@gmail.com website: myvipresort.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் நிற்பவை -12 முதல் இந்தியப் பயணம்



- துறையூரான் -

## மதுரை மீனாட்சி அம்மன் கோவில்

சென்ற கட்டுரையில் இக்கோவில் பற்றிய பல தகவல்களைப் பார்த்தோம். இங்கு இக் கோவிலின் புராதன வரலாறு பற்றியும் மதுரை நகர் பற்றியும் பார்ப்போம். 2500 வருடங்கள் பழமையான மதுரை நகர் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் இந்துசமய வர லாற்றிலும் முக்கியமான ஓர் இடத்தை வகிக்கிறது. அத்துடன் இந்நகரம் திருவாலாய், பூலோக கயிலாயம் கடம்பவனம், மாடக்கூடல் போன்ற பல பெயர்களால் அழைக்கப்படுகிறது.

மதுரை நகரம் பற்றிய பலவரலாறுகள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் முக்கியமான தாகக் கருதப்படுவது வருமாறு: கடம்பவன மாக இருந்த காட்டை அழித்து அழகிய நகரமாக்கும்படி பாண்டிய நாட்டை ஆட்சி புரிந்து வந்த குலசேகர பாண்டியனின் கனவில் சிவபெருமான தோன்றிக் கூறிய-தால், அவன் காட்டை அழித்து மதுரை எனும் அழகிய நகரை உருவாக்கினான் எனக் கூறப்படுகிறது.

முதலில் தடம்வனக் காட்டில் சுயம்பு லிங்கத்தை கண்டறிந்த மன்னன் கோவி லைக் கட்டியபின் மதுரை நகரைக் கட்டி னான் எனவும் வரலாறு கூறுகிறது. இக் கோவிலில் இரு சன்னதிகள் இருப்பதை முன்னர் பார்த்தோம். மூலவராக சுயம் புலிங்கமான சுந்தரேசுவர் உள்ளார். அம் பாள் மீனாட்சியாகக் காட்சி தருகிறாள். இவரது விக்கிரம் மரகதக் கல்லால் ஆனது. அம்மானின் கருவறையானது 32 சிங்கங் களும் 64 சிவகணங்களும், 8 கல்யானை



களும் தாங்கி நிற்கும் அபூர்வமானதாகும். இக்கருவறை விமானத்தைத் தேவேந்திரன் அமைத்தாகக் கூறப்படுகிறது. மீன் போன்ற கண்களைப் பெற்றதால் மீனாட்சி எனப் பெயர் பெற்றார் அம்பாள். மீன் தன் முட்டை-களைப் பார்வையால் தன் மயமாக்குவது போல் அம்பாள் தன் பக்தர்களைப் பார்வை யால் அருள் பாலிக்கிறாள். மீனாட்சியின் தோளில் கிளியொன்று காணப்படுகிறது. இந்திரன் சாபவிமோசனத்துக்காக இத்தலத் தைத் தேடி வந்தபோது கிளிகளே சிவ வழிபாட்டிற்கு உதவி செய்தனவாம். இங்கு அம்பாளுக்கு அபிஷேகம் செய்யப்பட்ட பின்பே சுவாமிக்கு அபிஷேகம் நடைபெறுகிறது.

இக்கோவிலிலுள்ள கோபுரங்களில் சில முக்கியமானவற்றைப் பற்றிப்பார்போம்.

1. சுந்தரேசுவரரின் வாசலிலுள்ள முத்தளக் கோபுரமும் அம்மன் ஆலயத்தின் மத்திய பகுதியும் ஆரம்பகால கோவிலின் இடிக் கப்படாத எஞ்சிய பகுதிகளாகும். இவை குல சேகர பாண்டியனால் (1190-1216) கட்டப்பட்ட வையாகும். இவ்வரசன் ஒரு புலவனாகவும் இருந்து 'அம்பிகை மாலை' என்ற பாடலை இயக்கினான். அத்துடன் மகா மண்ட பத்தையும் பல சிறு கோவில்களையும் கட்டுவித்தான்.

2. மகாவர்மன் சுந்தர பாண்டியன் 1231இல் ஒரு கோபுரத்தைக் கட்டிப் பின் அதனைப் பெருப்பித்து மீளக்கட்டி சுந்தர பாண்டியன் திருக்கோபுரம் எனப் பெயரிட்டான்.

3. வேம்பத்தூரர் ஆனந்தநம்பி 1227இல் முத்தளக் கோபுரத்தை முதலில் கட்டினார். இக்கோபுரம் மீனாட்சி கோவிலுக்கும் கிளிக் கூட்டு மண்டபத்துக்கும் இடையில் உள்ளது. இது வேம்பத்தூரர் மண்டபம் எனவும் அழைக்கப்படுகிறது.

4. சுந்தரேஸ்வரர் கோவிலுக்குக் கிழக்கே 5 தள மண்டபம் உள்ளது. இது 1372இல் வாசுவப்பனால் கட்டிமுடிக்கப்பட்டது. 50 ஆண்டு காலமாக இடிக்கப்பட்ட நிலை-மையிலிருந்து கோவிலை விஜயநகர மன்னர்கள் மீளமைத்து வழிபாட்டுக்குத் திறந்து வைத்தனர். சுந்தரேஸ்வரர் ஆலயத்தின் மேற்கே உள்ள கோபுரம் 1374இல் மல்லப்பனால் கட்டி முடிக்கப்பட்டது.

5. கோவில் வாசலிலுள்ள கல்வெட்டுக்களின் படி, இரண்டாம் பிரகாரத்திலுள்ள நாயக்க கோபுரம் 1530இல் விஸ்வப்ப நாயக்கரால் கட்டப்பட்டது. அதே காலத்தில் பலாகைக் கோபுரம் மல்லப்பனால் கட்டுவிக்கப்பட்டது. இவற்றை ஒரே சிற்பக் கலைஞர்கள் கட்டியிருக்கலாம்.

6. கடக கோபுரம், மீனாட்சி கோவிலில் உள்ளது. இது தும்பிச்சி நாயக்கரால் 16ஆம் நூற்றாண்டில் கட்டுவிக்கப்பட்டது. இது 1963ஆம் ஆண்டு வரைக்கும் சுவரால் தடுக்கப்பட்டிருந்தது மீளமைக்கப்பட்டு 1963இல் திறக்கப்பட்டது.

7. கணேசர் ஆலயத்துக்கருகில் உள்ள நடுக்கட்டுக் கோபுரம் சிறீமலை செவ்வந்தி மூர்த்திச் செட்டிக்குடும்பம் கட்டினர். இவர்களே ஆதி வீதியின் வடக்குப் பகுதியிலுள்ள 5 தள இடபக்குறிக் கோபுரத்தை மீளமைத்தனர்.

8. 9 தளங்களைக் கொண்ட மிக உயர்ந்த தெற்குக் கோபுரத்தையும் இக்குடும்பத்தவரே கட்டுவித்தனர். இது 16ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் கட்டப்பட்டது. இதில் 1500க்கு மேற்பட்ட கதாபாத்திரங்களைக் கொண்ட புராணக் கதைகளைச் சித்தரிக்கும் கலைவடிவங்கள் உள்ளன.

9. மொட்டைக் கோபுரம் கிருஷ்ணப்ப நாயக்கரால் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இதை 1878இல் கட்டி முடித்தவர்கள் அமராவதி பூரூர் வையிநகரச் செட்டி குடும்பத்தினர்.

### கோவில் தடாகம்

1516இல் சாலுவநாராசன நாயக்கர் யாத்திரிகர் குளிப்பதற்கென ஏழுகடல் எனப் பெயரிட்ட ஒரு தடாகத்தைக் கட்டுவித்தார். இது பொற்றாமரைக்குளம், ஆதிதீர்த்தம், சிவகங்கை எனவும் அழைக்கப்படுகிறது. இது 165அடி நீளமும் 120அடி அகலமும் கொண்டது. இதன் சுவர்களில் பல சித்திரங்கள் வரையப்பட்டுள்ளன. 17ஆம் 18ஆம் நூற்றாண்டுகளில் வரையப்பட்ட வற்றுள் சில பகுதிகளே குளத்தின் மேற்குச் சுவரில் காணப்படுகின்றன. இதில் சுந்தரேஸ் வரருக்கும் மீனாட்சிக்கும் திருக்கல்யாணம் நடைபெறுவதும் வியஜரங்கச் சொக்க நாதரும் ராணி மங்கம்மாளும் அங்கே இருப்பதும் வரையப்பட்டுள்ளது.

ஆறு தூண்களைக் கொண்ட ஓர் ஊஞ்சல் மண்டபம் இக்காலத்தில் செவ்வேந்தி மூர்த்திச் செட்டியினால் கட்டப்பட்டது. இது வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் பூசையின் போது பாவிக்கப்படுகிறது. இங்கே கோவிலின் முழு கட்டிடங்களின் மாதிரி வடிவம் 1985இல் அமைக்கப்பட்டு காட்சி தருகிறது.

### முக்கியமான மண்டபங்கள்

1. 100 தூண் நாயக்க மண்டபம். இது சின்னப்ப நாயக்கரால் இரண்டாம் பிரகாரத்தின் வடகிழக்குப் பகுதியில் 1526இல் கட்டப்பட்டது. இங்கே நடராஜர், வழக்கமான சிலைகளிலுள்ள வலது காலுக்குப் பதிலாக இடதுகாலைத் தூக்கி ஆடும் தாண்டவ நிலையில் காட்சி தருகிறார்.

2. கம்பத்தடி மண்டபம் இது - 1572 - 1595இல் கிருஷ்ண வீரப்ப நாயக்கரால் கட்டப்பட்டது. இங்கே நுண்ணியமாக வடி-வமைக்கப்பட்ட பல சிலைகளைக் காணலாம். முக்கியமாகச் சிவனின் 8 வடிவங்களைக் காணலாம். அர்த்த

(தொடர்ச்சி 33ஆம் பக்கம்...)

ESTD - 1996

நயினாதீவு கனேடியர் அபிவிருத்திச் சங்கம் விடுக்கும் அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் **80 Nashdene Road, C-70** எனும் முகவரியிலுள்ள தீபம் கலைக்கூட மண்டபம், கலைப்பயிற்சி வகுப்புக்களுக்கும், அலுவலக கலந்துரையாடல்களுக்கும் ஏற்றால்போல் அமைக்கப்பட்டுள்ளதால் முழுநேர, பகுதிநேர வகுப்புக்கள் மற்றும் கலந்துரையாடல்கள் நிகழ்த்த விரும்புபவர்கள் எம்மோடு தொடர்பு கொள்ளவும். நன்றி


**Baba - 416-662-0130**

**Vathanan - 647-500-3648**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசயக் கோயில் அங்கோர்



கலாநிதி
இரத்தினம் நித்தியானந்தன்

**சிவா** - ஆங்கோரின் முந்தைய கால கலை வடிவங்களில் இவர் அரி-அரன் என்ற உருவத்தின் ஒரு பகுதியாக சித்தரிக்கப்பட்டார். பிறகு லிங்க வடிவில் இங்கு காட்சி தருகிறார்.

அழிக்கும் கடவுளான சிவன் பல மங்கலகரமான செயல்களுக்கும் தொடர்பு உள்ளவர். அனைத்து கலைகளின் படைப்பாளராகச் சிவன் விளங்குவதோடு உலகத்தின் விதியை தனது நடன லயத்தின் மூலம் ஒழுங்குபடுத்துகிறார். இவர் மேரு மலை மீது வாழுகிறார். இவர் சுருளான கொண்டை அணிந்திருக்கிறார். இவர் நெற்றியில் மூன்றாவது கண் இருக்கிறது. இக்கண் திறந்தபடி இருந்தால் பிரபஞ்சமே அழியும் என்பதால் இக்கண் எப்போதும் மூடியவாறே இருக்கிறது. இவருக்கு நான்கு கரங்கள். இவரிடம் உள்ள பொருள்கள் இவருடைய அவதாரங்களுக்கு ஏற்ப மாறுபடும். ஆனால் திரிசூலம் எப்போதும் இருக்கும். இவர் ஒரு துறவியைப் போல, பூணூலாகப் பாம்பை அணிந்தவாறு காட்சியளிக்கிறார். இவருடைய மனைவி பார்வதி. இவர் சில நேரங்களில் நந்தி என்ற காளையில் பவனி வருகிறார். கெமர் கலைகளில் சிவனும் பார்வதியும் காளை மீது அமர்ந்திருப்பது போல் காட்சியளிக்கிறார்கள். ஸ்கந்தன், கணேசன் என்ற இரு புதல்வர்கள்.

**ஸ்கந்தன்** - இவர் சிவன் - பார்வதியின் மைந்தன். இவர் மகுடம் அணிந்திருப்பார் அல்லது தலைமுடியை மூன்று பிரிவுகளாக பிரித்து உச்சந்தலையில் முடிந்திருக்கிறார். இவருக்கு ஆறுமுகங்களும், கைகளும் உண்டு. இவர் இரு மின் இடியையும் வாளையும் திரிசூலத்தையும் ஏந்தியிருக்கிறார். இவருடைய வாகனம் மயில். சூரிய ஆற்றலினாலும், வெப்பத்தாலும் சூரியக் கடவுளால் செய்த அம்பைத் தாங்கிய வில் வீரனைப் போல இவர் ஆங்கோரின் பல தூண்களின் கலை கூடத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளார்.

**ஸ்ரீ** - இவர் லட்சுமி என்று அழைக்கப்படுகிறார்.

**சூரியா** - இவர் முழங்காலளவு தாழ் கூடையும், கனமான பாதரட்டையும் அணிந்திருக்கிறார். தலையில் சந்திரனுடன் காட்சி தருகிறார். இவர் தாமரைப் பூவை ஏந்தியவாறு ஏழு குதிரைகள் பூட்டிய தேரில் பவனி செல்கிறார்.

**உமா** - சிவனின் மனைவி.

**விஷ்ணு** - இவர் மும்மூர்த்திகளில் காக்கும் கடவுள். 11, 12ஆம் நூற்றாண்டுகளில் கம்போடியாவில் பிரபலமாக விளங்கிய மதக் கோட்பாட்டுக்கு காரணமானவர். இவர் அழகிய வாலிபனாகவே சித்தரிக்கப்படுகிறார், இடுப்புப் பட்டையுடன் கூடிய சாம்பாட் என்பதையும் நீள் உருளை வடிவிலான தலைப்பாகையும் அணிந்த அங்கோர் காலத்துக்கு முந்தைய கலைகளில் சித்தரிக்கப்படுகிறார். அங்கோர் காலத்துக்கு பிறகு இவர் கிரீடம் அணிந்திருக்கிறார். இவருக்கு நான்கு கரங்கள். சங்கு சக்கரம், தண்டாயுதம், தாமரை ஆகியவற்றை ஏந்தியிருக்கிறார். இவர் பறவைகளின் அரசனான கருடன் மீது பவனி போகிறார். இவருடைய மனைவி லட்சுமி.



அறிதுயில் விஷ்ணு - நதியின் மடியில் (Kbal Spean)

உலகத்தை தீமைகள் அச்சப்படுத்தும் போதெல்லாம் விஷ்ணு மண்ணுலகில் தகுந்த அவதாரம் எடுத்துக் காப்பாற்றுபவராக விளங்குகிறார். இவர் மனிதனாகவும் மிருகமாகவும் அவதாரம் எடுத்து தீய சக்திகளை அழித்துள்ளார். இவருடைய பத்து அவதாரங்கள் 1. மச்ச அவதாரம், 2. கூர்ம அவதாரம், 3. வராக அவதாரம், 4. நரசிம்ம அவதாரம், 5. வாமன அவதாரம், 6. பரசு ராம அவதாரம், 7. ராமாவதாரம், 8. பலராம அவதாரம், 9. கிருஷ்ண அவதாரம், 10. கல்கி அவதாரம்.

**எமன்** - இவர் நீதி தேவனாக அறியப்படுகிறார். உலகில் உள்ளவர்கள் மரணம் அடைந்ததும் அவர்கள் செய்த பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப அவர்களுக்கு சொர்க்கத்திலோ, நரகத்திலோ இடம் அளிக்கிறார். இவருக்கு பல கரங்கள் (வழக்கமாக எட்டு கரங்கள்) நீதியின் கருவியான தண்டாயுதத்தை ஏந்தியிருக்கிறார். இவரது வாகனம் எருமை.

தொடரும்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedroom bsmt for rent.
Sep. entrance. Close to all facilities.
Avail. immediately.
**647.342.9081 / 647.236.7416**

**KENNEDY & LAWRENCE**
3 bedroom bsmt for rent. Sep. entrance, Parking, laundry. Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.826.3870**

**9TH LINE & 14TH AVE.**
2 bedroom bsmt for rent. Sep. entrance, Parking, laundry. Close to school.
Avail. April 01, 2019.
**416.567.2462 / 416.939.9353**

**MORNINGSIDE & STAINES**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking. Family or students preferred. Close to all facilities. Avail. immediately.
**905.399.7652 / 647.448.5263**

**BIRCHMOUNT & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.451.9520**

**MCCOWAN & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, Parking, laundry. Family preferred. Close to all facilities. Avail. immediately.
**905.294.9094 / 416.666.6523**

**NEILSON & MCLEVIN**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Parking. Students or couple preferred. No smoke & no pets. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.347.0752**

**BRIMLEY & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Working Female or student perferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.238.9061**

**MARKHAM & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Working Female perferred. Close to all facilities. Avail. immediately.
**647.609.8362 / 416.292.6252**

**BRIMLEY & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, Close to all facilities.
Avail. immediately.
**416.817.6515 / 416.414.0439**

**CONLINS & ELLESMERE**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, Laundry.
Close to all facilities. Avail.immediately.
தொடர்புகளுக்கு: **647.770.6263**

**உடனடி வாடகைக்கு, விற்பனைக்கு**

வீடுகள், கொண்டோக்கள்
விற்க, வாங்க,
வாடகைக்கு விட,
வாடகைக்கு பெற்றுக்கொள்ள
அழையுங்கள்
**Jey 416-816-9011**

## ROOM FOR RENT

**MORNINGSIDE & MCNICOLL**
Rooms for rent. Parking, laundry, internet. Female preferred. Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.852.5360**

**MARKHAM & DENISON**
1 Room with washroom for rent. Parking, laundry. Male or female Preferred. No drinking. Close to all facilities. Avail. immediately.
**416.732.1810 / 905.554.9091**

**VICTORIA PARK & LAWRENCE**
3 அறைகள் கொண்ட Bsmtஇல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. சகல வசதிகளும் அருகில் உள்ளன.
தொடர்புகளுக்கு: **647.708.3444**

**PHARMACY & ELLESMERE**
Room for rent. Close to mall & shops.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.839.3710**

**MCCOWAN & DENISON**
1 Bed room for rent. Sep.washroom, parking, laundry, cable, utilities. Women preferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.678.2599**

**MIDDLEFIELD & FINCH**
1 Room with Sep. washroom for rent a condo. Female Preferred.
Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.835.5244**

**MORNINGSIDE & SHEPPARD**
Room for rent. Parking, laundry, cable, Internet, utilities. Ladies only
Close to all facilities. Avail. immediately.
**647.847.2465 / 416.569.9260**

**9TH LINE & 14TH AVENUE**
1 Room for rent. Parking, laundry.
Close to YRT & all facilities.
Avail. immediately.
**416.648.1987 / 416.669.3549**

**MARKHAM & ELLESMERE**
Room for rent in main floor. Only for male student. Free Wifi & furnished available.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.996.6977**

**MCLEVIN & NEILSON**
Master bedroom + attached bathroom & single room for rent. No Smoke & no Pets. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.993.4951**

**STEELES & KIPLING**
1 Room for rent. Parking, laundry, cable, internet. Ladies preferred
Close to all facilities. Avail. March 01, 2019.
**647.766.9506 / 647.766.1266**

**BRIMLEY & EGLINTON**
1 Room for rent. Laundry, internet.
No smoke. Close to all facilities.
Avail. February 15, 2019.
**416.294.0193 / 416.892.7762**

மேலும் பக்கங்கள்
29, 30, 31, 32, 33

## ROOM FOR RENT

**SCAR.GOLF CLUB & LAWRENCE**
Room for rent in a bsmt. Laundry, Close to TTC, mall, bank, school.
Avail. immediately.
**416.454.9986 / 416.219.4936**

**MORNINGSIDE & FINCH**
2 Rooms for rent . Ladies only. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.888.9437**

**ORTON PARK & LAWRENCE**
1 Bedroom room for rent. Parking, laundry. Males Preferred. No smoking & No drinking. Avail. immediately.
**647.707.0457 / 647.857.9536**

## BASEMENT FOR RENT

**ROSSLAND & SALEM அருகில்**
2 Big bedrooms basement for rent.
Sep. entrance, Parking, laundry.
Suitable for family.
Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.897.6421**

## BASEMENT FOR RENT

**STAINS & STEELES**
1 Room bsmt for rent.
Sep. entrance, parking, laundry, cable, internet, utilities. Close to all facilities. Avail. immediately.
**416.662.2041 / 647.625.4876**

## BASEMENT FOR RENT

**YOUNG & ELGIN MILLS (Richmondhill)**
2 Bedroom Bsmt for rent. Parking, laundry, cable, internet.
Couple or students preferred.
Walking to bus young street.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.454.1893**

## BASEMENT FOR RENT

**SCARB. GOLFCLUB & BRIMORTON**
2 bed room basement for rent. Sep. entrance, sep. laundry, parking, rent + utilities. Close to school + TTC. Near progress campus. No smoking, drugs & no pets. Available - March 01, 2019.
Contact : **647. 622. 0350**

## BASEMENT FOR RENT

**MARKHAM & PAINTED POST**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable, internet, utilities 1/3. Single working male preferred. Close to all facilities.
Avail. March 01, 2019.
**647.542.6019 / 416.438.6019**

## HOUSE FOR RENT

**9TH LINE & 14TH AVE.**
4 Bedroom & 2 garage house for rent.
Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.296.7932**

**MORNINGSIDE & STAINS**
4 Bedroom house for rent. Working family or female room by room. Close to all facilities. Avail. immediately.
**647.740.2434 / devica17@hotmail.com**

**HWY 7 & 9TH LINE (MARKHAM)**
2 Bedroom & 2 washroom town house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**416.438.2552/647.853.5524**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & NEILSON**
2 bedroom for rent. Sep. entrance Parking, laundry, cable, internet. No smoke & no pets. Close to all facilities. Avail. April 01, 2019.
தொடர்புகளுக்கு: **647.274.4555**

## ROOM FOR RENT

**WHITE RD. & TAUNTON**
1 Room with washroom for rent. couple preferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.722.1434**
Call after 4:00pm

## ROOM FOR RENT

**Markham & Major Mackenzie Dr. E.**
சந்திக்கு அருகாமையில் Donald Cousens PKWY Roadஇல், basementஇல் Room வாடகைக்கு உண்டு.
Sep.entrance & laundry, New appliances, Parking. Close to all facilities.
Female Only available.
தொலைபேசி இலக்கம்: **(437)997-4785**

## ROOM FOR RENT

**HWY 48 & MILLARD**
Rooms for rent.
Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு:
**416.670.7436**

**வீடு வாடகைக்குபெற்றிட/கொடுத்திட**

வாடகைக்கு வீடுகள், Condo., Bsmts போன்றவற்றை Scarborough, Markham, Mississauga, Brampton, Ajax பகுதிகளில் பெற்றிட அழையுங்கள்:
**647.402.2937**

வீடு, அறை, நிலஅறை (**BSMT),** கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## HOUSE FOR RENT

**ROSSLAND & CHURCH**

4 Bedroom & 2+1 washroom house for rent. Single garage. Utilities extra. Close to all facilities. Avail. immediately.

**Realtor.ca-MLS# E4332844**

**416.509.7247 / 647.409.1822**

## HOUSE FOR RENT

**BROCK & TAUNTON (PICKERING)**

4 Bedroom double garage house for rent.
Avail. February, 2019.
Short term rent available.

**647.292.1000 / 647.296.7932**

## APARTMENT FOR RENT

**MARKHAM & EGLINTON**

1, 2 & 3-Bedroom Apartments for Rent. Utilities Included. Clean, Renovated High-Rise Building. Near TTC, Schools & Shopping. Tamil Store in Building. On-Site Laundry.

**CALL: 416-264-2818**

## HOUSE FOR LEASE

**DONALD COUSENS & DELRAY (Markham)**

3+1 Bedroom, 3 washroom, 3 level for lease. 1750 sq. ft. Upgraded balcony, with minutes everything. No smoke & no pets.

தொடர்புகளுக்கு: **416.834.1081**

## HOUSE FOR LEASE

**MARKHAM & STEELES**

Brand New, Never Lived In, 4 Bedrooms & 4 Washrooms, Detached home with 2 Car Garage in prime Markham/Steeles location for lease. Available from March 8th. Family preferred. No pets & No smoke. Close to all facilities.

Call for more info: **647-680-5347**

## வாடகைக்கு

**4 BR, 3 BR, 2 BR, 1 BR**
**House, Condo, Basement**
வாடகைக்கு உள்ளது
அழையுங்கள்.

**647.861.8240**

## HOUSE FOR SALE

**SCARBOROUGH**
**LAWRENCE AVE. & KINGSTON RD.**

2 Bedroom condo apartment with 1 parking & locker for sale $225,000.00

**PICKERING**
**LIVERPOOL & BAYLY**

3 Bedroom, condo townhouse house with finished basement for sale. Price $399,900.00.

**416.917.0557**
**Rajah Masillamany**
**(HomeLife / Future Realty Inc.)**

மேலும் பக்கங்கள்
28, 30, 31, 32, 33

## HOUSE FOR SALE

**MARKHAM & STEELES**

4 bedroom brand new house for sale

**We have more houses for sale & rent.**

Kannan Kankesu: **416.834.4200**

## மணமகன் தேவை

யாழ். இந்து வேளாளர் குலத்தைச் சேர்ந்த 35 வயது லக்கினத்தில் செவ்வாய் உள்ள படித்த பட்டதாரி மணமகளுக்கு கனடாவில் அல்லது இலங்கையில் மணமகன் தேவை.

**647.533.9794 / 437.888.4515**

## ஸ்ரீசாயி திருமண சேவை

உங்கள் பிள்ளைகளுக்கு பொருத்தமான வாழ்க்கை துணையை தேடிக்கொள்ள எங்கள் சேவையை நாடுங்கள். பல துறைகளில் தகுதி பெற்ற மணமகன், மணமகள் உள்ளனர்.

**416.890.6497/**
**srisai2912@hotmail.com**

## இலவச திருமணசேவை

இலவச திருமண சேவைக்கு
தொடர்பு கொள்ளவும்

**905.607.3896**

## BASEMENT FOR RENT

**MIDDLEFIELD & FINCH AVE. E.**

Newly renovated bsmt for rent.
Sep. entrance, Parking, laundry.
Close to ஐயப்பன் கோவில். Avail. April 01, 2019.

தொடர்புகளுக்கு: **647.686.8590**

## ROOM FOR RENT

**MCCOWAN & BRIMOTON**

One room on main floor - 1 Student,
one room in Basement - 2 Students
With high ceiling, own eat - in kitchen, large bathroom.
Suitable for 3 female students. Avail. immediately

தொடர்புகளுக்கு: **416.557.7377**

## ROOM & BASEMENT FOR RENT

**MORNINGSIDE & SEWELLS**

3 Bedrooms in main floor available for rent separately (தனித்தனியாக).
2 Bedroom besement with walkout entrance also available (newly renovated). Close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு : **416.908.9494**

## House for Sale at Colombo 03

**Muhandiram Road, Opposites to USA Embassy and close to police station / NO BROKERS**

1550 Sq. ft, 1 Story Building with 3 Bedroom, 2 Kitchen, 2 Bathroom,
Panaroma view balcony and spacious Parking for 2 vehicles
for Immediate sale 45M (Negotiable)

**For more details Please call:**

**647-571-8404 or + 94 (76) 312 5723 (Srilanka)**

## BINS RENTAL

**METRO EAST DISPOSAL**

Commercial, Residential & Industrial waste removal bins rental

**Francis Uthayan:**
**416.671.5025 /647.856.6902**

## AVAILABLE

**Base guitar keyboard classes** நடைபெறும்.

**416.624.8557**
**647.984.0264**

## House for Rent at Jaffna

ஆலய வழிபாடுகளுக்கு தாயகம் செல்லும் பக்தர்களுக்கு ஒரு நற்செய்தி. யாழ் நகர் உரும்பிராய் பலாலி வீதியில் அமைந்திருக்கும் கற்பக பிள்ளையார் மற்றும் சிவன் கோவில் அருகாமையில் உள்ள சிவன் வீதியில் சகலவசதியுடன் கூடிய விசாலமான வீடு குறுகியகால (Short term rental) வாடகைக்கு உண்டு.
kindly pass this information to your friends & relatives.

Canada: **416.918.4162**
Srilanka: **011.94.77.794.8265 / 011.94.77.985.3501**

## BUSINESS FOR SALE

***MIDLAND & LAWRENCE (1570 Midland Ave Unit A)***

பகுதியில் நல்ல நிலையில் இயங்கிக்கொண்டிருக்கும் Bar & Grill Resturant விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: **416.270.1666**

## RENTAL SPACE WANTED FOR STUDENTS

I am working with a group of students who are looking to rent rooms, house or basement apartments in Scarborough and surrounding area.

**உங்களது** rooms, house or basement **இனை சட்டரீதியாக**
University / College Students **இற்கு உடனடியாக வாடகைக்கு கொடுத்திட**

***HARI SANTHIRARAJAH - 647.262.8490***
HomeLife Future Realty Inc. Brokerage Inc.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாகன போக்குவரத்து

**Western** பல்கலைக்கழகம், விமானநிலையம், நயகரா நீர்வீழ்ச்சி சுற்றாடல், மற்றும் குறுகிய தூரம்.

தொடர்புகளுக்கு: **416.880.5952**

## CAR FOR SALE

2007 HONDA CIVIC
No Accident, No Issue
Excellent Condition

தொடர்புகளுக்கு:
**647.906.5839**

## குழந்தை பராமரிப்பாளர் தேவை

**BOVAIRD DR. E. & HEART LAKE RD**
**(BRAMPTON)**

வீட்டில் இருந்து குழந்தைகளை பராமரிப்பதற்கும், சமைப்பதற்கும் ஒருவர் தேவை.

**416.402.4126 / 647.631.5942**

## PSW WANTED

முதியோரை பராமரிப்பதற்கு ஆங்கிலம் பேச, எழுத கூடிய அனுபவமுள்ள பெண் **PSW** பராமரிப்பாளர் தேவை. தங்கியிருந்து பராமரிக்கக் கூடியவர்களும் விரும்பத்தக்கது.

**647.272.6993 / 416.613.1840**

## MOVING & DELIVERY

புதிய, பாவித்த Fridge, Stove விற்பனைக்கு உண்டு.
பழைய இரும்பு பொருட்கள், Electonic பொருட்கள் இலவசமாக எடுக்கப்படும்.
Junk Removal

Call Rajan: **647.524.1320**

## உதவியாளர் தேவை

**Oshawa** வில் வீட்டில் வந்து சமையல் மற்றும் பராமரிப்பு உதவி வழங்குவதற்கும் பெண் உதவியாளர் தேவை.

தொடர்புகளுக்கு: **437.226.6913**

## COOK WANTED

pickering பகுதியில் 3 நாள் வீட்டில் வந்து சமைப்பதற்கு பெண் Cook தேவை. சம்பளம் பேசித்தீர்க்கலாம்.

தொடர்புகளுக்கு: **416-844-5626**

## பராமரிப்பாளர் தேவை

**SCARBOROUGH**வில் வாழும் Wheelchair இல் இருக்கும் வயதான பெண்மணி ஒருவரை வீட்டில் தங்கி இருந்து பராமரிக்க பெண் உதவியாளர் தேவை. PSW தகுதி அவசியமில்லை.

தொடர்புகளுக்கு: **437.223.7767**

## JUNK REMOVAL

பழைய இரும்பு பொருட்கள், **Electronics** பொருட்கள் வீசுவதற்காக வைத்திருந்தால் இலவசமாக எடுக்கப்படும்.
**MOVING / DELIVERY AVAILABLE.**

தொடர்புகளுக்கு:
பிறேம் - **647.835.5244**

## AZ DRIVERS WANTED

**Seeking for experienced AZ drivers for CANADA & USA.**

Requirements:
Minimum 1 years' experience
Cross Border experience
Good Communication Skills
Clean Abstract

**Please Contact : 416-835-6701**

## பராமரிப்பாளர் தேவை

**SCARBOROUGH - MORNINGSIDE**இல் வசிக்கும் ஓரளவு வயதான பெண்மணி ஒருவரை காலை முதல் மாலை வரை பராமரிக்க ஒரு பெண் உதவியாளர் தேவை. மிக இலகுவான பராமரிப்பு. PSW தகுதி அவசியம் இல்லை.

தொடர்புகளுக்கு: **647-268-6224**

## CLEANERS NEEDED

**Office & Restaurant Cleaners** தேவைப்படுகின்றனர். அனுபவம் அவசியமில்லை. பயிற்சிகள் வழங்கப்படும். ஆர்வம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: **289.482.0480**

## ARE YOU LOOKING FOR WORK ?

**416.514.0733-Manjit Or Email manjitglobalteam@gmail.com**

- Electrician •Spray Gun Painter •Project Manager
- Accountant AP/AR , Office Admin , Bookkeeper
- General Laborers / window assemblers/Food
- Forklift Operator - Raymond Reach / Counter Balance
- Driver (G, AZ, DZ), Driver Helper, Warehouse Worker,
- Sewing machine (male/female), cabinet maker, Project Estimator
- All in Mississauga, Toronto, Vaughan, Brampton, Markham Area

## HOME DAY CARE

9 வருட Day care அனுபவம் கொண்ட பராமரிப்பாளரால் நடத்தப்படும் Home daycare இல் 6 மாதம் தொடக்கம் 4 வயது வரையான பிள்ளைகளை பராமரிக்க விரும்பும் பெற்றோர்கள்.

தொடர்புக்கொள்ள: **647.807.1368**

## DRIVERS WANTED

**SAYAN TRANSPORT LTD.**
Dz, Az, Bz Drivers wanted for straight truck.
Full time & Part time.
Payment option available.
Call or text : **647.309.5030**
**sayan.26@hotmail.com**

## HELP WANTED

**Wood Working Helper Wanted ( IDEAL STAIRS )**

Must have at least 1 year experience. (ஆசாரி விரும்பத்தக்கது) Monday to Saturday 8:00am to 5:30pm

தொடர்புகளுக்கு: **416.830.3932**

## வேலைக்கு ஆட்கள் தேவை

Reginos pizza ( Brimley & Finch )
Experience pizza maker & cashier தேவை.

தொடர்புகளுக்கு: **416.938.4333**

## JANITORIAL JOB

**Cleaners - Husband & Wife Team With Car & Valid Driving License**
**Team of Two Vaughan/Brampton Area.**
FT, Permanent Monday to Friday 10:30PM to 6AM.
**Janitorial Night Cleaners**
**Restaurant Cleaners (HWY 7 & HWY 404).**
Call **905-738-4468 Ext.3** Leave a detailed message.
Sub-contractors welcome.

## COOK WANTED

**KINGSTON & WHITE ROAD**

Experienced cook wanted.
Full time or Part time.

**Please call : 647.706.9251**

## வாழும் திறன்

இயற்கையுடன் இணைந்து இன்புற்று வாழ்தலுக்கான சிறப்பு வகுப்புக்கள் பிரபல்யமான இந்திய சமய சாஸ்த்திர நிபுணர் வி. கணேஷ் அவர்களால் Middlefield & Mcnicoll சந்திப்புக்கு அருகாமையில் நடைபெறுகின்றது. ஆர்வமுள்ளவர்கள் பங்குபற்றலாம்.

வி. கணேஷ்: **416.816.2563** மகேன்: **416.893.1222**
ஆறுமுகம் (AGR): **416.832.9467**

## CARS, VANS & TRUCKS WANTED

**Any make, Any condition.**
**Pay top dollars.**
**Contact: 416.835.3475**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## CONSTRUCTION
## RESIDENTIAL & COMMERCIAL

- Design & Build (Permit drawings)
- Basement & Separate Etrance
- Doors & Windows
- Entry Doors
- Kitchen & Bath specialist.
- Full Interior & Exterior Renovations
- Quartz Counter Specialist
- Electrical
- Plumbing
- Surveillance System (Camera)
- Hardwood Stairs
- Laminate / Hardwood Flooring

**Call or text Laptiva**
**@ 416.799.7945 for quotation**

## PTR DOORS & WINDOWS

OVER 14 YEARS EXPERIENCE
RESIDENTIAL & COMMERCIAL




- Custom Doors & Windows
- Front & Patio Door
- Replacement (Doors & Windows)
- California Shutters & Blinds
- Separate Entrance Door for Basement
- Replace Caulking
- Painting
- Pot Lights Installation

FREE ESTIMATE! Call Today

24 hours Emergency Service
We Fix Broken Glass Windows & Doors

RAVI : 416-825-9482 KANNA : 647-297-7815
email : ptrrenovation@gmail.com

## சொர்க்கம் திருமணசேவை

● 44 வயதுடைய விவாகரத்துப் பெற்ற மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றோம். ● கனடாவில் வாழும் 32, 33 வயதுடைய Engineer ஆகப் பணிபுரியும் மணமகன்களுக்கு தகுந்த மணமகள்களை தேடுகின்றோம்.

மற்றும் இலங்கை இந்தியாவில் இருந்து நல்ல வரன்கள் எடுத்து தரப்படும்.

**416.666.1855 / 437.772.8129**

## மணமகள் தேவை

36 வயதுடைய இலங்கையில் வாழும் படித்த (ஆங்கிலம், தமிழ், சிங்களம் சரளமாக பேசக்கூடிய) S.D Plantation Sector (Ratnapura District) இல் வேலை பார்க்கும் Badulla Sri lankaஇல் பிறந்து தாயுடன் வாழும் மணமகனுக்கு இலங்கையில் அல்லது கனடாவில் தகுந்த மணமகளை தேடுகின்றோம்.

தொடர்புகளுக்கு: **416.846.0960**

## மணமகள் தேவை



- 26 வயதுடைய B.SC. பட்டதாரி கனடாவில் வேலை பார்க்கிறார்.
- 28 வயதுடைய Hotel Management in Singapore இல் வேலை பார்க்கிறார்.
- 37 வயதுடைய Networking consultant in UK (citizen) இல் வேலை பார்க்கிறார்.

ஆகியோருக்கு அவர்களுடைய பெற்றோர் மணமகள்களை கனடாவில் தேடுகின்றனர்.

**Contact :**
**647-609-6135**

## வேலை வாய்ப்பு

ரொறொன்ரோவில் இருந்து வெளிவரும் பத்திரிகை நிறுவனத்தில் பகுதிநேரமாகத் தொழில் புரிவதற்கு தகுந்தவர் தேவைப்படுகின்றார். தட்டச்சு, *Graphic Design* தெரிந்தவர், தமிழ், ஆங்கிலம் சரளமாகப் பேசக் கூடியவர் தங்களது சுயவிபரப் படிவத்தை (Resume)ஐ கீழுள்ள மின்னஞ்சல் (email)இற்கு அனுப்பவும். தெரிவு செய்பவர்கள் மட்டுமே நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படுவர்.

**email: helpwanted.application@hotmail.com**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FOR RENT - CONDO/HOUSE / BASEMENT
# WATSON PROPERTY MANAGEMENT - 416-284-9999

***Scarborough* – Kingston / Lawson – full house**
(4+1Brm, 1Bath) Raised Bungalow In A High Demand Neighborhood ,spacious Lot. Close To University Of Toronto, Schools, 401, amenities. Basement Included As Well. **[Asking$2050/m]**

***Scarborough* – Mccowan / Lawrence – main floor**
Bungalow For Lease In A Quiet Neighbourhood, Large Living And Dining With Two Large Windows, Closer To School, Shopping And Other Amenities. **[Asking $2100]**

***Downtown* – Bay / College – Condo apt**
(1+1Brm, 1Bath) Spacious & Luxurious unit With Parking. Hardwood floor, modern kitchen, Walking Distance To U Of T, Ryerson University, Eaton Centre & Yorkville, Easy Access To Subway Downtown Toronto's Highly Desired College & Bay Area. **[Asking $2500/m]**

***North York* - Leslie / Sheppard – Townhouse**
(3+1, 3bath) Bayview Village Neighbourhood. Steps To Ttc, Go Station, Super Market, Plaza, Mins To Library, Community Centre, Parks, 401, 404, Dvp, Seneca College, Ikea, Canadian Tire, Hospital, Bayview Village Mall, Fairview Mall. Finished Basement With Extra Kitchen And Washroom **[Asking 1850/m]**

*** *North York* – Sheppard Ave E/ Leslie – Condo**
(1+1Brm, 1 Bath) Open Balcony, 9' Ceiling, Den Can Be Used As 2nd Bedroom, Laminate Floor On Master Br, One Locker And One Parking Included. . **[Asking $2000/m]**

***Markham* – Hwy 7 / Warden– Condo apt**
(1+1Brm, 1Bath) Close to all amenities. Next To Uptown Market Perfect For Dining& Shopping, Schools, Parks,Mcdonald's,City Of Markham & Theatre, East Access To 407 & 404, Go Train&Viva.. **[Asking $1800/m]**

*** *Markham* – *Markham* / Elson – Main Floor**
(4 Brm, 4Bath) Close To Costco, No frills, Great School, Shopping, Parks, Bank & Transportation. Available immediately. **[ Asking $2600/m]**

*** *Markham* – Markham / 16th Avenue – Town house**
(2Brm, 1 Bath) Brand new house, 3 levels, 3 parking, close to all amenities **[Asking $1900/m]**

***Oshawa* – Simcoe St / Conlin Rd – Full house**
(3Brm, 3Bath) Steps To Simcoe Rd, Walk To University, Durham College, Shopping, Close To Hwy 407, Schools, Park. **[Asking $1700/m]**

***Oshawa* – simcoe / russett– Main floor**
(3Brm, 2Bath) Steps To Simcoe Rd, Close To University, Durham College, Shopping.High Demandlocation And All Other Amenities **[Asking $1300m]**

***Bowmanville—Short Term Stay/ Vacation Rental***
(6Brm, 3Bath) Bright & Spacious. 1.4 acres of land.. wake up to sunrise, cornfields, , . Great getaway for families/seminars/events, **[please call]**

## MANAGING RESIDENTIAL PROPERTIES
watsonpm1989@gmail.com

# We make it easy for you to be a Landlord!

**OUR SERVICES INCLUDE:**

- Marketing, listing and showing properties
- Answering lease enquiries
- Tenant screening, pre-qualifying, negotiating lease and finding the right tenant
- Property inspections before and after renting
- Handle tenant enquiries
- rent collection and deposit to Landlord
- Eviction of bad tenants
- Scheduling Maintenance and repairs of property
- Year end accounting
- Renewal of lease
- Market value update

**You can relax while we take care of your investment property!**

WATSON PROPERTY MANAGEMENT LTD

Direct: 416-284-9999
WatsonPM1989@gmail.com
111 Grangeway Ave. Suit #301
(RBC Building) Toronto, ON M1H 3E9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவின்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

பாவித்தனர். இத்தகைய ஆடை அணிகளைச் சமீபத்தில் ஹவாய் தீவுகளுக்குச் சென்றபோது அங்கே காணமுடிந்தது. பிஜி தீவுகளில் இருந்து ஹவாய் தீவுகளுக்குப் புலம்பெயர்ந்தவர்கள் தங்கள் பாரம்பரிய உடை என்று சொல்லி நாணல் புல்லால் செய்த உடைகளை அணிந்து நடனமாடினர். அந்த நடனமும் வேறு வகையான நடனமல்ல, எங்கள் பாரம்பரிய கோலாட்ட நடனம்தான். தமிழ்நாட்டில் இருந்து தொழில் நிமித்தம் பிஜி தீவுகளுக்குச் சென்றவர்கள், கடல-லைகளால் தள்ளப்பட்டுப் பசுபிக் சமுத்திரத்தில் உள்ள ஹவாய் தீவுகளில் ஒதுங்கி இருந்தனர். இப்பொழுதும் அவர்களின் பரம்பரையினர் இந்து மதத்தையே அந்த மண்ணில் தொடர்கின்றனர். இவற்றை எல்லாம்



பார்த்தபோது எங்கள் பண்பாடு கலாச்சாரம் உலகெல்லாம் எவ்வளவு தூரம் பரந்திருக்கிறது என்பதை என்னால் அவதானிக்க முடிந்தது.

# கீழடி...

15ஆம் பக்கத்தொடர்ச்சி

குறிப்புகள் சங்க இலக்கியங்களில் இல்லை. ஆனால், இவர்களது ஐயத்தை சரியெனக் கூறுவது போல இருந்தது, பிரபல கிரேக்கக் கடலோடியான தொலமியின் குறிப்பு. தொலமி, தனது குறிப்பில் தென்னிந்தியாவின் ‘அறுகுறுதுறைமுகம்’ எனும் துறைமுகமொன்றைக் குறிப்பிட்டுள்ளாராம். ஒருவேளை அருகன்குளம் என இருந்த இடத்தைத்தான், தொலமி அறுகுரு துறைமுகம் எனக் குறிப்பிட்டு இருக்கலாம் எனறும், அந்த அருகன்குளம்தான் இன்று அழகன்குளமாகப் பெயர் திரிபுற்று இருக்க வேண்டும் எனவும் ஆய்வாளர்கள் கரு-துகின்றனர். எப்படியிருப்பினும் சங்க காலத்தில் வைகைக் கரையில், கடலுக்கு அருகில் ஒரு துறைமுகம் இருந்ததற்கான அடையாளத்தையும் வைகையின் அகழ்வாய்வுக் கான களஆய்வு வெளிக்கொண்டு வந்துள் ளது என்பது புலனாகிறது.

அடுத்த தடவையில் களவாய்வில் ஆய்வாளர்கள் கண்ட, தமிழின் பழமையின் செழிப்பினைக் கூறும் வேறு சில விடயங்களை ஒரு ஒப்புமையுடன் தருகின்றேன்.

# பெண்களும்...

19ஆம் பக்கத்தொடர்ச்சி



நினைத்தனர். Vigdis Finnbogadottir ஐ நிறுத்தினர். அதில் வெற்றி பெற்று தொடர்ந்து 16 வருடங்கள் ஐஸ்லாந்தில் ஜனாதிபதியாக இருந்தார்.

## சிறிமாவோ பண்டாரநாயக்கா

உலகின் முதல் பெண் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆவார். இவர் 1916 ஏப்ரல் 17இல் இலங்கையில் பிறந்தார். 1960ஆம் ஆண்டு தேர்தல் மூலம் இலங்கையில் முதல் பெண் பிரதமராகத்




தெரிவுசெய்யப்பட்டார். மூன்று முறை பிர-தமராக இவர் பதவி வகித்தார். இவர் 2000ஆம் ஆண்டு ஒக்ரோபர் 10இல் காலமானார்.

# ஹொலண்ட்...

24ஆம் பக்கத்தொடர்ச்சி

இறைக்கப்பட்டு தொடர்ச்சியாக நிலத்திலுள்ள ஈரப்பற்று குறைக்கப்பட்டு குடியிருப்பு காணிகளாகவும் விவசாயக் காணிக-ளாகவும் மாற்றினர். இன்றும் நீரை வெளி-யேற்றிய வண்ணம் இருக்கின்றனர். நாளடைவில் காற்றாலைகள் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தைக் கொண்டு நீர் இறைக்கும் இயந்திரங்களைப் பயன்படுத்தி நீரை வெளியேற்றுகின்னர். அது மட்டுமல்ல மரங்களை அரியவும், தானியங்களை அரைக்கவும், நீர் பாசனத்திற்கும் காற்றாலைகள் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் உதவுகின்றது. இச்சிக்கனமான முறை இன்றும் தொடர்கின்றன. பல நவீன காற்றாலைகள் சேர்க்கப்பட்டுள்ளன. இன்னும் 1,000 காற்றாலைகள் 1850 ஆண்டிலிருந்து பாவனையில் உள்ளன. கிண்டர்ட்ஜ்க் (Kinderdijk) பகுதியில் 19 புராதன காற்றாலைகள் யுனெஸ்கோவினால் உலக பாரம்பரிய தளமாகியுள்ளது.

நில நீரை நீக்க உதவிய இந்த வடிகால் ஊடாக படகில் மக்கள் தங்கள் அன்றாட போக்குவரத்து தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளுகின்றனர். அதிக எண்ணிக்கையில் துவிச்சக்கர வண்டி பாவனையில் உள்ள நாடும் இதுவே. நாடு முழுவதையும் எடுத்துக்கொண்டால் 27 சதவீத பயணங்கள் சைக்கிளில் தான் மேற்கொள்ளப்படுகின்றன. நெதர்லாந்தில் பெரும்பாலா னோர் சைக்கிளில் சென்றாலும் ஒருவரும் ஹெல்மெட் அணிவதில்லை. இதற்கு காரணம் அங்கு சைக்கிள்களுக்கு தனிப் பாதை இருப்பதால் சைக்கிள் ஓட்டிச் செல்வது பாதுகாப்பானதாக இருக்கிறது என்பது தான். மேலும் தெருக்கள் சந்திப்பு போன்ற இடங்களில் சைக்கிள் ஓட்டிகளுக்கு வழிவிட்டு கார்கள் காத்திருந்து செல்லும் அதிசயத்தையும் பார்க்கலாம். ஐரோப்பாவில் உல்லாசப் பயணிகளை கவரும் நாட்டில் இதுவும் ஒன்று.
ஹொலண்டில் விளையும் தரம் வாய்ந்த தூலிப்கள் (Tulips) உலகில் பல நாடுகளுக்கு பூக்களாயும் விதை கிழங்காகவும் ஏற்றுமதியாகிறது. 12-14 நூற்றாண்டு காற்றாலைகள் இன்றும் உயிரோட்டத்துடன் நிமிர்ந்து நிற்கின்றன சில இடங்கள் இப்போதும் சில குடியேறிகளால் மரப்பாதணிகள் அணிவதோடு வித்தியாசமான பாரம்பரிய கிளேடர்டிராக்ட் (klederdracht) உடைகளும் வழக்கத்தில் இருக்கின்றன.



மரப்பாதணிகள் உல்லாசப் பயணிகளைக் கவரும் பொருட்களில் ஒன்று. ஹொலண்டின் பாலாடை (Holland Cheese) தனி மதிப்பும் சுவையும் கொண்டது. மற்றைய நாடுகளில் தடை விதிக்கப்பட்ட இரு பொருட்கள் இங்கு கிடைக்கின்றன. கோப்பிக் கடைகளில் சொந்த பாவனைக்கு கஞ்சா வாங்கலாம். கனடாவிலும் தற்போது விற்பனைக்கு வந்துள்ளது. விபசாரம் நடத்த ஒரு தெருக் கடைகளை ஒதுக்கியிருக்கின்றனர். இத்தெருக்கள் அடங்கிய தொகுதியை சிவப்பு வெளிச்ச மாவட்டம் (Red Light District) என்றழைப்பர். இதனால் மனித பாலியல் கடத்தல், ஒழுங்கமைக்கப்பட்ட குற்ற வலைப்பின்னல்களில் எண்ணிக்கைகள் குறைக்கப்பட்டுள்ளது என்கின்றர்.

இலங்கையில் போர்த்துக்கீசியர் கத்தோலிக்க கிறிஸ்தவத்தை பரப்பினர். டச்சுக்காரர்கள் புரட்ஸ்டான்டு கிறிஸ்தவத்தைப் பரப்பினர். டச்சுக்காரர்கள் பல கத்தோலிக்க கிறிஸ்தவர்களை புரட்ஸ்டான்டு கிறிஸ்தவர்களாக ஆக்கினர். இலங்கையில் போர்த்துக்கீசியர், டச்சுக்காரர் இருவரும் இந்து, பௌத்தக் மக்களை வலுக்கட்டாயமாக மதமாற்றினர். கோயில்களை இடித்தனர். கொலைத்தண்டனை விதித்தனர். ஆனால் ஆங்கிலேயரோ வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல பாதிரிகளின் பிரச்சாரம் மூலமும், பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரி-களை நிறுவுவதன் மூலமும் மதமாற்றத்தில் ஈடுபட்டனர் என்கிறது சரித்திரம்.

# நினைவில்...

26ஆம் பக்கத்தொடர்ச்சி

நாரீஸ்வரர், ருத்திரர், பிக்ஷாடன மூர்த்தி, தக்ஷிணா மூர்த்தி, லிங்கோற்பவர், ஏகபாதமூர்த்தி, சோமஸ்கந்தர், சுந்தரசேகர், நடராஜர் ஆகியன.

3. எட்டு சக்தி மண்டபம். இது இரு இராணிகளால் கட்டப்பட்டது. இது கிழக்குக் கோபுரத்திற்கு அண்மையில் மீனாட்சி கோவிலுக்குப் போகும் வழியில் அமைந்துள்ளது. இங்குள்ள தூண்களில் சக்தியின் எட்டு வடிவங்கள் செதுக்கப் பட்டுள்ளன. அவையாவன: கௌமாரி, ரௌத்திரி, வைஷ்ணவி, மகாலக்சுமி, யக்ஞரூபினி, சியாமளா, மகேஸ்வரி, மனோன்மணி. இவை பெண்ணின் பல்வேறு குணாதியசங்களையும் பிரதிபலிக்கின்றன. திருவிளையாடற் புராண வரலாற்றுச் சிற்பங்களும், மகாபாரதக்கதை மாந்தர் சிற்பங்களும் இங்கே உள்ளன. 1923இல் மகாத்மா காந்தியின் சிலையும் இங்கே நிறுவப்பட்டது.

4. கிளிக்கூண்டு மண்டபம், சங்கிலி மண்டபம் எனவும் அழைக்கப்படுவது 1623இல் முத்து வீரப்ப நாயக்கரால் கட்டப்பட்டது. இங்கே தற்போது கோலாட்டம், சங்கிலி ஆட்டம் முதலியன நடைபெறுகின்றன. இங்கே மகாபாரதக் கதாபாத்திரங்களும் சிற்பங்களாக உள்ளன. இங்கே உள்ள ஒரு தூணில் யாளி செதுக்கப்பட்டுள்ளது. அதன் வாய்க்குள் ஒரு கல்லுருண்டை உருளக் கூடியதாய் உள்ளது. எவரும் கையை வாய்க்குள் வைத்து அதனை உருட்டினால் அது யாழியின் வாயைச் சுற்றி வரும்.

5. கம்பத்தடி மண்டபத்தில் நந்தியின் அமர்ந்த நிலையும் சிவனின் பல்வேறு வடிவங்களும் சிலை வடிவில் உள்ளன. அத்துடன் சிவாவும் காளியும் நடனப் போட்டியில் ஈடுபட்டுள்ள சிலைகளும், பொன்னாலான கொடிக்கம்பமும் காணப்படுகின்றன.



6. வீரவசந்தராய மண்டபம் ஆயிரங்கால் மண்டபத்துக்குத் தெற்கே உள்ளது. முத்து வீரப்ப நாயக்கரால் 1611இல் கட்டப்பட்டது. இங்கே சுந்தரேஸ்வரரின் மூலஸ்தானத்தைப் பார்த்தபடி நந்தி அமர்ந்திருக்கிறது. இதன் தெற்கே கல்யாணமண்டபம் உள்ளது. இங்கே ஆண்டுதோறும் சித்திரைத் திருவிழாவின்போது திருக்கல்யாணம் நடைபெறும்.

7. கொலுமண்டபம் 1565இல் திட்டியப்பச் செட்டியால் கட்டப்பட்டது. இங்கே நவராத்திரி விழாவின் போது 9 நாளும் மீனாட்சி 9 கோலங்களில் கொலுப் பொம்மையாக அலங்கரிக்கப்படுகிறாள்.

8. வசந்த மண்டபம் அல்லது புதுமண்டபம் திருமலை நாயக்கரால் 17ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இது 124 தூண்களைக் கொண்டது. இவற்றில் திருக்கல்யாணம், காளி, நடராஜர், சூரியசந்திரர் ஆகியோரின் சிலைகள் உள்ளன. அத்துடன் யானைகள் கரும்பு உண்ணும் சிலைகளும் செதுக்கப்பட்டுள்ளன. இங்கே கடைகள் தற்போது அமைந்துள்ளதால் இவை மறைக்கப்பட்டுள்ளன. (தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச மகளிர் தினம்

- வீரகேசரி மூர்த்தி -

பெண்கள் இரண்டாம் தரத்தினராகக் கருதப் பட்டு சம உரிமைகளின்றி ஆண் வர்க்கத் தினரால் ஒடுக்கப்பட்டு வந்தனர். காலப் போக்கில் பெண்களும் பல்வேறு தொழில் துறைகளில் ஈடுபாடு கொண்டு உழைக்கத் தலைப்பட்டனர். அன்றுமுதல் அவர்கள் விழிப்புணர்ச்சி அடைந்து ஆண்களைப் போன்று தங்களுக்கும் சமூகத்தில் சம உரிமை வழங்கப்பட வேண்டுமெனக் கோரி போராட்டங்களில் ஈடுபட்டு வந்தனர். 1908ஆம் ஆண்டு அமெரிக்காவின் நியூ யோர்க் நகரில் பதினையாயிரம் பெண்கள் அணி திரண்டு ஆண்களைப் போன்று தங் களுக்கும் சமத்துவ உரிமை வழங்கப்பட வேண்டும். "எங்களுக்கு ஆண்களிலும் பார்க்க குறைந்த நேர வேலையும், கூடிய சம்பளமும், தேர்தலில் வாக்களிக்கும் வாக் குரிமையும் வழங்கப்பட வேண்டும்" எனக் கோரி ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினர்.

அதன் விளைவாக 1909ஆம் ஆண்டு அப் போது ஆட்சியிலிருந்த அமெரிக்க சோசலி சக் கட்சியினர் முதன் முறையாக பெப்ரவரி மாத இறுதி நாளான 28ஆம் திகதியினை தேசிய மகளிர் தினமாகப் பிரகடனப்படுத்தி நாடு முழுவதும் கொண்டாடினர்.

சர்வதேச மகளிர் தினம் சம்பந்தமான இரண்டாவது மகாநாடு 1910ஆம் ஆண்டு டென்மார்க்கின் தலைநகரான கொப்பன் ஹேகனில் நடைபெற்றது. ஜெர்மன் சோச லிசக் கட்சியின் தொழில் புரியும் பெண்கள் அமைப்பின் தலைவியான கிளாரா ஷெர்க் கின் என்பவர் சர்வதேச மகளிர் தினத்துக் கான வேண்டுகோளினை முன்வைத்தார். பெண்களின் உரிமைகளை வலியுறுத்தும் வகையில் வருடா வருடம் ஒரே தினத்தில், ஒவ்வொரு நாட்டிலும் மகளிர் தினம் உல கெங்கும் கொண்டாடப்பட வேண்டும் என்ற கோரிக்கையினை அவர் முன்வைத்தார். இம்மகாநாட்டில் கலந்து கொண்ட பதினேழு நாடுகளைச் சேர்ந்த, பல்வேறு துறைகளில் பணியாற்றிய நூறு பெண்கள் பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி ஒவ்வொரு நாட்டிலும் மகளிர் தினமாகக் கொண்டாடப்பட



வேண்டும் என்ற கோரிக்கையினை வலியு றுத்தினர். அத்துடன் தமது கோரிக்கை யினை நிறைவேற்றவென பின்லாந்து நாடா ளுமன்ற உறுப்பினர்களாக மூன்று பெண் உறுப்பினர்களையும் தெரிவு செய்தனர். அவர்கள் கிளரா ஷெர்க்கினின் வேண்டு கோளினை ஏகமனதாக ஏற்றுக் கொண் டனர். அதன் விளைவாகவே சர்வதேசப் பெண்கள் தினம் உருவாகியது. அதை யடுத்து 1911ஆம் ஆண்டு முதல் ஒஸ் றியா, டென்மார்க், ஜேர்மனி, சுவிற்சலாந்து ஆகிய நாடுகளில் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. அன்று முதல் பெண் களுக்கும் ஆண்களைப் போன்று சகல துறைகளிலும் சமத்துவம் வழங்கப்பட வேண்டும் என்ற கொள்கை வலியுறுத்தப் பட்டது.


1913ஆம் ஆண்டில் இடம்பெற்ற முதலாவது உலக மகா யுத்தத்தின்போது மேற்கொள் ளப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தையை அடுத்து ரஷ்ய பெண்களும் முதன் முறையாக பெப்ரவரி மாதத்தின் இறுதி ஞாயிறன்று சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடினர். பின்னர் அத்தினம் மார்ச் மாதம் 8ஆம் திகதிக்கு மாற்றப்பட்டது. 1914ஆம் ஆண்டு ஐரோப்பிய நாடுகளிலும் பெண்கள் உலக மகா யுத்தத்திற்கு எதிர்ப் புத் தெரிவித்து ஆர்ப்பாட்டங்களை நடத்தி தமது ஐக்கியத்தினை வெளிப்படுத்தினர்.

# மைக்கல் வில்சன் 1937-2019 (81)

## Michael Wilson

கனடிய முன்னாள் நிதி அமைச்சர் மைக்கல் வில்சன் தனது 81ஆவது வயதில் ஞாயிறு பெப்ரவரி 10, 2019 புற்றுநோயினால் காலமானார். முன்னாள் பிரதமமந்திரி பிரை யன் மல்ரோனி (Brian Mulroney)யின் தலைமையிலான அரசில் திரு. வில்சன், வட அமெரிக்க சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை (North America Free Trade Agreement - NAFTA) உருவாக்க உழைத்தவர்களில் முக் கியமானவர். மற்றும் பொருட்களுக்கும், சேவைகளுக்குமான வரியை (Goods and Service Tax) நடைமுறைப்படுத்தியவரும் இவரே. இதனால் இவரின் இறப்பு கனடியப் பொருளாதார உலகில் மிகமுக்கிய கதை பொருளாக மீண்டும் உருவெடுத்துள்ளது. ஆரம்பத்தில் GST பற்றிய மிகப்பெரிய வாத பிரதிவாதங்கள் ஏற்பட்ட பொழுதும் இன்று வரை இது இயங்கிக் கொண்டே வருகின்றது.

இவரைப்பற்றிக் கூறிய முன்னாள் பிரதமர், திரு. மல்றோனி தனது ஒன்பது வருட ஆட் சியில் ஒரு சிறந்த மந்திரியாக மட்டு மல்லா மல் முக்கியமான தனது முடிவுகளில் ஒரு தலைவருமாகச் செயல்பட்டார் எனப் புக ழாரம் சூட்டியுள்ளார். மைக்கல் வில்சன், ரொறன்ரோவில் நவம்பர் 04, 1937இல் பிறந்தவர். ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் தனது வர்த்தகத்துறையில் (Commerce) பட்டப்படிப்பை தொடர்வதற்கு முன்பாக Upper Canada College என்ற தனியார் பாடசாலையில் தனது படிப்பை தொடர்ந் திருந்தார். தனது வாழ்வில் பெரும்பகுதியை Bay Streetஇல் தொழில் புரிவதன் மூலம் செலவழித்திருந்தார். Dominion Securities என்ற நிறுவனத்தின் உதவித்தலைவராக இருந்துள்ளார். 1979இல் நாடாளுமன்ற உறுப்பினராக Progressive Conservative கட்சி சார்பில் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.



திரு.ஜோ கிளாக் (Joe Clerk)இன் தலை மையில் ஆட்சி நடைபெற்றது. 1980இல் பிய ரூடோ (Pierre Trodeau) இன்றைய பிரதமர் ஜஸ்டின் ரூடோவின் தந்தை) ஆட்சிக்கு வந்ததும் ஜோ கிளாக் தனது கட்சித் தலைமையில் இருந்து விலகினார். கட்சித் தலைமைக்குப் போட்டியிட்ட திரு. வில்சன், வெற்றி பெற முடியவில்லை. திரு. பிரையன் மல்றோனியின் அரசில் 1984இலிருந்து 1991வரை நிதி அமைச்சராகக் கனடிய நாட்டிற்கு சேவை புரிந்தார். இந்தக் காலத்தில் Goods and Sales Tax (GST) 7%ஆக அறிமுகப்படுத்தப்பட்டது. ஒன்ரா ரியோ Provincial Sales Tax 8%ஆக மொத்தமாக 15% வரி ஒன்ராரியோ மக்கள் செலுத்த வேண்டியிருந்தது. எதிர்காலங் களில் இந்தத் தொகை 13%ஆக குறைக்கப் பட்டு (GST 5%, PST 8%) இன்னும் தொடருகின்றது.

பிற்பாடு இவரின் அமைச்சு பதவி Ministry of Industry Science and Technology and International Tradeஇற்கு மாற்றப்பட்டது. இந்தக்காலத்தில் NAFTA உருவாக்கப் பட்டது. 1993இல் நடைபெற்ற தேர்தலில் இவர் போட்டியிடவில்லை.

பிற்பாடு தனது முன்னைய தொழிலிற்குத் திரும்பியிருந்தார். பல உயர் பதவிகளை வகித்தார். 2006இல் வோசிங்டனிற்கு (Washington) கனடாவின் தூதுவராக (Ambassador) அனுப்பப்பட்டார். இவரைப்பற்றி இன்றைய ரொறன்ரோ நகரபிதா, ஜோன் ரோறி (John Torry) அமைதியான சிறந்த மிகவும் அறிவான மனிதரை இழப்பது கவலைக்குரிய விடயம் என்று தனது பதிவில் தெரிவித்திருந்தார்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்கத் தெரியாத மனசு - பாகம் 19

## "கர்நாடக இசைமணி" டாக்டர் சீர்காழி. கோ. சிவசிதம்பரம்



வீணை மைந்தன்

அப்போது நாங்கள் குடும்பத்துடன் மொன்றியால் டிக்காரி வீதியில் உள்ள இல்லத்தில் வாழ்ந்து வந்தோம். ஒரு நாள் டெல்லி விமான நிலையத்திலிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது.

"சார் நான் சீர்காழி. சிவசிதம்பரம் பேசுகி-றேன்"



"வணக்கம் சார். எப்படியிருக்கீங்க"
"நல்லாயிருக்கேன், ஒரு உதவி வேணும் ஐயா"
"சொல்லுங்க. என்ன செய்யவேணும்!"
"டெல்லி ஏர்போர்ட்டில் என்னுடைய குழுவினருடன் மொன்றியல் வாறதற்காக வந்திருக்கிறோம். எங்களை நிகழ்ச்சிக்கு அழைத்த முருகன் கோயில் சபையுடன் தொடர்பு கொள்ள முடியவில்லை. நீங்கள் ஏர்போர்ட்டிற்கு வந்து அழைக்கிறீங்களா"

அவர்கள் விமானம் எத்தனை மணிக்கு வருகிறது போன்ற விபரங்களைக் கேட்டறிந்து நண்பர் கே.பி. லிங்கம் அவர்களுடைய வண்டியை ஒழுங்கு செய்து கூடவே கலைஞர்களை வரவேற்பதற்காக திரு. சிவாஜி மகேந்திரா, திருவாளர் கனகசபை ஆசிரியர் மற்றும் சிலருடன் மொன்றியல் விமான நிலையம் சென்று அவர்களை நல்லபடி வரவேற்று அழைத்து வந்து தேவையான உபசாரங்கள் எல்லாம் செய்து இறுதியாக அவர்கள் யாவரையும் மொன்றியல், கியூபெக் சைவ மாகசபை நிர்வாகத்திடம் ஒப்படைத்தேன். இது ஒரு சாதாரண உதவி. ஆனால் அவர் அச்சம்பவத்தை மனதில் வைத்துக்கொண்டு ஒரு சமயம் சண் தொலைக்காட்சியில் காலையில் இடம் பெறும் 'வணக்கம் தமிழகம்' நிகழ்ச்சியில் கலந்து கொண்டவேளை ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போது... 'குறிப்பாக மொன்றியலில் எனக்கொரு நண்பர் இருக்கிறார். அப்பாவிடம் மிகுந்த பக்தி கொண்டவர். கவிஞரும் கூட. அவர் எழுதிய முருகன் பாடல் இரண்டை மொன்றியல் கலை நிகழ்ச்சியில் பாடியிருக்கிறேன். அவர்களுடைய தமிழ் கலாசாரச் சங்கம் என்னை ஒருமுறை பாராட்டிக் கௌரவித்தது.' எனப்பல செய்திகளை நன்றியுடன் பகிர்ந்து கொண்டபோது "முகநக நட்பது நட்பன்று, நெஞ்சத்து, அகநக நட்பது நட்பு" எனும் வள்ளுவர் வாக்கை நினைவூட்டினார்.

டாக்டர் அவர்கள் எனக்கு அறிமுகமானது முதன் முதல் 1989இல். மொன்றியல் அருள் மிகு திருமுருகன் கோயில் திருப்பணிக்கு கலைநிகழ்ச்சி வழங்க வந்த சமயம் நானும் முதன் முதல் முருகன் பேரில் ஒரு பாடல் எழுதி அவர் வாயால் பாடவைத்தேன்.



மாண்டு இராகத்தில் அமைந்த அப்பாடல் "சித்தி விநாயகன் தம்பி சரவணன் தமிழே நீ வருவாய்...." என ஆரம்பிக்கும். இரண்டாவது தடவை வரும்போதுதான் அவர் டெல்லியிலிருந்து அழைத்திருந்தார்.

1988இல் அவரது தந்தையார் 'இசைமணி' சீர்காழி எஸ். கோவிந்தராஜன் அவர்களது மறைவையொட்டி மொன்றியல் 'தென்றல்' வானொலியில் (அப்போது இயங்கி வந்தது) அஞ்சலிக் கவிதையொன்று என்னால் எழுதி வாசிக்கப்பட்டது. 'இசைக்கொரு கோயில்' என்ற தலைப்பில் வாசிக்கப்பட்ட அஞ்சலி ஒலி நாடாவை - டாக்டரின் முதல் வருகையின்போது கையளித்திருந்தேன்.

பின் ஒரு சமயம் 1996இல் சென்னை சென்றவேளை அவருடைய இல்லத்திற்குச் சென்றேன். அவருடைய தாயாரை அறிமுகம் செய்து வைக்கும் போது 'அம்மா இந்த ஐயாதான் அப்பாவின் மறைவுக்கு அஞ்சலிக் கவிதை வாசித்தவர். நீங்கள் கேட்டிங்க தானே..." குடும்பத்தவர்கள் அனைவரும் அன்பாக உபசரித்தனர். அவருக்குத் தொல்லையில்லாத எந்த உதவி கேட்டாலும் தாராளமாகச் செய்வார். எனக்காக எதுவும் கேட்டதில்லை. சில நண்பர்களுக்காகக் கேட்டுள்ளேன்.

அவ்வப்போது தொலைபேசியில் பேசிக் கொள்வோம். எல்லாம் தமிழ்தந்த நட்பு. மறக்கத் தெரியாத மனசில் அவருக்கில்லாத இடமா!


தொல்காப்பிய மன்றம் - கனடா

**தொல்காப்பியக் கருத்தரங்கம் - 2**

காலம்: மார்ச் 16, சனிக்கிழமை பி.ப. 3:00 தொடக்கம் 5:00 மணிவரை
உரைஞர்: முனைவர் திருமதி. மைதிலி தயாநிதி அவர்கள்
பேசு பொருள்: தொல்காப்பியரும் பாணினியும் - ஒரு நோக்கு
தமிழ் மொழியின் வளர்வுக்குப் பங்களித்தோர் - காணொளியுடனான விளக்கம்
MCI - மாணவர்கள், இளந்தலைமுறையினரின் கவிதா அரங்கமும் இடம்பெறும்.

இடம்: 1240 Ellesmere Rd. Scarborough, ON. M1R - 2X4
தமிழ்மொழி ஆர்வலர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
தொல்காப்பிய மன்றத்தினர்




## Math tutorial 383

Answers to tutorial 382

1)x =yq+r where y≤ x and x,y∈ N

a)if y is a factor of x , it will divide into x without leaving a remainder.So r =0

b)The value of the remainder must be less thanthat of the devisor if the division is complete, and y is not a factor of 9x ,so if y= 5 , the value of r are 1,2.3. or 4If y=7 ,r =1,2,3,4,5.6 , and if r=n , r= 1,2,3,4,........n-1

2)$x^4+5x^2+4 = x^4+6x^2+9-x^2$

$=(x^2+3)^2-x^2 = (x^2+x+3)(x^2-x+3)$

b)$4x^4+8x^2+4 = 4x^4+12x^2+9-4x^2$

$=(2x^2+3)^2-4x^2 = (2x^2+2x+3)(2x^2-2x+3)$

3)$C(X) = 1/3X^3+40X+700$

$C'(x) = x^2+40$

Production levelx, at which the marginal cost is $76 per glove

$=x^2+40=76, x^2=36, x=6$ ,so the production level is 6gloves per week

Tutorial 383

Questions

1)An object drops from a cliff that is 150 m high .The distance d , in metres that the object has dropped at t secs is modelled by $d(t)=4.9t^2$

a)Find the instantaneous rate of change of distance with respect to time at 4 secs

b)Find the rate at which the object hits the ground to the nearestb tenth

2)If $y= f(3x^4)$, and$f'(3)=-4$ , find dy/dx at x=1

3)Let $y=f(x^2+3x-5)$.Find dy/dx when x=1 , given $f'(-1)=2$

4)A manufacture of kitchenappliances experiences revenues from the sale of x refrigerators per month of $R(X) = 750X - X^2/6 - 2/3\,X^3$dollars

a)FFind the marginal revenue when 10 refrigerators per month are sold

By MrS.F.Xavier(Teacher) 6473409490/4167322228



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைக்க முக்தி தரும் திருவண்ணாமலை தலம்

## அருணாசல அருள் வரலாறு


**-கிருஷ்ணன்-**

என்னால் தான் உலகம் படைக்கப்பட்டது. நான் இல்லையேல் இந்த உலகமில்லை என கர்வம் கொண்ட பிரம்மன் தன் தந்தை மகா வி‍‍ஷ்ணுவிடம் போய் திருமாலே! 14 உலகங்களையும் ஏழு மேகங்களையும், ஏழு பருவங்களையும் மனதால் படைத்தேன். அசையும் பொருள், அசையா பொருள் அனைத்தையும் உண்டாக்கினேன். ஆகவே நானே கடவுள் என்பதையும், என் மகன் தான் பிரம்மன் என்பதையும் மறந்துவிடு. நான் உலகத்தை படைக்காவிட்டால் நீ எப்படி காத்தல் தொழிலை செய்ய முடியும். யாவற்றையும் நான்தான் காத்து வருகிறேன் என்ற அகம்பாவத்தை ஒழித்துவிடு. இல்லையெனில் உன் பதவியை நீக்கிவிட்டு மற்றொரு திருமாலை உருவாக்குவேன். பிருகு முனிவரின் சாபத்தால் பத்து முறை பூமியில் பிறந்தாய். உன்னை படைத்தல்லவே என் கைகள் கறுத்து விட்டன. உன்னிடத்தில் நான் பிறந்திருந்தாலும் உன்னை அழித்து விடக்கூடிய ஆற்றல் எனக்குண்டு என்றார்.

அதற்கு மகாவிஷ்ணு பிள்ளை செய்யும் தவறுகளை தந்தை பொறுத்து கொள்வதை போல் எண்ணி என்னிடம் பேசிவிட்டாய். சிவன் உன்னுடைய தலைகளில் ஒன்றை பறித்து எறிந்த காலத்தில் அதனை மீண்டும் கொள்ளும் ஆற்றல் உனக்கு இல்லை. அவ்வாறு இருக்கும்போது உன்னை எவ்வாறு தலைவன் என்று ஏற்றுக்கொள்ள முடியும்? சோமுகாசுரன் உன்னிடம் இருந்த வேதங்களை பறித்துச் சென்றபோது, நான் மச்ச அவதாரம் எடுத்து அசுரனைக் கொன்று மீட்டுத் தந்தேன். மற்றும் பல அசுரர்களை கொன்ற எனக்கு உன்னை கொல்வது சுலபம் என்றார். இருவருக்கும் இடையில் யார் பெரியவன் என்ற பேச்சு பெரும் போராக மாறியது. அண்டகோடிகள் அனைத்தும் அதிர்ந்தன. தேவர்கள் அனைவரும் பயந்து சிவனை சரணடைந்தனர். சிவன் போர்புரிந்து வரும் இருவருக்கும் இடையில் பெரும் அக்னி மலையாக தோன்றினார். இந்த ஒளிமலையை பார்த்த திருமாலும், பிரம்மனும் அளவு கடந்ததுள்ள இந்த மலையின் அடியையும், முடியையும் யார் முதலில் காண்கின்றாரோ அவரே பெரியவர் என முடிவு செய்தனர்.

அடி முடியை இருவரும் காண முடியாததால் தான் முதற் கடவுள் அல்ல என தெளிந்த பிரம்மாவும், மகாவிஷ்ணும் சிவனை சரண் அடைந்தனர். சினம் தணிந்த சிவபெருமான் “நாம் இத்தலத்தில் அருள் பாலித்ததால் இன்று முதல் இத்தலத்தை சுற்றிலும் மூன்று யோசனை தூரம் வரைக்கும் தூய்மையான புனித பூமியாக விளங்கும். அகண்ட ஒளி வடிவாயுள்ள மலை சிறிய உருவங்கொண்ட மலையாகும். இத்தலத்தை நினைப்பவர்களுக்கு பிறவி நோயை நீக்குவோம். இந்த மலையும், நகரமும் பிரளய காலத்திலும் அழிவின்றி நிற்கும். கார்த்திகை மாதத்தில் கிருத்திகை நட்சத்திரத்தில் மலையின் உச்சியில் ஒரொளி காண்பிப்போம். இவ்வொளியைக் கண்டு தொழுவோர் தம் இருபத்தொரு தலைமுறையில் உள்ளவர்களுக்கும் வீடு பேற்றினை அளிப்போம் என்றார். இம்மலை பிறப்பு, இறப்பினை நீக்கக் கூடியது. ஆதலால் மலை மருந்து என்றும் பெயர் பெறும். சிகப்பு நிறம் உடையதால் அருண கிரி என்றும் பெயர் பெறும். இம்மலையின் பெயரினை ஒருமுறை சொல்லியவர் திரு ஐந்தெழுத்தை மூன்று கோடி முறை உச்சரித்தற்குரிய பயனை அடைவர் என சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளினார்.

இங்கு மலையே இலிங்க வடிவாக இருக்கிறது உலகெல்லாம் படைத்து காத்து அருள் செய்து வரும் சிவபெருமானின் கட்டளையை செலுத்தி கைலாயத்தில் காத்து வருபவர் திருநந்தி தேவர். அந்த திருக்கைலாயத்தில் உள்ள மண்டபத்தில் பதஞ்சலி மார்க்கண்டேய போன்ற முனிவர்களும், ரிஷிகளும் திருநந்தி தேவரை சூழ்ந்து அமர்ந்திருக்க, மார்க்கண்டேய முனிவர் எழுந்து, பெருமானே! நாங்கள் முக்திப்பேறு அடைதற்குரிய வழியினைக் கூறவேண்டும் என்றார். அதற்கு திருநந்தி தேவர் காவேரி, கோதாவரி, கிருஷ்ண வேணி, பம்பை நதி, சரயு நதி, கங்கா நதி, தாமிரபரணி, யமுனா நதி, நர்மதை நதி என இன்னும் பல ஆறுகள் உள்ளன. இந்த நதிகளில் நீராடுவோர் பாவம் விலகும். அது மட்டுமல்ல காசி, திருவாரூர், சிதம்பரம், விருத்தாசலம், திருக்கேதாரம், காஞ்சி, திருப்பருப்பதம், திருக்காளத்தி, சீர்காழி, திருவையாறு, திருவிடைமருதூர், கும்பகோணம், இரத்தினகிரி ஆகிய திருப்பதிகள் வேதங்களாலும் பாராட்டு பெற்றவை.



மதுரை, இராமேஷ்வரம் ஆகிய பதிகள் பிறவித் துயரை நீக்கவல்லன. யாரானாலும் அத்தகை நகரங்களுக்குள்ளே பிறந்தாலும், உடலை விட்டு இறந்தாலும், போய் வணங்கினாலும், தூய்மையான நீரினால் முழுகினாலும், சிவபிரானுக்கு கோயில் கட்டினாலும் சிவப்பேற்றினை அடையலாம் என்றார். மார்க்கண்டேய முனிவர், அந்த நகரங்களில் மூழ்குவதும், அந்நகரங்களில் சென்று வழிபாடு செய்வதும் எல்லோராலும் முடியாது அல்லவா? என எல்லோர்க்கும் எளிதான வழி ஒன்றை தாங்கள் கூறுதல் வேண்டும் என்று விண்ணப்பம் செய்தார்.

திருநந்திதேவர், நீங்கள் சொல்லியபடியே குருடர், முதியவர், விலங்கு, பறவை, புல், பூண்டு, ஆகிய எல்லா உயிரினங்களும் எளிதில் சிவஞானம் அடையக்கூடிய நகர் ஒன்றுண்டு. சிவஞானத்தை அளிக்கத்தக்க ஊர் ஒன்றிருக்கிறது. அதற்கு கவுரி நகர், தேகநகர், அண்ணாமலை, அண்ணாநாடு, அண்ணாவூர், அருணாசலம், சிவலோக நகர், வாயு நகர், அறிவு நகர், தூய்மை நகர், தென்கயிலாயம், சோணமலை, அருணாகிரி என பல பெயர் உண்டு என்றார்.

அண்ணாமலை இன்றைக்கு புதிதாக வந்ததன்று. இப்பூவுலகம் என்றைக்கு உண்டாயினவோ அன்றே உண்டானதாகும். அந்த நகரில் என்றும் அழியாத மலை உண்டு. அந்த மலையே அந்த நகரில் சிவலிங்கமாக இருக்கிறது. சித்தர்கள், முனிவர்கள், ஞானிகள் அனைவரும் அந்த மலையினைச் சிவலிங்கம் என கொண்டு பாடிப்பரவி வழிபட்டனர்.

கிருத யுகத்தில் நெருப்பு மலையாகவும், திரேதாயுகத்தில் மாணிக்க மலையாகவும், துவாபர யுகத்தில் பொன்மலையாகவும், கலியுகத்தில் கல் மலையாகவும் திருவுருவம் கொண்டுள்ளது அண்ணாமலை. அண்ணாமலை என்பதற்கு பொருள் அண்ண முடியாத மலை என்பதாகும். கிருத யுகத்தில் நெருப்பு மலையாக இருந்த காரணத்தால் அண்ணுதல் என்றால் நெருங்குதல். சூரியன் ஒரு அண்ண முடியாத நெருப்பு. அருணம் + அச்சலம் என்ற இரண்டு வார்த்தை. அருணம் என்றால் நெருப்பு. அச்சலம் என்றால் மலை பொருள். இதனை அக்னி பர்வதம் என்று கூட சொல்வார்கள். இந்த அக்னி பர்வதமாகிய நெருப்பு மலை அருணாச்சலமாக காட்சியளிக்கிறது. இதனை மலை என்ற கோணத்தில் பார்க்ககூடாது. இது ஒரு கல் மலை அல்ல. அதாவது சிவனுடைய வடிவம் என்று புரிந்துக்கொண்டு இந்த மலையை தரிசனம் செய்ய வேண்டும். கோவிலுக்கு உள்ளே இருக்கும் சிவலிங்கம்தான் லிங்கம் என்று எண்ணிவிடக்கூடாது. இந்த மலையே சிவலிங்கம்.


# யோகா சோதிடம்



- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்


தொடர்புகளுக்கு: 416.299.8361





## அஞ்சும் உறுப்புகள்

நமது உடலின் உள்ளுறுப்புகள் எதைக்கண்டு அஞ்சி நடுங்குகின்றன தெரியுமா?



**சிறுநீரகங்கள்:** நீண்ட நேரம் கண் விழித்தல், உறக்கமின்மை.
**வயிறு:** குளிரூட்டப்பட்ட உணவுகள்.
**நுரையீரல்:** தூசு, புகை.
**ஈரல்:** அதிகப்படியான கொழுப்புச் சத்து நிறைந்த உணவுகள்.
**இதயம்:** உப்பு நிறைந்த உணவு வகைகள்.
**கணையம்:** தேவையற்ற நொறுக்கு தீனி.
**குடல்:** உணவுகளை மிகுதியாக உண்பது.
**கண்கள்:** மிக அதிக நேரம் தொலைக்காட்சி, செல்ஃபோன் பார்ப்பது.
**பித்தப் பை:** காலை உணவைத் தவிர்ப்பது.

நம்மைப் பாதுகாத்துக் கொள்வது நமது கடமை. இந்த உதிரிபாகங்கள் விலை உயர்ந்தவை. பழுதடைந்து விட்டால் மாற்றிப் பொருத்த மிகவும் செலவு பிடிக்கும், எளிதாகக் கிடைக்காது. அசல் உறுப்புகளைப்போலச் செயல்படாது. எனவே உண்ணும் உணவில் கவனம் தேவை. வாழ்க்கை முறையிலும் கவனம் தேவை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களே இலங்கைத்தீவின் பூர்வ குடிகள்! - கலாநிதி விக்கிரமபாகு

- வீரகேசரி மூர்த்தி -

"இலங்கைத்தீவு தமிழர் தேசம் என்பதை உரிய ஆதாரங்களுடன் நிரூபித்துக் காட்டுவேன். வரலாறு தெரிந்தால் முதுகெலும் பிருந்தால் எல்லாவல மேதானந்ததேரர் என்னுடன் பகிரங்கமான விவாத மொன்றுக்கு வரவேண்டும்" என கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன சவால் விடுத்துள்ளார்.

"வந்தேறுகுடிகளான தமிழ்மக்கள் எப்படி வடக்கிற்கு உரிமை கோருவது?" என ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவல மேதானந்ததேரர் காரசாரமான முறையில் கருத்துத் தெரிவித்துள்ளமை தொடர்பில் கேட்டபோதே விக்கிரமபாகு கருணாரட்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"சிங்களவர் தான் வந்தேறுகுடிகள் என்பதையும், வடக்கு தமிழரின் பூர்வீகம் என்ற யதார்த்தபூர்வமான உண்மையையும் தேரருக்குக் கற்பிப்பதற்கு நான் தயாராகவே உள்ளேன்" என்றும் அவர் தெரிவித்தார். "எல்லாவல மேதானந்ததேரர் ஒரு



கல்விமானாக இருந்துகொண்டும், வரலாறு தெரிந்தும் சிங்கள மக்களை குஷிப்படுத்துவதற்குப் போலிக் கதைகளைக் கட்டவிழ்த்துவிட்டு இதுதான் வரலாறு, இதிகாசம் என்று சுட்டிக் காட்டுகின்றார்.

இலங்கைத்தீவு தமிழர் தேசமாகும். விஜய மன்னன் இங்கு வந்த பின்னர்தான் பௌத்த மதம் நாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. அதற்கு முன்னர் இலங்கையை தமிழ் மன்னர்கள் தான் ஆட்சி செய்தனர். இராவணன், குவேனி என வரலாற்றுப் பட்டியலை அடுக்கிக் கொண்டே செல்லலாம்.

இந்தியாவில் இருந்து வந்தவர்கள் தான் சிங்களவர். பாகு என்ற பெயர் பங்களாதேசத்துக்குரியது. பராக்கிரமபாகு, விக்கிரமபாகு என சிங்களவர்களுக்குப் பெயர்கள் இருக்கின்றன. இது இந்தியாவில் இருந்து வந்தவர்கள் தான் சிங்களவர் என்பதைப் பறைசாற்றுகின்றது. அத்துடன், இலங்கை தமிழரின் பூர்வீகம் தான் என்பதை உறுதிப்படுத்துவதற்கு மேலும் பல ஆதாரங்கள் உள்ளன.

விஜய மன்னன் இங்கு வந்துதான் தமிழரின் பிரதேசங்களை ஆக்கிரமித்துக் கொண்டார். பௌத்த மதம் கூட இந்தியாவில் இருந்து தான் வந்தது. எனவே, வடக்கு மட்டுமல்ல, இலங்கையின் பூர்வீகம் தமிழ் தான் என்பது தெளிவாகத் தென்படுகின்றது.

மலையகத்தில் வாழும் தமிழ் மக்கள் இந்தியாவில் இருந்து வந்திருந்தாலும் அவர்கள் நூறு, இருநூறுக்கும் மேற்பட்ட வருடங்கள் இங்குதான் வாழ்கின்றனர் என்பதை அரசு புரிந்துகொள்ள வேண்டும்.

வடக்கு தமிழர் பிரதேசம் அல்ல என்றும், தமிழர் வந்தேறுகுடிகள் என்றும் இனவாதம் பேசித்திரியும் எல்லாவல மேதானந்த தேரர் இது விடயம் தொடர்பில் விவாதம் நடத்துவதற்குத் தயாரா?


MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
Advanced function
Calculus & vectors
Data management
All Classes available in Scarborough & Stouffville



Mr.S.F.Xavier (Teacher)
Contact: 647.340.9490 / 416.732.2228



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416.754.7338 / 416.724.7480
3011 Markham Road, Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough


# மகளிர் தினம்

குலம் வளர குமரி அவள் துணை வேண்டும்
குதூகலக் குடும்பமாய் அமைய அவள் தாயாக வேண்டும்





கொடுப்பதற்கே பிறப்பெடுத்த குலவிளக்காக வேண்டும்
கொண்ட கொள்கையில் மாறாதவளாய் வாழ வேண்டும்


கல்மனம் இல்லாது கனிவுடன் தன் கணவனை
கவர்ந்திடும் கொள்கையில் மாறாதவளாய் வாழ வேண்டும்

நீதியின் தேவதை கூட ஒருபெண், ஆவாள் அதுபோல்
நீர் கொடுக்கும் நதிகள் அனைத்தும் பெண் ஆகும்

அடுக்களை முதல் ஆபீஸ்வரை இன்று பெண்ணினம்
ஆண்களுக்குச் சமமாக வாழ்கின்றனர் அவ்இனம்

பெண் இனம் வாழ்ந்தாலே பேர் உலகம் ஆகும்
பெண்மை பெற்ற பெண்களையே பேர் உலகம் போற்றும்

பெண் இனமே வாழ்க பேரும் புகழுடனும் வாழ்க
என இன்றைய நாளில் நாமும் வாழ்த்துவோம் வாரீர்



கவிநாதம் பரந்தாமன்

# அம்பலத்தரசன்

## ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதி



நா. க. சிவராமலிங்கம்

திருவாசகம் சிவன் சம்பந்தமானது. இறைவன் கைப்பட எழுதிய திருத்தேறல். இதனால் தான் ஒவ்வொரு பாடலும் ஒரு ஒப்பற்ற தமிழ் செல்வம் எனப்படுகின்றது. ஒவ்வொரு பாடலும் உள்ளத்தை உருக்கி பள்ளத்தில் பாயும் வெள்ளம் போல களி கொள்ளச் செய்கின்றது. முதலமைச்சரை உலக முதல்வனுக்கு இணையாக்கியது. அமைச்சுப் பதவியிலும் ஆன்மீகப் பதவி அதி உயர்ந்தது என்பதை அறிவுறுத்தியது.

தேனூறும் வாசகங்கள்
அறுநூறும் திருக்கோவை
மொழிந் தருளும் நாயகனை
வானூறும் கங்கை நிகர்
மாணிக்க வாசகனை
யானூறு படாத வகை
இரு போதும் இறைஞ்சுவனே

சில பாடல்களை படித்தின்புறலாம்.

"ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதியை யாம் பாடக் கேட்டேயும் வாள் தடங் கண்மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான் மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி வீதி வாய் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்மறந்து போது ஆர் அமளியின் மேல் நின்றும் புரண்டும் இங்க ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே ஈதே எம் தோழி பரிசு ஏல் ஓர் எம்பாவாய்.

2. பண் சுமந்த பாடல் பரிசு படைத்தருளும்
பெண் சுமந்த பாகத்தன்பெம்மான் பெருந்துறையான்
விண் சுமந்த கீர்த்தி வியன் மண்டலத் தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலி மதுரை
மண்சுமந்த கூலி கொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதும் காண் அம்மானாய்.

3. மாறி நின்றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலன் ஐந்தின் வழியடைத்த அமுதே
ஊறி நின்று என்னுள் எழுபரஞ்சோதி
உள்ளவா காணவந்தருள்வாய்
தேறலின் தெளிவே சிவபெருமானே
திருப்பெருந்துறை உறை சிவனே
ஈறு இல்லாபதங்கள் யாவையும் கடந்த
இன்பமே என்னுடைய அன்பே



4. அன்றே என்தன் ஆவியும்
உடலும், உடமை எல்லாமும்
குன்றே அணையாய் என்னை
ஆட்கொண்ட போதே கொண்டிலையே
இன்று ஓர் இடையூறு எனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானே இதற்கு நாயகமே

5. நாயில் கடைப்பட்ட நாயேனை
நீயே ஆட்கொண்டாய்
மாயப் பிறவி உன் வசமோ
வைத்திட்டு இருக்கும் அது பன்றி
ஆயக் கடவேன் நானோ தான்
என்னவோ இங்கு அதிகாரம்
காயத்து இடுவாய் உன்னுடைய
கழல் கீழ் வைப்பாய் கண்ணுதலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்ணீர் நெருக்கடிக்கு தீர்வு

## அறிவியல் கதிர்

- பேராசிரியர் கே.ராஜு -


உலக தண்ணீர் தினம் மார்ச் 22 அன்று அனுசரிக்கப்படுகிறது. இந்த ஆண்டிற்கான உலக நீர்வளர்ச்சி அறிக்கை நம்மை மிகவும் அழுத்திக்கொண்டிருக்கும் தண்ணீர் நெருக்கடிக்கு விடைகளைக் கண்டுபிடிக்க முடியும் என்பதைத் தெளிவாக்கியிருக்கிறது. நீடித்த வளர்ச்சிக்கான 2030 செயல்திட்டத் திற்கான கொள்கைகளும் நோக்கங்களும் மேற்கண்ட அறிக்கையோடு பொருந்தி வருகின்றன. தண்ணீர் நெருக்கடியை போகிற போக்கில் சமாளித்துவிட முடியாது என்பதும் தெளிவாகியிருக்கிறது. நீடித்த உணவு தானிய உற்பத்தி, குடிநீர் விநியோகத்தையும் பொது சுகாதாரத்தையும் அனைவருக்கும் கிடைக்கச் செய்வது, தண்ணீர் சம்பந்தமான விபத்துகள் நேரும் அபாயத்தைக் குறைப்பது, பருவநிலை மாற்றம் விளைவிக்கும் மாற்றங்களுக்கு நம்மைத் தகவமைத்துக் கொள்வது போன்ற துறைகளில் பெரும் நம்பிக்கை தரும் இயற்கை அடிப்படையிலான தீர்வுகள் நிச்சயம் உண்டு.

2050-க்குள் ஏற்படப் போகும் உலக மக்கள் தொகை வளர்ச்சியில் பாதிக்கும் மேற்பட்ட வளர்ச்சி ஆபிரிக்காவிலும் ஆசியாவிலும் தான் இருக்கப்போகிறது. எனவே, நீர் நெருக்கடியை அதிகம் சந்திக்கப் போகிறவர்கள் வளரும் நாடுகளில் உள்ள மக்களே. இந்திய நகரங்களில் உள்ள நீர் நிலைகள் மிக அதிகமாக மாசுபட்டிருப்பதால், கடும் நீர் பற்றாக்குறையைச் சந்திக்க வேண்டிய நிலையில் இந்தியா இருக்கிறது. வளரும் நாடுகளில் தொழிற்சாலைகள் மற்றும் நகராட்சிகளின் கழிவுநீரில் 80 சதம் எவ்வித சுத்திகரிப்பும் இல்லாமல்தான் வெளியேறுகிறது. மாநிலங்களுக்கிடையே ஓடும் நதிகளில் ஏறத்தாழ பாதிக்கும் மேற்பட்டவை மாசடைந்தவை என இந்திய



மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் குறிப்பிடுகிறது. நாட்டில் மாநிலங்களுக்கிடையே ஓடும் 40 ஆறுகளில் 16 ஆறுகள் முற்றிலும் மாசுபட்டுப் போனதற்கு சாக்கடைக் கழிவுகளும் தொழிற்சாலைக் கழிவுகளுமே காரணம் என வாரியம் கண்டறிந்திருக்கிறது.

பயிர் செய்தலின் தேவைக்கு ஏற்ப உழவின் வகை உழவு முறை மாறுபடும். ஆழமான உழவு, அடிமண் உழவு மற்றும் வருடாந்திர உழவு போன்றவற்றைப் பயன்படுத்துவது பாதுகாப்பு உழவு (conservation tillage) எனப்படுகிறது. அதோடு, பல்வகைப் பயிர்களைப் பயிரிடுதல், பருப்புவகைகளை அதிகமாகப் பயிரிடுதல், உயிரியல் முறைகள் மூலம் பூச்சிகளைக் கட்டுப்படுத்தல் போன்ற சுற்றுச்சூழலுக்கிசைந்த இயற்கையோடு ஒட்டிய வேளாண் முறைகளை மேலும் மேலும் பயன்பாட்டிற்குக் கொணர வேண்டியது இங்கே அவசியமாகிறது.
கழிவுநீரைச் சுத்திகரிக்க ஈரநிலங்களை (wetlands) உருவாக்குவது செலவைக் குறைக்க உதவும். பயிரிட நிலம், ஆற்றல் தயாரிப்பு போன்ற கூடுதல் நன்மைகளும் இதனால் கிடைக்கும். உலகின் பல பகுதிகளில் இம்மாதிரி வழிமுறைகள் புழக்கத்தில் இருக்கின்றன. இயற்கையான அல்லது



உருவாக்கப்பட்ட ஈரநிலங்கள் கழிவுகளை மக்கச் செய்கின்றன அல்லது செயல்பட விடாமல் தடுக்கின்றன.

நீர்ப்பிடிப்பு மேலாண்மை (watershed management) தண்ணீர் நெருக்கடியைத் தீர்க்க உதவும் மிக முக்கியமான இயற்கையோடு ஒட்டிய தீர்வு. விண்ணிலிருந்து மண்ணில் விழும் ஒவ்வொரு துளி நீரையும் நீர்நிலைகளிலும் நிலத்தடியிலும் சேமிப்பதுதான் நீர்ப்பிடிப்பு மேலாண்மை. பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த, வேலைவாய்ப்பை உருவாக்க, உயிரியல் பன்மையைப் பாதுகாக்க, பருவநிலை மாற்றங்களைத் தாக்குப் பிடிக்க என வேறு கூடுதல் நன்மைகளையும் அதன்மூலம் பெறலாம்.
ஒரு மாநகரம் வளர்ச்சி பெறும்போது வரும் சவால்களைச் சந்திப்பதில் இயற்கை எவ்வாறு புறக்கணிக்கப்படுகிறது என்பதற்கு உதாரணமாக சென்னையை எடுத்துக் கொள்ளலாம். முன்பெல்லாம் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் கனமழை பெய்யும்போது ஏரிகள், குளங்கள், குட்டைகள், ஆறுகள், வடிகால் அமைப்புகள் எல்லாம் நிலத்தடி நீரைப் புதுப்பித்துக் கொண்டு கூடுதல் நீரை கடலுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்க உதவும். ஆனால் மாநகர வளர்ச்சி என்ற பெயரில் பல ஏரிகளும் குளங்களும் ஆக்கிரமிக்கப்பட்டு கட்டடங்களும் தொழிற்சாலைகளும் எழுப்பப்பட்டுவிட்டன. கூடுதல் நீரை வங்காள விரிகுடாவுக்கு அனுப்பிக் கொண்டிருந்த கூவம், அடையாறு, பக்கிங்காம் கால்வாய் போன்ற நீர்நிலைகள் இன்று திறந்தவெளி சாக்கடைகளாக மாறி விட்டன. கூடுதல் மழைநீரை உறிஞ்சிப் பாதுகாத்துக் கொண்டிருந்த பள்ளிக்கரணை சதுப்புநிலம் இன்று அந்தப் பணியைச் செய்ய முடியாததாக ஆகிவிட்டது.

இயற்கை அடிப்படையிலான தீர்வுகளை நோக்கி நாம் செல்வோமானால் நீர் மேலாண்மையை மேம்படுத்த முடியும். நீர்ப் பாதுகாப்பையும் பெற முடியும். மனம் இருந்தால் மார்க்கம் உண்டு.

மூலம் - திரு. ஜெயகுமார் ராமசாமி, இந்து நாளிதழ்

## பெண்களும்...

42ஆம் பக்கத்தொடர்ச்சி

5. அவசர அவசரமாக சாப்பிட வேண்டாம்.



6. பிடிக்காத உணவுகளை கஷ்டப்பட்டு சாப்பிட வேண்டாம்.

7. பிடித்த உணவுகளை அளவுக்கு அதிகமாகவும் சாப்பிட வேண்டாம்.

8. ஆரோக்கிய உணவுகளை அதிகம் சாப்பிட பழகவும்.

9. இரவு உணவில், முள்ளங்கி மற்றும் கீரை உணவுகளை சேர்க்க வேண்டாம்.

10. சாப்பாட்டுக்கு அரை மணிநேரம் முன்பு பழங்கள் சாப்பிடுங்கள்... பின்பு பழங்கள் சாப்பிட வேண்டாம்.

11. சாப்பிடும் முன்பு சிறிது நடந்துவிட்டு பின்பு சாப்பிடவும். இரவு சாப்பிட்ட பின், நடப்பது நலம்.

12. சாப்பிட வேண்டிய நேரம்...
காலை - 7 to 9 மணிக்குள்
மதியம் - 1 to 3 மணிக்குள்
இரவு - 7 to 9 மணிக்குள்

13. சாப்பிட்டு 2 மணி நேரம் கழித்து தான் தூங்க வேண்டும்.

14. சாப்பிடும் முன்பும் பின்பும் இறைவனுக்கு நன்றி சொல்ல மறக்காதீர்கள்.

அமருங்கள் சம்மணமிட்டு...
சாப்பிடுங்கள் முறையாக...
வாழுங்கள் ஆரோக்கியமாக!...

## இருப்பது பேரின்பமன்றோ!

பொட்டுவைத்த பூமுகத்தைத் தேடுகிறேன்
புன்சிரிப்பை மறுபடியும் எண்ணுகிறேன்
கட்டழகு உடலமைப்பை காணவில்லை
கையெல்லாம் நடுங்குவதைக் காணுகின்றேன்
சிரித்துநின்ற செவ்வாயை தேடுகிறேன்
சிவப்புநிறம் கறுப்பாகி நிற்குதங்கே
என்றாலும் அவளேயென் இணையேயாவாள்
இருக்கும்வரை அவளைத்தான் சொர்க்கமென்பேன்!



கருங்கூந்தல் அவளிடத்தில் காணவில்லை
கண்கூட ஒளிமங்கி வெகுநாளாச்சு
முத்துபோன்ற பல்வரிசை எங்கேபோச்சோ
மூச்சுவிட அவளிப்போ முனுகுகின்றாள்
சுவையாக உணவளித்த அவளின்கைகள்
சுவைப்பதற்கே முடியாமல் ஆகிப்போச்சு
அவள்வாயில் ஊட்டிவிடும் ஆசைகொண்டேன்
அதுவேயென் வாழ்வில் பேரின்பமாச்சு!

ஓடியாடித் திருந்தஅவள் ஓய்ந்தேவிட்டாள்
உதவிக்கு வருவார்கள் யாருமில்லை
தேடித்தேடி நான்கண்ட தேவியிப்போ
செய்திகேட்கும் செவிப்புலனை இழந்தேவிட்டாள்
வாடிவிட்ட நிலையினிலும் வடிவாயுள்ளாள்
வயிறார உண்பதற்கு இயலாதுள்ளாள்
என்றாலும் உணவதனை ஊட்டும்போது
என்வாழ்வு இனிக்குதென்று எண்ணுகின்றேன்!

பிள்ளைகளோ எம்மைவிட்டுப் பிரிந்தேவிட்டார்
தொல்லைகளே என்றுவெண்ணி தூரவுள்ளார்
நல்லபிள்ளை என்றேநாம் வளர்த்தேவிட்டோம்
நட்டத்தை எங்களுக்கே தந்தேவிட்டார்
அல்லல்தரும் வயோதிபத்தை அடைந்தேவிட்டோம்
ஆனாலும் அருகருகே இருக்கின்றோமே
எல்லையிலா துன்பமெமை இறுக்கிட்டாலும்
இணைபிரியா இருப்பது பேரின்பமன்றோ!



எம். ஜெயராமசர்மா
மெல்பேண் அவுஸ்திரேலியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழி ஸ்ரீபன் ஹொவ்க்கிங் வாழி தமிழ்போல் வாழி!

சுழலும் சக்கரம் பூமியில்
சுழன்றது சக்கரம் சாமி!
சுட்டும் விழிகள் அறியும்
சுட்ட துயரம் தெரியும்!

காலம் கடக்கும் ஹொவ்க்கிங்கை
காலன் கடத்திச் சென்றான்
என்னே கொடுமை நிலத்தில்?
எமனே இரக்கம் அற்றாய்!

அண்டம் முழுதும் கண்ணீர்
அறிஞர், ஆய்வர் கண்ணீர்


நம்மைத் தேடும் முயற்சி
நன்று வேண்டும் நமக்கு
நம்மை மீறி ஒருவன்
நம்மை ஆளும் இறைவன்

அண்டம் முழுதும் கண்ணீர்
அறிஞர், ஆய்வர் கண்ணீர்!

நம்பு எதையும் நம்பு
நன்கு உணர்ந்து நம்பு
கடவுள் துகளும் உண்டு
கையை வைத்தால் துண்டு!

இயற்கை ஒன்றே பெரிது
இயன்றவரை வாழ் இனிது
பருவம் மாறும் இயற்கை
பாரில் கொல்லும் உயிரை

அணுவும் நன்று அல்ல
அதுவும் கொல்லும் அறிக
மனிதப் பெருக்கும் துன்பம்
மனிதம் கொல்லும் தெரிக
மனிதச் செயற்கை கூட
மனிதன் கொல்லும் ஒருநாள்
மனிதச் செருக்கும் கொல்லும்
மனிதம் பழகு இன்றே!



MARCH 01, 2019

அண்டம் முழுதும் கண்ணீர்
அறிஞர், ஆய்வர் கண்ணீர்!

ஐயகோ சக்கர நாற்காலி
சரிந்தது காண்!
அறிவியல் உலகம் இன்று
ஆழ்ந்த துயரில் நிற்பது காண்!

தமிழும் சேர்ந்து அழுகிறது
தரணி எங்கும் நனைக்கிறது
அண்டம் முழுதும் கண்ணீர்
அறிஞர், ஆய்வர் கண்ணீர்!

மீளாத் துன்பம் சூழ்ந்தாலும்
மீண்டு(ம்) வருவோம் புவியினிலே
மாண்டு போகும் மரணம்
நீண்டு வாழும் மானுடம்

வாழி ஸ்ரீபன் ஹாவ்க்கிங்!
வாழி தமிழ் போல் வாழி!

- சுரேஜமீ -

# சித்திதரும் ராத்திரி சிவராத்திரி



சிவனருள் வேண்டித் துதிப்போர்க்கு
சித்திதரும் ராத்திரி சிவராத்திரி
அவனருள் பெற்றிடின் அகிலத்தில்
ஆனந்த வாழ்வுவந் தமைந்துவிடும்!

தவமிருந்தும் கிடைக்காத பெருவாழ்வு
தடையின்றிக் கிடைத்துவிடும் தரணியிலே
தேவருக்கும் மூவருக்கும் அருள்செய்யும்
தென்கைலை நாதனருள் கிட்டிவிடின்!

அன்றொருநாள் கானகத்துறை வேடன்
அவன்பசிபோக்கப் புறப்பட்டான் வேட்டையாட
சென்றானவனும் கானகத்துள் நீண்டதூரம்
செயல்மறந்தான் களைப்புற்றான் பசியினாலே!

பசிதீர்க்க உணவேதும் கிடைக்காமல்
பரிதவித்த வேடனுமோ மனம்நொந்தான்
கசிந்து மனமுருகி மன்றாடிக் கடவுளிடம்
காட்டுமிருகம் கண்ணில்பட வேண்டினான்!

உணவுதேடி அங்கங்கே அலைந்த வேடனவன்
உச்சிப் பொழுது கழிந்து மாலையானதை
உணர்ந்து உறைவிடம் திரும்பும்வேளை
உறுமலொலி கேட்டு அதிர்ந்து போனான்!

காட்டுப்புலி யொன்று கண்ணெதிரே கடுகிவர
கணநேரம் அச்சத்தில் அதிர்ந்து போனான்
ஓட்டமாய் ஓடிப்போய் அருகிருந்த
ஒருபெருமரத்திலேறி ஒளிந்து கொண்டான்!

துரத்திவந்த புலியதுவோ சினங்கொண்டு
துடிப்போடு மரத்தின்கீழ் காத்திருக்க
விரக்தியுடன் வேடனுமோ கிளையமர்ந்து
விழிபிதுங்கப் பார்த்திருந்தான் வியர்த்திருந்தான்!

மாலைமறைந்து இருள்வந்து சூழ்ந்தபின்னும்
மரத்தின்கீழ் உறுமலொலி கேட்டதனால்
காலைபுலருமட்டும் வேடனவன் மரத்தினிலே
கண்விழித்துக் காத்திருந்தான் அச்சமுடன்!

தூக்கத்தைத் தொலைப்பதற்கு ஏதுவழி?
துளிர்த்த பயத்தினைத் கலைப்பதற்கேதுவழி?
ஏக்கமுடன் சிந்தித்த வேடனவன்
ஏற்றதொரு வழியினைக் கண்டுகொண்டான்!

கிளைதனிலமர்ந்து ஒவ்வொரு இலைகளாய்
கிள்ளியெடுத்துக் கீழேபோடத் தொடங்கினான்
களைப்பும் நீங்கிட கவலையும் மறைந்திட
காலைக் கதிரவன் கிழக்கிலே தோன்றினான்!

காலைமலர கண்விழித்திருந்த வேடன்
காட்டுப்புலியைக் காணாது இறங்கினான்கீழே
இலைக்குவி யல்கள்நடுவே சிவலிங்கம்
இருப்பதைக் கண்டு மெய்மறந்தான்!

வில்வமிலைக் குவியல்நடுவில் லிங்கமாக
வீற்றிருந்த பெருமானை வணங்கிவேடன்
நல்லருள் பெற்றநாளே மண்ணில்
நாமெல்லாம் போற்றுகின்ற சிவராத்திரிநன்னாள்!




கவிஞர் புரட்சிபாலன்
வன்கூவர்

# கனடிய முதியவர் காலமானார் (110 வயது)

மொன்றியலில் வாழ்ந்துவந்த கனடிய வயதானவர் - டாக்டர் றொபேட் வியனர் (Dr. Robert Wiener) கடந்த பெப்ரவரி 17, 2019 அன்று மொன்றியலில் காலமானார். உலகில் 600இற்கும் 1000இற்கும் இடைப்பட்ட 110 வயதிற்கு மேற்பட்டவர்கள் (supercentenarian) வாழ்வதாக கணக்கிடப்பட்டுள்ளது. 110 வருடங்களும் 113 நாட்களும் வாழ்ந்த இவர், உலகின் 18ஆவது முதியவராகக் கருதப்படுகின்றார். தனது நீண்ட ஆயுளுக்கு ஒழுங்கான தேகப்பியாசம், மத்திய கிழக்கு உணவு முறை, எப்பொழுதும் நல்லதையே நினைப்பது போன்றவையே முக்கிய காரணம் என்றார். இவர் ஒக்ரோபர் 27, 1908இல் மொன்றியலில் பிறந்தார். 7 சகோதரர்களில் இவரே இளையவராவார். இவருடைய தந்தை லூயிஸ் (போலந்து), தாய் (ரஸ்யா) இலிருந்தும் கனடாவிற்குக் குடிபெயர்ந்தவர்கள். இவர்கள் இருவரும் நெதர்லாந்தில் ஒருவரை ஒருவர் சந்தித்தபின் மொன்றியல், கனடாவிற்கு வந்திருந்தனர்.

வியனர், தனது பல் வைத்தியத்துறையில் கல்வியை மொன்றியல் Mc Gill பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டிருந்தார். இவருடன் 73 வருடங்களாக வாழ்ந்த



மனைவியார் 7 வருடங்களுக்கு முன்பு காலமானார். இவருடைய இரு புதல்வர்கள் ஒருவர் Ken ரொறொன்ரோவிலும் மற்றவர் Neil மொன்றியலிலும் வாழ்கின்றனர். மூன்று பெண் பேரப்பிள்ளைகளும், இரண்டு பூட்டப் பிள்ளைகளும் இவருடைய வம்சாவழியாக இப்பொழுதும் உள்ளனர்.

TUTORING
KEEN TUTORING CENTRE
By Qualified & Experienced Tutors
➢ CHEMISTRY, PHYSICS, BIOLOGY
➢ FUNCTIONS, ADV. FUNCTIONS
➢ CALCULUS & VECTORS, DATA MGT
➢ SCIENCE, MATH, ENGLISH
உங்கள் கல்விக்கான சிறந்த தெரிவு
GR 9-12, UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"
Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com
✓ High School ACADEMIC/UNIVERSITY
✓ IB & AP PROGRAMME
✓ MCAT Classes
✓ EQAO GR 3 & 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நகைச்சுவைத் தொடர் 392

# ராசம்மா ராச்சியம்

கூலகலப்பு நீசன்




ஸ்ரீதேவி இறந்து ஒரு வருட நினைவு தினம். அவரது சாறி ஏலம் விடப்பட்டது. 40 லட்சத்தில் தொடங்கிய ஏலம் 130 லட்சத்தில் முடிவடைந்தது.




இந்தச்செய்தியை மிக அழுத்தமாக வாசித்துவிட்டு கூகிள் கோகிலா வாசித்துக் கொண்டிருக்கும்போதே ஐபொட் அகிலாண்டேஸ்வரி... செக்கண்ட்புளோர் செல்லாம்மாவை பார்க்க... செக்கண்ட் புளோர் செல்லம்மா ஆட்டிலறி அன்னம்மாவைப் பார்க்க...

அமைதியாகப் பார்த்துக்கொண்டிருந்த ராசம்மாவுக்கு மட்டும் அர்த்தம் புரிந்தது. செக்கண்ட்புளோர் செல்லம்மா கட்டியிருந்தது... குஸ்பு சாறி. (பிரபு குஸ்பு நடித்த சின்னத்தம்பி) ஒரு காலத்தில் குஸ்பு சாறி குஸ்பு சாறி குஸ்பு சிகை அலங்காரம் பிரபலமாகியிருந்தது. இப்போ குஸ்புவிற்கும் சாறிக்கும் வயது போய்கொண்டேயிருக்கிறது. இதற்கிடையில் குஸ்பு இட்டலி கூட விற்பனையில் உள்ளது.



யானை செத்தாலும் ஆயிரம் பொன் என்பர். ஸ்ரீதேவி இறந்தபின்னும் அவரது குடும்பத்தினருக்கு அவர் ஒரு பொன்முட்டையிடும் வாத்து தான். ஆனால் அவர் பட்ட கஸ்டம் கவலை ஒருவருக்கும் தெரியாது. இப்போ அவரது ஓராண்டு நினைவாஞ்சலி. ஆனால் மரணம் சந்தேகமான முறையில்தான் உள்ளது.



'ஹேய்... கோலி சோடாவே... என் கறி குழம்பே...' என்ற பாடலை முணு முணுத்தபடி ரூபி வர... ரூபியை பார்க்க சர்க்கார் படத்தில் சரத்குமார் வரலட்சுமி வந்த மாதிரியிருக்கு என செக்கண்ட் புளோர் செல்லம்மா சொல்ல...

உப்பிடி சாறியில் கீர்த்தி சுரேஸ் ஒரு விளம்பரத்துக்கு வாறவ என்று ஆட்டிலறி அன்னம்மா சொல்ல...உலகரும் ராசம்மாவும் ஒரே பார்வையில் ரூபியை பார்த்தனர். ரூபிக்கு பெருமையாகவும் வெக்கமாகவும் இருந்தது. இது ரூபன் வலன்ரைன் டேக்கு வாங்கித்தந்தது. மற்ற சாறி பமிலி டேக்கு வாங்கித் தந்தது.




உலகரும் ராசம்மாவும் மனதுக்குள் சிரித்துக்கொண்டனர். அவர்களுக்கு வாங்கிகொடுத்த வேட்டியும் சாறியும் மடிப்புக்கலையாமல் இருக்கிறது. இந்தக்குளிருக்குள் எங்கு கட்டிக்கொண்டு போவது? இத்தனை அமளிக்குள்ளும் வட்ஸ்அப் வரதன் தனது (சம்பளமில்லாத) பிஸி வேலையில் கவனமாக இருந்தார்.



உலகண்ணை இந்திய விமானப்படை பாகிஸ்தான் காஸ்மீர் எல்லையில் தாக்குதல் நடத்தியிருக்கு. கனக்க தீவிரவாதிகளின் முகாம்களை அழிச்சிருக்கினம்... என்று சொல்லிக் கொண்டிருக்கும்பொழுது... கூகிள் கோகிலா... அதுக்கு முதல் பாகிஸ்தான் காரர் இந்திய போடரிலை அற்றாக்பண்ணி 49 இந்திய ராணுவத்தினர் இறந்தவையெல்லோ... அதுதான் என தனது அரசியல் அலசலை சொல்லும்போது... அகிலாண்டேஸ்வரி தனது... இந்திய ரூர்... குறுாப்போடை டில்லிக்கு போற வக்கேசனை கான்சல்பண்ண ரெலிபோன் ட்றை பண்ணிக்கொண்டிருந்தா.

ஞாபகம் இருக்கிறதா? மார்ச் 1......15




1. சுவிற்சலாந்தில் பிரபல நகைச்சுவை நடிகர் சார்லி சாப்பிளின் கல்லறையிலிருந்து அவரது உடல் திருடப்பட்டது.



1. மார்ச் எம்.கே. தியாகராஜ பாகவதர் நினைவு தினம் 1981 (மன்மத லீலையை வென்றார் உண்டோ... சொப்பன வாழ்வில் மகிழ்ந்தேன்.

2. விவியன் நமசிவாயம் பிறந்தநாள். இலங்கை வானொலி ஒலிபரப்பாளர், நிகழ்ச்சி தயாரிப்பாளர் (1921-1988), விவேகச்சக்கரம், விண்வெளி விநோதம், விவசாய நேயர்விருப்பம் போன்ற நிகழ்ச்சிகளை நடத்தியவர்.



2. நா.சிவலிங்கம் நினைவுதினம் (2010) றிச்மன்ட் ஹில் இந்துஆலய வளர்ச்சியில் ஆரம்ப காலத்திலிருந்து அதன் வளர்ச்சியில் இறுதிவரை பங்குகொண்டவர்.

2. குன்னக்குடி வைத்திய நாதன் வயலின் இசைக்கலைஞர் பிறந்ததினம். (1935-2008)



3. அலெக்சாண்டர் கிரகாம் பெல் தொலைபேசியைக் கண்டுபிடித்தவர் பிறந்ததினம். (1847-1922) (அவரது தாயாரும் மனைவியும் செவிப் புலனற்றவர்கள் அதுவும் இவரின் ஆய்வுக்கு காரணம் எனக் கூறுகிறார்கள் பிறந்தது பிரிட்டன் வாழ்ந்தது கனடா.

3. சிரித்திரன் ஆசிரியர் யாழ். கரவெட்டி சிவஞான சுந்தரம் நினைவுதினம் (1996) சவாரித்தம்பர் (சுந்தர்) வீரகேசரியில் மித்திரன் பத்திரிகைகளில் இவரது கேலிச்சித்திரங்கள் பிரபலமானவை...





4. சிவராத்திரி

7. ஆசுகவி ஈழத்து எழுத்தாளர் கல்லடி வேலுப்பிள்ளை நினைவுதினம் (1860-1944)




8. ஐக்கியநாடுகள் அனைத்துலக மகளிர் தினம் (1945இல் கனடாவில் கொண்டாடப்பட்டது)




8. சுத்தானந்த பாரதியார் நினைவுதினம். கவிஞர் தமிழிசை பாடலாசிரியர் (1897-1990)

8. அ.குமாரசாமிப புலவர் ஈழத்துப்புலவர் (1854-1922)




8. ஜே.பி.சந்திரபாபு தமிழக திரைப்பட பாடகர் நடிகர் (1924-1974)

9. நேர மாற்றம்



10. 1876இல் அலெக்சான்டர் கிரகாம் பெல் உலகின் முதலாவது தொலைபேசி அழைப்பை மேற்கொண்டார்.



11. 1902ல் காங்கேசன்துறையிலிருந்து சாவகச்சேரிவரை 21 மைல்நீள புகையிரதப்பாதை போடப்பட்டது. 1905இல் மதவாச்சிவரை நீடிக்கப்பட்டது.

14. உலக சிறுநீரக நாள்.

# புன்னகை!



கழுத்தில் நகை போடலாம்
கையில் நகை போடலாம்
கண்ட இடத்தில் எல்லாம்
காசால் நகை போடலாம்
எங்கு நகை போட்டாலும்
புன்நகையே பெரும் நகையே
பொன் நகையை புறந்தள்ளி
புன் நகையே முன்னிற்கும்!

பட்டம் பல பெற்றிடுவார்
பதவி பல வகித்திடுவார்
திட்டம் போட்டுச் சொத்துக்களை
சேர்த்து நிற்பார் பலவழியில்
எத்தனைதான் பெற்றும் அவர்
புன்நகையை இழந்து நின்றால்
மொத்த உள்ள அவர்வாழ்வு
முழுமை அற்றே போகுமன்றோ!

சேதாரமில்லை செலவழிப்பு ஏதுமில்லை
ஆதாயம் என்று எண்ணி
அதிக பணம் இதற்குவேண்டாம்
நாள் முழுக்க உழைத்தாலும்
நல்ல சொத்துச் சேர்த்தாலும்
ஆள் முகத்தில் புன்னகையே
அவர் சொத்தாய் ஆகுமன்றோ!

பிரசங்கம் பல செய்வார்
பிறர் பார்க்கப் புன்னகையார்
அறம் பற்றி பலவற்றை
அடுக்கடுக்காய் எடுத்து உரைப்பார்
முகம் தன்னைக் கடுகடுப்பாய்
நாள் முழுக்க வைத்திருப்பார்
நிலமீது இவர் வாழ்வு
நிறைவாக இருக்க மாட்டா!

என்ன நகை போட்டாலும்
எம் அழகைக் காட்டுதற்கு
புன் நகையை விட்டுவிட்டால்
பொருந்தும் நகை ஏதுமுண்டா
நல்ல நகை புன்னகையை நாம் என்றும் வைத்திருந்தால்
நாம் வாழும் வாழ்வெமக்கு
நன்றாக அமையும் அன்றோ!



எம். ஜெயராமசர்மா
மெல்பேண் அவுஸ்திரேலியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பெண் சம்யுக்தா

“திருமணம்தான் நம்ம சுதந்திரத்துக்கு முடிவு” என்று பலரும் புலம்பிக்கொண்டிருக்கும்போது, சர்வதேச திருமதி அழகிப் போட்டிக்குத் தேர்வாகி, பல தமிழ்நாட்டுப் பெண்களுக்கு ரோல்மாடலாகியிருக்கிறார் கோயம்புத்தூரைச் சேர்ந்த சம்யுக்தா பிரேம் (Shamyuktha Prem). 2018ஆம் ஆண்டு நடைபெற்ற சர்வதேசப்போட்டியில் வெற்றி பெற்று, `Mrs. India Universe Globe' பட்டத்தைத் தட்டிச் சென்றிருக்கிறார். தமிழ்நாட்டிலிருந்து சர்வதேச திருமதி அழகிப் போட்டியில் பங்குபற்றிய ஒரே தமிழ்ப் பெண்ணான சம்யுக்தாவிடம் சிறு உரையாடல்.

எதனால இந்தப் போட்டியில கலந்துக்க நினைச்சீங்க?

நான் படிச்சதெல்லாம் ஃபேஷன் சம்பந்தமான படிப்புதான். படிச்சு முடிச்சு, லண்டனில் சர்வதேச பிராண்டான “பிராடா” (prada)வோடு இணைந்து வேலை செஞ்சேன். அதுக்கு அப்புறம் கல்யாணமாகி இல்லத்தரசியாத்தான் இருந்தேன். ஏற்கெனவே ஃபேஷன் ஃபீல்டுல இருந்தப்போ அழகிப் போட்டிகள்ல பங்கேற்க ரொம்ப ஆசையா இருக்கும். ஆனா, அப்போ அதற்கான வேலைகள்ல நான் தீவிரமா இல்லை. அந்த ஆசையை என் கணவரிடம் சொன்னபோது, “இப்போ வரப்போற திருமதி போட்டியில அவசியம் நீ கலந்துக்கணும்”னு ஊக்கப்படுத்தினாரு. அவரோட சப்போர்ட் இல்லாம நான் இந்த அளவுக்கு வந்திருக்க முடியாது. இதுமாதிரி சப்போர்ட் கிடைச்சுதுன்னா நிறைய பெண்கள் அவங்களோட கனவுகளை நனவாக்க முடியும்.”

இல்லத்தரசியா இந்த மாதிரி போட்டிகள்ல கலந்துகொள்வதில் இருக்கும் சவால்கள் என்னென்ன?



இதில் மிகப்பெரிய சவாலே உடல் எடைதான். திருமணமாகி விட்டால் உடல் எடை கூடும். ஆனா, இதுபோல போட்டிகளுக்குக் கட்டுக்கோப்பான உடலமைப்பு ரொம்பவே அவசியம். நான் திருமணத்துக்குப் பிறகு 90 கிலோ இருந்தேன். கடுமையான உடற்பயிற்சி மற்றும் உணவுப்பழக்கத்தால் இப்போது 60 கிலோ இருக்கேன். கடுமைராள திட்டமிடல் இல்லையென்றால் இப்படி குறைச்சிருக்கவே முடியாது. என்னுடைய passion மேல் நான் வைத்திருந்த அன்பு கூட இதுக்கு ஒரு காரணம். அப்புறம் குடும்பத்தாரின் ஆதரவு ரொம்பவே முக்கியம். அவங்களோட ஊக்குவிப்பு இல்லைன்னாலும் ரொம்பவே கஷ்டம். அந்த வகையிலயும் நான் ரொம்ப அதிஷ்டசாலி என் கணவர், அம்மா, அப்பா எல்லோருக்கும் நன்றி.

இந்த ஃபேஷன் பயணத்தில் நீங்க கத்துக்கிட்ட விடயங்கள் என்னென்ன?

என் வாழ்நாள் முழுக்க இந்தப் பயணத்தை மறக்கவே முடியாது. புதுப்புது விஷயங்கள் நிறைய கத்துக்கிட்டேன். வெவ்வேறு கலாசாரத்திலிருந்து வந்தவர்களைச் சந்திக்க நல்ல வாய்ப்பா இருந்துச்சு. சைக்காலஜிஸ்ட், ஸ்டைலிஸ்ட், Choreographers-னு நிறைய சாதித்த மனிதர்களைச் சந்திச்சது ரொம்ப நல்ல அனுபவமா இருந்துச்சு. வேலைகளைப் பார்த்துட்டு, குடும்பத்தையும் எப்படிக் கவனிச்சுக்கிறது, நம்ம உடம்பை எப்படி ஆரோக்கியமா வெச்சுக்கிறதுனு வாழ்க்கையை மேம்படுத்துற வழிமுறைகளையும் சொல்லிக்கொடுத்தாங்க. மொத்தத்துல கலர்ஃபுல்லா மட்டுமல்லாம பயனுள்ள நாள்களாவும் இந்தப் பயணம் எனக்கு இருந்துச்சு.”

ஃபேஷன் உலகில், தமிழ்ப் பெண்கள் எப்படி ஏற்கப்படுகிறார்கள்?

“ஃபேஷன் இண்டஸ்ட்ரினாலே தமிழ்ப் பெண்களுக்கு ஆகாது. அதுவும் திருமணமான பெண்கள் நினைச்சுக்கூட பார்க்கக் கூடாதுனு நிறைய பேர் சொல்லிட்டு இருக்காங்க. என்னைப் பொறுத்தவரைக்கும் அதுபோல எந்த ஒரு பாகுபாடும் யாரும் பார்க்கிறதில்லை. அங்க இருக்கும் மக்கள் எல்லோருமே ரொம்ப ஃப்ரெண்ட்லி. நாம எப்படிப் பழகுறோமோ அதைப்பொறுத்துதான் மத்தவங்க நம்மகிட்ட பழகுறதும் இருக்கும். நம்மமேல நம்பிக்கை வெச்சு, நாம் தன்னம்பிக்கையுடன் இருந்தா, நமக்கு மேல இங்க யாரும் இல்லை.”

உங்களோட இன்ஸ்பிரேஷன் யார்?

2016ஆம் ஆண்டு, `Mrs. India Earth Classic' பட்டம் பெற்ற டாக்டர். ஜெயா மகேஷ். அவங்களும் கோயம்புத்தூர் பொண்ணு தான்.

உங்கள் லட்சியம்?

ஏற்கெனவே பெண் குழந்தைகளின் படிப்புக்காகத் தொண்டுப் பணியில் இருக்கேன். சர்வதேசப் போட்டியில் வெற்றி பெற்றால், அதையே கொஞ்சம் பெரிய அளவில் என்னால் செய்ய முடியும்.

## பெண்குலத்தின் புகழ்பாடி வாழ்த்துவோமே!

இல்லத்தில் விளக்கேற்றி ஒளியுமூட்டி
இனியகலை யழகொன்றாய் நிலைநிறுத்தி
செல்வத்தின் சீர்பெருக்கிச் சேர்த்துவைத்து
செழுங்கருணைப் பண்பினிலே சிறப்புவிஞ்ச
வல்வினையோ டணைகின்ற தலைவன் தன்னை
வாஞ்சையுட ரைவணைத்தே அன்புக்கேங்கும்
மெல்லியலின் மேன்மையுறு பெண்மையினால்
சிறந்துயரு மவர்புகழை வாழ்த்துவோமே

உலகினையே தாங்குகின்ற வல்லமையால்
உன்னதமாம் தாய்மையினி லரும்புகின்ற
தலைசிறந்த மக்களையே யீன்றுநல்கி
நன்மைக்கு வித்தாகு மறிவுமோங்க
கலைகளொடு சீரிய நற் பண்புதன்னை
கவினுறவே பிறர்நயக்கப் படைத்தளிக்கும்
குலமகளிர் பூவினுறை தெய்வமவர்
தாள்பணிந்து புகழ்பாடி வாழ்த்துவோமே




தற்காத்துத் தற்கொண்டான் பேணும்பண்பில்
தன்னகரி ல்லாததொரு தெய்வமாக
சொற்காத்துச் சோர்விலாது கொண்டவன்தன்
சோர்வகற்றிக் கருணைமழை பொழிந்து ஓம்பி
நற்றவத்தினாலுயரு மருள் வளர்த்து
நன்னயமாய் இல்லத்துக்கு ஒளியுமேற்றி
வெற்பெனவே கற்புநிலை பேணுகின்ற
பெண்குலத்தின் புகழ்பாடி வாழத்துவோமே

அழகினொடு பல்கலையும் கற்றுத்தேறி
ஆசையுட னன்னைமடி மீதிருந்து
மழலையுதிர் மக்களை யரவணைத்து
மனங்குழைந்தே யுறவாடி யறிவை யூட்டி
செழித்தமுக வசீகரத்தாற் கவருகின்ற
சேயிழைக்கு நிகரான செல்வமேது
வளமான வாழ்வளிக்கும் பெண்குலத்தின்
மகத்துவத்தின் புகழ்பாடி வாழ்த்துவோமே

கஞ்சிக்கு வழியற்றுத் தவிக்கும் சீவன்
கால்கடுக்க ஊர்முழுதும் சுற்றிவந்து
கெஞ்சித்தன் குரலெழுப்பி ‘அம்மா’வென்றே
அழைத்தொருகால் கண்ணீரோடிரந்துநின்றால்
வஞ்சிக்கா துள்ளபொருள் பாகம் பண்ணி
வந்தவுரு மனங்குளிர வழங்கியதன்
சஞ்சலங்கள் நீக்குகின்ற பெண்குலத்தின்
உள்ளத்துறை கருணையினை வாழ்த்துவோமே!

- மாரீசன் -

## பெண்களே மனிதகுலத்தின் கண்கள்!

பெண்களின் பெருமை யாவும்
பேசுதல் எளிதோயிங்கு? இரு
கண்களை மூடிக்கொண்டால் இந்தக்
காசினி தெரியுமாமோ? என்றும்
பெண்களே மனிதகுலத்தின் கண்கள்
பிறிதுளோர் தீக்காயமுள்ள புண்கள்
புண்ணியம் செய்தோரன்றோ உலகில்
பூவையராய் பிறப்பார் அறிவீர்!



வம்சத்தை விருத்தி செய்தல்
வாய்ருசிக்க சமையல் செய்தல்
தெம்பாகக் குடும்பம் காத்தல்
தெருவுக்கு வாராதிருத்தல் இவைதான்
அம்சமுள்ள பெண்ணுக் கழகென
அடிமை வாழ்வுக்கு அத்திவாரமிட்டு
வீம்புடன் கொடுமை செய்தகொடிய
வீணர்கள் வீழ்ந்தார் மண்ணில்!

பாரதி பாடிவைத்த பைந்தமிழ்
பாடல்கள் படித்த பின்னால்
வீரமும் விழிப்பும் கொண்டு
வீட்டின் கதவுகள் திறந்ததிங்கே
தாரமாய் வாழ்ந்தோர் தாமும்
தடையின்றிக் கற்றார் கல்வி
பாரமாய் எண்ணாது வாழ்வை
பாங்குடன் நிமிர்த்திக் கொண்டார்!

பெண்களே இல்லாத் தொழில்கள்
பெயர் தெரிந்தால் சொல்லிப்பாரும்
ஆண்களுக்கு நிகராய் உலகில்
அனைத்துத் துறையிலும் பெண்கள்
தூண்களைப் போலும் வலிமை
துணிவினைக் கொண்ட நெஞ்சம்
கண்பட்டுப் போகும் இவர்கள்
காட்டிடும் திறமை காணின்!

கடையிலும் கணினியிலும் கண்ணியமான
காவல் துறையிலும் நாடு காக்கும்
படையிலும் பள்ளியிலும் பயணம்செய்யும்
பஸ்ஸிலும் பறக்கும் விமானத்திலும்
தடையின்றி விண்ணேறும் விண்கலத்திலும்
தாயாக தாரமாக தங்கையாக
நடைபயின்று வாழ்திருந்த பெண்கள்
நலம் விளைய நற்பணிசெய்தல் கண்டோம்!

கவிஞர் புரட்சிபாலன்
வன்கூவர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படித்ததில் பிடித்தது



நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே.
அனுப்புங்கள் Vlambaram@sympatio.ca
யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

# "சங்கடங்களை போக்க சம்மணமிடு"

**- பிரபா -**

நாம் பொதுவாக எப்பொழுதும் காலை தொங்கவைத்து அதிகமாக அமர்ந்திருக்கிறோம்.

இரண்டு சக்கர வாகனத்தில் பயணிக்கும் பொழுது, பேரூந்தில், இரயில் வண்டிகளில், சினிமா தியேட்டரில், பள்ளிகளில், அலுவலகங்களில், வீடுகளில், சோபாக்களில், கட்டில், நாற்காலி இப்படி நன்றாக யோசித்துப் பார்த்தால் நாம் அதிகநேரமாக காலைத் தொங்க வைத்துக்கொண்டே இருக்கிறோம். இப்படிக் காலைத் தொங்க வைத்து அமர்வதால் நமக்குப் பல உடல் உபாதைகள் உருவாகின்றன. இதற்குக் காரணம் என்னவென்றால் காலைத் தொங்க வைத்து அமரும்பொழுது, நமது உடலில் இரத்த ஓட்டம் இடுப்பிற்குக் கீழ்ப்பகுதியில் மட்டுமே அதிகமாக செல்கிறது.

நாம் காலை மடக்கி சம்மணம் போட்டு அமரும்பொழுது இடுப்புக்கு மேலே இரத்த ஓட்டம் அதிகமாக வருவதற்கு வாய்ப்பு உள்ளது. நமது உடலில் இடுப்புக்கு கீழே உள்ள கால்களுக்கு நடக்கும்பொழுது மட்டும் இரத்த ஓட்டம் சென்றால் போதும். மிக முக்கியமான உறுப்புகளாகிய சிறு நீரகம், கணையம், நுரையீரல், மூளை, கண், காது ஆகியவை இடுப்புக்கு மேல்ப் பகுதியில்தான் இருக்கிறது. எனவே ஒருவர் காலை தொங்கப்போடாமல் சம்மணங்கால் போட்டு அமர்ந்திருந்தால் அவருக்கு சக்தியும், ஆரோக்கியமும் அதிகமாக கிடைக்கிறது. எனவே, சாப்பிடும் பொழுதாவது கீழே உட்கார்ந்து காலை மடக்கி அமர்ந்து தான் சாப்பிட வேண்டும். ஏனென்றால், இடுப்புக்கு கீழே இரத்த ஓட்டம் செல்லாமல் முழு சக்தியும் வயிற்றுப் பகுதிக்குச் செல்லும்பொழுது நமக்கு ஜீரணம் நன்றாக நடைபெறுகிறது.

சாப்பிடும்பொழுது காலைத் தொங்க வைத்து நாற்காலியில் அமர்வதனால் இரத்த ஓட்டம் வயிற்றுப் பகுதிக்குச் செல்லாமல் காலுக்கே அதிகமாக செல்கிறது. இந்திய வகை கழிவறைக்கு செல்லும்போது மட்டும்தான் காலை மடக்கி அமர்கிறோம். ஐரோப்பியன் கழிவறையில் அமரும் பொழுது குடலுக்கு அதிக அளவு அழுத்தம் கொடுத்தால் மட்டுமே கழிவு வெளியேறும், அதனால்தான் இப்பொழுது சிறு குழந்தைகள் கூட ஐரோப்பியன் வகை



யினை பயன்படுத்துவதால் அவர்களால் தரையில் சுக ஆசனத்தில் அமர்வதற்கு முடியாமல் தவிக்கிறார்கள்.

உங்களால் சம்மணங்கால் போட்டுக்கூட தரையில் உட்கார முடியவில்லை என்றால் இந்த உடம்பை எந்த அளவிற்கு கெடுத்து வைத்திருக்கிறீர்கள் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். எனவே முடிந்தவரை கால்களை தொங்கவைத்து அமர்வதை தவிருங்கள். ஐரோப்பியன் வகை கழிவறைகளை தவிருங்கள். கட்டிலிலோ, ஷோபாவிலோ அமரும்பொழுது சம்மணம் இட்டே அமருங்கள்.

சாப்பிடும் பொழுது தரையில் ஏதாவது ஒரு விரிப்பை விரித்து அதன்மேல் சம்மணங் கால் போட்டு அமர்ந்து சாப்பிட்டால் சாப்பாடு நன்றாக ஜீரணிக்கும். சில வீடுகளில் அதற்கு வாய்ப்பில்லை என்று இருந்தால் டைனிங் டேபிளில் காலை மடக்கி வைத்து அமர்ந்து சாப்பிட்டுக் கொள்ளுங்கள்.

சாப்பிடும் முறை...!

1. நின்று கொண்டு சாப்பிடும் பழக்கத்தை மாற்றி. குடும்பத்துடன் அமர்ந்து ஒன்றாய் சாப்பிடுங்கள்.

2. எந்த வகை சாப்பாடாக இருந்தாலும் நன்றாக மென்று, கூழாக்கி சாப்பிடுங்கள்.

3. பேசிக் கொண்டு, தொலைக்காட்சி, புத்தகம் பார்த்து கொண்டே சாப்பிட கூடாது.

4. சாப்பிடும் பொழுது இடையில் தேவையில்லாமல் தண்ணீர் குடிக்காதிங்க. கடைசியில் தண்ணீர் குடிக்க மறக்காதீங்க. போதிய அளவில் தண்ணீர் பருகுங்கள்...

(தொடர்ச்சி 38ஆம் பக்கம்...)








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FOR ALL YOUR MORTGAGE NEEDS

Access over 30 lenders with one application

**Refinance** **Purchase** **Renewal**

*Dedicated and knowledgable team...*
*Provide you with the best solutions for 1st and 2nd Mortgage...*
*Our commitment to you is to provide with the very best...*

1st Mortgage starting 6.50%* for Private
2nd Mortgage starting 9.99%* for Private
Approval funded within 48 hours*








**Pradeepraj Mani**
Mortgage Agent
LIC# M14001956
**416.997.3862**
np_57@hotmail.com

*Some conditions apply


MORTGAGE ALLIANCE

**Gaya Kathir**
Mortgage Agent
LIC# M13001852 FSCO #10530
**416.806.2274**
gayamortgage@hotmail.com
www.mortgageagencytoronto.ca




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org